ஓம் பரப்ரஹ்மணே நம !

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலாவிலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“ எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். ” (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED

கமலம்-5.	சென்னை : பிரமோதூதவருஷம் ஆடிமீ 1உ	இதழ்-52.
Vol. 5.	1930-ம்வருஷம் ஜூலைமீ 16உ	No. 52.



கனியருந்த மாட்டாமல் காயருந்து றுய்மனமே
கனிருசிபோ லாகுமோ காய்தான்—யினியதுகேள்
நானும் நீயும் கனிகாண் நடுவிருந்தே ருசிகாண்
தேனும் பாலும்போல சிவன்.

“பார்த்தவிடமெல்லாம் பரமனேன் றிருமனமே” ஸர்வ மங்கள மூர்த்தியாகிய ஸாக்ஷாத் பரமேசுவரனை ஸதா தியானிக்கக்கடவோம். அவரே ஜெகத் காரணர். அவரே நம்மைக் காப்பாற்ற வல்லவர். நாம் கண்ணீருடன் கலங்குங்காலைக் கவனிப்பவர் அவரே. எவர் இருப்பினும் விலகினும் அவர் தந்த தைரியம் நமக்கு என்று முண்டு. அவரே நமது அபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொடுப்பவர். அநாதரக்ஷகர் என்ற பொறுப்பை நாம் அவருக்குக் கொடுத்திருக்கிறோம். ஜீவகோடிகளை அநுதினமும் காப்பாற்றிவரும் ஆதிநாதனை நாம் பக்திபூர்வமாக வணங்குவோம்.

ஃ

“ஞானம் எல்லாவற்றிலும் பிரதானம்” ஞான மில்லாமல் எவ்வித சுகத்தையும் அடைய முடியாது. ஒரு பாஷையினால் ஞானமிருந்தாலன்றி அதிலுள்ள கிரந்தங்களைப் படித்துச் சந்தோஷிக்க முடியுமா? வீணைமுதலிய வாத்தியங்களை வாசிக்கத் தெரிந்தாலன்றி அவற்றால் உண்டாகும் சுகத்தை யடைவ தெப்படி? இப்படியே ஆத்மாவைப்பற்றி விசாரித்தறிந்தாலல்லவோ

“ அமிர்த குணபோதினி”யை அடிக்கடி படிப்பதால் மனோசாந்தியும் புத்திப் பிரகாசமும் ஞானவிருத்தியு முண்டாகின்றன.

அதனால் உண்டாகும் ஆநந்தத்தை யனுபவிக்கலாம். அதற்காகத்தான் உபநிஷத்துக ளேற்பட்டிருக்கின்றன. அவற்றின் அர்த்தங்களைப் பெரியோரிடம் தெரிந்து ஸகல தத்துவங்களையும் உணர்ந்து ஞானவந்தனாகவேண்டும். லௌகிக காரியங்களுக்காக நம்முடைய காலத்தின் பெரும்பாகத்தைச் செலவழித்தாலும் சொற்ப நேரத்தையேனும் வேதாந்த நூல்களை வாசிப்பதில் கழிக்கவேண்டும். மகான்களின் அருள்மொழிகள் அர்த்த புஷ்டியுள்ளனவாதலின், அவற்றை ஒருமுறை இருமுறையின்றிப் பலமுறை படிக்கப் படிக்க ஞானம் உதயமாய்ப் பிரகாசித்துக்கொண்டேவரும். மண், பெண், பொன் என்ற மூவாசைகளைத் துறப்பதுடன் கீர்த்தியாசையையும் துறப்பதுதான் விவேகிகளின் கடமை. அதாவது, உலகத்தார் புகழுவதைக் கண்டு ஸந்தோஷிப்பதும், இகழுவதைக் கண்டு வியஸனிப்பதும் தகாதென்பது அதன் பொருள்.

ஃ

"பகவத் தரிசனம் பாவ விமோசனம்" பிரதிதினமும் கோயிலுக்குச் சென்று பகவானைத் தரிசித்துவருவோர் ஸம்ஸாரமாகிய ஸங்கடத்தினின்றும் விடுபடுவர். உலகத்தில் ஜனனமரண துக்கத்தைவிட அதிகமான தொன்றுமில்லை. ஜகத்திலுள்ள பிராணிகளெல்லாம் பிறந்து இறந்துபோவதுடன் அந்தந்த ஜன்மத்திற் செய்த கர்மங்களுக்கேற்ற பலனையும் அடைந் தனுபவித்துவருகிறார்கள். இவ்வித கர்மானுபவங்கள் தொலைந்தாலன்றி நித்யமான சுகம் ஒருபோதும் உண்டாகாது. ஆற்றிலுள்ள ஜலத்தில் அமிழ்ந்து போகாமல் அதைக் கடப்பதற்காகத் தெப்பக் கட்டையை மனுஷ்யர்கள் ஆதாரமாய்க் கொள்வதுபோல், முமுக்ஷுக்கள் பிறவிக்கடலைக் கடக்குமாறு பகவானுடைய பாதங்களைத் துணையாகக் கொள்கின்றனர். மகரிஷிகளெல்லாம் பகவானை ஸ்தோத்தரித்துப் பிறவிப்பிணியைத் தீர்த்துக்கொண்டதுபோல் நாமும் ஸதா இறைவனைத் தியானித்து உய்யக்கடவோம்.

ஃ

"ஸ்வயநலப் பிரியம்" ஸ்வய நன்மையைக் கோருவது அத்தனை பாவமல்ல. தன்னைப்பற்றிக் கவனியாததே பெரும் பாவம். உலகத்தில் பிறருக்குத் தீமை யிழைத்துத் தனக்கு நன்மையைச் செய்துகொள்வோனையே ஸ்வயநலப்பிரியன் என்கிறார்கள். பிறருக்குத் தீங்கை விளைக்காமல் தனக்கு நன்மையைத் தேடிக்கொள்வோன் புண்யவானே யாவான். தன்னைப்பற்றிக் கவனியாமல் மனதைக் கண்ட இடங்களில் அலையவிடுவோன் வழிபிசகிப் பாவ மார்க்கத்திலேயே சென்று பதங் கெடுவான்.

ஃ

"சிவச்செயல் எது? சீவச்செயல் எது?" இது ஒரு கேள்வி. இதற்கு ஸமாதானம் கூறுவோம். கர்மம் செய்வது ஸர்வ பிராணிகட்கும் இயற்கையாயமைந்துளது. ஒரு நிமிஷ நேரமும் மனுஷ்யன் சும்மாயிருக்க ஸாத்தியப்படாது. தலையை அசைப்பது ஒரு கர்மம்; தும்முவது, மூச்சுவிடுவது, ஏதேனும் ஒன்றை நினைப்பது ஆகிய எல்லாம் கர்மங்களே. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகாரணங்களாலும் செய்யப்படும் சகல கருமங்களுக்கும் பல

பிறரது மயக்கத்தினின்றும் எவ்விதமோ விழித்துக்கொண்டால், அவனை மயக்க வந்தவனுக்கு அவன்மேல் கனத்த கோபம் உண்டாய்விடுகிறது.

னுண்டு. அதை யனுபவிக்காமலிருக்க யாராலும் ஸாத்தியப்படாது. ஆதலின், ஜீவன் தான் செய்யும் கருமத்திற்குத் தக்க பலனை யனுபவித்தே தீரவேண்டும். நற்கருமத்தைச் செய்தவர் நன்மையையும், துர்கருமத்தைச் செய்தவர் துன்மையையும் அனுபவிப்ப ரென்பது நிச்சயம். இவ்வாறு அனுபவிக்கும் போது திடீரென்று மரணம் நேருவதும், கருமத்தின் சேஷத்தை (மிச்சத்தை) அடுத்த ஜென்மத்தில் அனுபவிப்பதும் வழக்கம். இந்த ஜன்மத்தில் செய்யப் படும் கர்மங்களை அல்லது அவற்றால் உண்டாகும் பயன்களை ஜீவனுடைய கருமமாகவும், போன ஜன்மத்தில் அனுபவித்து மரணத்தால் தடைபட்டு மீந்திருக்கும் கர்மத்தை அல்லது அதன் பலனை இந்த ஜன்மத்தில் செய்யும் போதும் அடையும்போதும் சிவனுடைய கருமமாகவும் ஜனங்கள் கொள்ளு கின்றனர். எது நம்முடைய விவேகத்தால் முன் ஜாக்கிரதையால் செய்யத் தக்கதோ அல்லது விலக்கத்தக்கதோ அது ஜீவச் செயலென்றும், எது நம் முடைய முயற்சியால் அல்லது முன் ஜாக்கிரதையால் விலக்கத் தகாததோ (அல்லது செய்ய முடியாததோ) அது சிவன் செயலாகவும் ஏற்படுகிறது. மனுஷ்யன் செய்கிற கர்மத்திற்கேற்ற பலனை அவன் இந்த ஜன்மத்தில் அனுப விக்கும்போது வீணாய் மனதை நொந்துகொள்ளாமல் எல்லாம் சிவன்செயல் என்று பொறுக்கவேண்டியது. வேறுவிதமான சாந்தி கிடையாது. ஒவ் வொருவனும் தான் செய்த கர்மத்தை யனுபவிக்கும்போது கடவுளை நோவது எத்தனை பிசகோ, அத்தனை பிசகு அக்கடவுள்மீது பழிபோட்டு அவருடைய செயலென்று கூறுவது. ஆதலின், ஸகல செயல்களும் ஜீவனாலேயே செய் யப்படுகின்றன வென்பது பெரியோர்களின் கொள்கை. முன் ஜென்மத்தில் செய்த கர்மபலனை இந்த ஜென்மத்தில் அனுபவியாமலிருப்பதற்கு மனுஷ்ய னுடைய விவேகமும் முன்ஜாக்கிரதையும் பயன்படாவாதலின், அவைகளை ஈசன் செயலாக எண்ணிப் பொறுமையோடு அனுபவிப்பது நன்மையாகும். சிவபெருமானுடைய கருணை யுண்டானால் சித்தமானது துஷ்கிருத்யத்தில் செல்லாது. அப்பெருமானைத் தியானியாத மனமோ ஸங்கட மடையும். துர் எண்ணங்களைக் குடிவைத்துக்கொண்டு முடிவில் கெடும்.

ஃ

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" ஒரு தேசத்திலுள்ள பிரஜை கள் களவு, கொலை, மோசம் முதலிய குற்றங்களைச் செய்யாமல் க்ஷேமமாய் வாழவேண்டு மென்பது மன்னனுடைய கோரிக்கை. இப்படியே ஸகல பிராணிகளும் ஸௌக்கியமாய் இருக்கவேண்டு மென்பது இறைவனது எண் ணம். "தேசாதிபன் நியாயஸ்தங்களை ஏற்படுத்தி, குற்றவாளிகளை சிக்ஷித்து, யோக்யர்களை இரக்ஷிப்பதுபோல்" பகவானும் பாபிகளைக் கஷ்டப்படுத்திப் புண்யவான்களை இரக்ஷிக்கிறார். ஜனங்கள் செய்யும் குற்றங்களுக்காக அரசன் ஜவாபுதாரி யாகான். அவன் ஸர்வ பிரஜைகளிடமும் ஒரேவித பிரீதியுள்ள வன். இதைப்போல் பகவானும் ஸர்வ பிராணிகளிடமும் ஒரேவித கருணையை யுடையவர். ஒவ்வொருவரும் தாம் செய்யும் காரியத்துக்குத் தக்கபடி சுகத் தையோ அல்லது கஷ்டத்தையோ அனுபவிக்கிறார்கள். "கஷ்டத்தை யனுப விப்பவன் ராஜாக்ஞையென்று பொறுப்பதுபோல", துன்பமடையும் பிராணி

"அவர்கள் பேதமாய்க் குற்றம் பேசுபவர்களாதலின் அவர்களுக்குப் பல காரங்கள் சப்பை. நான் இன்று பொழுது எவ்விதமாவது கழிந்தால் போது மென்று எண்ணுபவனாதலின், எனக்குப் பழைய சோறு" என்கிறார் ஒருவர்.

சிவாக்ஞையென் றெண்ணி ஸாந்தமா யிருக்கவேண்டும். ஆதலின், சிவன்மீது பழியைப் போடுவது நியாயமல்ல.

ஃ

"மண், பெண், பொன்" முதலிய மூன்றையும் ஈசுவரன் சிருஷ்டித்தார். அவைகளை ஜீவர்கள் போஷிக்கின்றனர். ஒருவன் தனக்குப் பொன் அகப்பட்டதென்று ஸந்தோஷிக்கிறன். ஒருவன் தனக்குப் பொன் கிடைக்கவில்லை யென்று கிலேசிக்கிறன். மற்றொருவன் பொன் தனக்கு அவசியமில்லையென்று உபேக்ஷையா யிருக்கிறன். இப்படிப் பிரியம், அப்பிரியம், உபேக்ஷை ஆகிய மூன்று அகங்காரங்களும் பொன் விஷயத்தில் காணப்படுகின்றன. இவ்வகங்காரங்க ளில்லாமல் பொன் தன் சுபாவத்திலிருந்ததே ஈசுவர சிருஷ்டி. ஒரு ஸ்திரீயை ஒருவன் புத்திரி யென்றும், ஒருவன் பத்நி யென்றும், மற்றொருவன் மாதா வென்றும் நினைத்து ஸம்ஸாரத்தை நடத்துகிறன். இது சீவ சிருஷ்டி. மேற்கண்டபடி மூன்று விதமாய்த் தோன்றுவதற் காதாரமாயிருந்த ஒரு பிண்டமான பெண்ரூபம் ஈசுவர சிருஷ்டி.

ஃ

"கோபம் சண்டாளம்" ஒரு நதிதீரத்தில் ஒரு பிராமணன் அங்கு துணி தோய்த்துக்கொண்டிருந்த ஒரு வண்ணானை நோக்கி, "அடே கல்லை விட்டுப் போ!" என்றான். அவன் மௌனமாயிருக்கவே அந்தணன் வெகு கோபம் கொண்டு அந்த வண்ணானை அடித்து, வாயில் வந்தபடி திட்டி, அவனைத் தொட்ட தீட்டுப் போகவேண்டி ஆற்றில் ஸ்நாநம் செய்தான். வண்ணானும் விப்பிரனுக்கு நற்புத்தியைக் கற்பிக்க விரும்பி உடனே ஸ்நாநம் செய்தான். வேதியன் அவனை நோக்கி, "அடே! நான் உன்னைத் தொட்ட தீட்டுப் போகவேண்டி முழுகினேன். நீ எதற்காக ஆற்றில் முழுகினாய்?" என, வண்ணான், "ஸ்வாமி, நான் ஒரு சண்டாளனைத் தொட்டேன்; அதற்காக நீராடினேன்" என்றான். பிராமணன், "எந்தச் சண்டாளனை நீ ஸ்பரிசித்தாய்?" என, வண்ணான், "தங்களுக்குத் தெரியாதா? தாங்கள் சதுச்சாஸ்திர பண்டிதரல்லவா? உங்களிடம் வாஸம் செய்யும் கோபமாகிய சண்டாளனை நான் தொட்டேனன்றோ? அதற்காக ஸ்நாநம் செய்தேன்" என்றான். பிராமணன் வெட்கித் தலை குனிந்தான். உத்தமமான ஞானம் ஸாமான்யர்களிடமிருந்துங்கூடத் தோன்றலாம். ஒரு சிறு குழந்தையின் வாக்கிலிருந்துங்கூட உதய மாகலாம். கிரகித்துக்கொள்ளக்கூடிய பக்குவ முள்ளவர்களுக்கு எந்த ஞானமும் எளிதில் எங்கும் கிடைக்கும்.

ஃ

"ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு ஆசைக்குத் துணை" மனம் இருக்கும் வரையில் அதன் விருத்திகளாகிய எண்ணங்களும் தோன்றிக்கொண்டே இருக்கும். மனம் நாசமானாலன்றி நித்யமான சுகம் கிடைக்காது. ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு ஆசையையே ஆதாரமாய்க் கொண்டிருப்பதால், எத்தனை காலம் உலகத்தில் இச்சை யுண்டோ அத்தனை காலமட்டும் வைராக்ய முண்டாகிறதில்லை. இச்சையை விடுவது இலேசல்ல. ஆயினும்,

---

தான் அவருக்கு நடந்துகொண்ட தினுசு சரியில்லை யென்று தன் நெஞ்சே தன்னைக் குத்துவதால், மறுபடியும் அவரைக் காண மனம் ஒப்புவதில்லை. தவறி எதிர்ப்பட்டாலும் மறைந்துகொள்ளச் செய்கிறது.

இந்த இச்சையைப் பகவானிடம் திருப்பி அவரை ஸதா சேவித்தபடி இருக்க வேண்டுமென்கிற ஆவலில் மாற்றிவிட்டால், அப்பொழுது அந்த இச்சை வெகு உன்னதஸ்தானத்தில் உயர்ந்துவிடுகிறது. இச்சை வைத்தாலும் ஈசனிடம் வைக்கவேண்டும். சினம் கொண்டாலும் அவரிடமே சினம் கொள்ள வேண்டும். பரமபிதாவாகவும், உத்தம நாயகனாகவும் கருதி உள்ளன்புடன் பகவானுடைய நாமத்தை உச்சரிப்போருக்கு அவர் பாபங்களைப் பரிகரித்து முக்தியை அளிக்கிறார். இச்சையை இறைவனிடம் செலுத்துவதுபோல், ஸகல காரியங்களையும் ஈசுவரார்ப்பணமாகச் செய்து எவ்வித பலனுக்கும் விருப்பம் கொள்ளாதிருத்தல் பாபக்திக்கு ஏதுவாம். பகவான் தம்மால் படைக்கப் பட்ட பிராணிகளிடம் பிரியத்தைப் பாராட்டாத கிருபணர்களிடம் கிஞ்சிற்றேனும் பிரீதி கொள்ளார். ஆகவே, பக்தியோடு ஹிருதய சுத்தர்களாய் பச்சாதாபம், ஏழைகளிடம் அன்பு, தர்மம், நியாயம்தவறாமை முதலிய நற்குணங்களையும் கைக்கொள்வாராயின், அதி சீக்கிரத்தில் பகவானுடைய கிருபையை யடையலாம். ஸகல மார்க்கங்களிலும் பக்திமார்க்கமானது இலகுவாயிருப்பதால் அதை யனுசரித்து நற்கதி பெறக்கடவோம்.

ஃ

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" நமது முன்னோர்களாகிய மகரிஷிகளெல்லாம் பற்பல சாஸ்திரங்களைச் செய்வதற்கு அதியுபயோகமா யிருந்தது ஏகாந்தமே. ஏகாந்தமாயிருப்பது திருப்தியையும், மனதுக்கு ஒருவித ஸந்துஷ்டியையும் தருகிறது. மனுஷ்யனுக்குள்ள அகங்காரமானது, அதாவது, தான் என்று நினைக்கும் தன்மையானது பலவித துன்பங்களுக்குள் அவனை யழுத்துகிறது. நான் என்னும் தன்மை ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது. அதுதான் அவனை மிருகத்துக்கு ஸமானமாய் ஆக்கிவிடுகிறது. அகங்காரமானது மிருகத்தன்மையாதலால், அது விருத்தியாகுந்தோறும் ஒவ்வொருவனும் பாபகாரியங்களையே செய்துகொண்டிருக்கிறான். புண்யத்தைக் கெடுப்பதும், பாபத்தைப் பெருக்குவதும், மனதை அழுக்குறச் செய்வதும், மனுஷ்யனை விருத்தி யடையவொட்டாமல் தடுப்பதும் அகங்காரந்தான். இந்த அகங்காரம் ஏகாந்தத்தில் தகனமாய்விடுகிறது. ஏகாந்தம் மனுஷ்யனைப் பரிசுத்த மாக்குகின்றது. மனுஷ்யனுக்குப் பலவித நேசர்களின் ஸாமீப்யத்தால் ஸந்தோஷ முண்டாவதுபோல், துக்கமும் உண்டாகிறது. ஏகாந்தத்தில் இந்தத் துக்கம் என்பதே இல்லை ; மிக்க மனோ ஆறுதலும், ஸமாதானமும், சாந்தியும் கிடைக்கிறது. ஆகவே, ஒவ்வொருவரும் படிக்கும் போதும் எழுதும்போதும் ஈசுவரனைத் தியானிக்கும்போதும் தனியே ஏகாந்தமாயிருப்பது சுககரம். அப்போதுதான் மனம் அங்குமிங்கும் ஓடாமல் ஒரு நிலையில் நிற்கும். எடுத்த கருமம் இனிமையாய் நிறைவேறும். நாம் ஏகாந்தமாயிருந்து பகவானைத் துதிக்கக்கடவோம்.

வீட்டுக்கு வந்து சதா பேசிக்கொண்டிருந்த நண்பர்கள் பிறகு எப்போதாவது தெருவில் சந்திக்குங் காலத்தில் க்ஷேமம் விசாரித்து விட்டு அவ்வளவில் விலகுவோராகவும் ஆவதுண்டு. அவர்களின் குணம் தெரிவதே லாபம்.

இப்போதைய இந்தச் சிறுமிகள் தானே வருங்காலத்தில் தாய்மாராகி நமது ஜாதிக்கு (Nation) க் காப்புத் தெய்வங்களாகப் போகிறார்கள்,

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸு ஆடிமீ 1௨

தெளிவில் உள்ள மனோ ஆறுதல்.

ஆயாஸமுற்றுச் சோர்ந்து கலங்கிடும்வேளை மானிட வாழ்வில் ஒருபொழுதுதானா? எத்தனையோ தடவைகளில் எத்தனையோ விதமாக எத்தனையோ தவிப்புகள் எப்படியோ எதிரிட்டுக்கொள்வதில்லையா? ஏக்கம் மிஞ்சிய வீக்கத்திற்கு ஏதோ ஒரு ஆறுதலான நோக்கம் காட்ட எங்கிருந்தாவது ஒரு சிறிது தெளிவு கிடைப்பது எவ்வளவோ பெரிய உதவியன்றோ? கிடைக்கும் தெளிவு சிறிய அளவிலிருப்பினும் அது நம்பிக்கைக்கு ஒரு பெரிய ஏதுகரம். தன்னைத் தேற்றித் திடம் பெறவும் அது ஒரு துணைக்கருவியாகும். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. தெளிவு அற்பமானாலும் அது வீணாகாது. அது மனோ சாந்திக்குச் சமய உதவி.

ஃ

எதையும் நம்பியே செய்யவேண்டி வருகிறது. நம்பாமல் எது ஆகிறது? எதற்கும் துணிந்தே செல்லவும் நேர்கிறது. துணிந்தவனுக்கே வாழ்வு துணியாமல் எதையும் செய்ய முடியாது. “நஷ்டமோ லாபமோ ஒருகை பார்த்துவிடுவது” என்று தைரியப்பட்டால்தான் ஒரு புதிய வியாபாரத்தைத் தொடங்கக்கூடும். நம்பிய இடத்திலும், துணிந்த சங்கதியிலும் எதிர்ப்படும் சிக்கல்களுக்கு அவ்வப்பொழுது எங்கிருந்தாவது கொஞ்சம் தெளிவு கிடைத்துக் கொண்டிருந்தால், இன்னும் மேல்நோக்கிச் செல்வதற்கும் சௌகரியமாயிருக்கும். தெளிவு சொல்ல ஒருவர் வேண்டும். சுடர் விளக்குக்கும் தூண்டுகோலின் துணை தேவை.

ஃ

இரவல் பெற்றுச் சென்ற கனத்த நகை இன்னும் திரும்பவில்லை “அவனுக்கா இரவல் தந்தாய்; போனது போனதே”

தன் வகுப்பினரையே தன் கடையில் வைத்துக்கொண்டு மற்ற வகுப்பினரை விலக்கிவிடுகிற வகுப்புப்பற்று மிகுந்த சில ஜாதியினர் உண்டு.

என்று குத்திச்சொல்வாரும் ஒருபக்கம் சூழ்கின்றனர். தேடிப் போன இடத்தில் அவன் வீடு பூட்டிக்கிடக்கிறது. "ஏன் தங்தோம்" என்று மனது பெரிதும் வாதிக்கிறது. அந்தச் சமயம் அடுத்த வீட்டார் "அவன் நாளை வந்துவிடுவான்; எங்கட்குக் கடிதம் வந்திருக்கிறது" என்பாராகில், தவித்த உள்ளத்திற்கு அது சற்றுத் தெளிவு தந்து தேற்றுகிறது. 'எவ்விதமும் நகையைப் பெற்றுவிடலாம்; மோசமொன்றும் நடவாது' என்று தைரியப்பட முடிகிறது. அது அந்தச் சமயத்திற்கு ஒரு பெரிய ஆறுதல். இந்தச் சிறு தெளிவு இல்லையாகில் மனம் பதைக்கும் பதைப்புக்கு அளவுண்டோ?

ஃ

"இனி, அந்தப்படுக்கை நோயாளி பிழைப்பதற்கில்லை" என்று வீட்டார் கலங்க, அந்தச்சமயம் நாட்டுப்புறத்து மருத்துவரொருவர் அங்கு வந்து "அந்த ராஜப்பிளவையை நான் சுலபத்தில் ஆற்றிவிடுகிறேன்; டாக்டர்கள் கைவிட்டாலென்ன?' என் கைராசியைப் பாருங்கள்!" என்று சொல்லும்போது, அந்தச் சிறு தெளிவு எவ்வளவுக்கு மனோ ஆறுதலையும் நம்பிக்கையையும் தரவல்லதென்பதைச் சிந்தித்திடுக.

ஃ

அதிகப்படிப்பின் ஆராய்ச்சியில் தான் பிறந்த மதத்தினிடத்தே சந்தேகம் முற்றி மற்றொரு மதம் புக விரும்புபவனுக்கு, "எந்த மதத்திலும் சந்தேகங்களும், கண்டனங்களும் இல்லாமலில்லை; அதனை அப்படியே விட்டு, உள்ள உண்மையைக் கண்டு கொண்டு கடவுளைத் துதிபுரிவதே கடைத்தேறுவதற்கு வழி" என்று கூறிச் சொந்தமதத்திலுள்ள உயர்நலங்களை ஒருவர் எடுத்துப் போதிப்பாராயின், அந்தச் சந்தேகஸ்தனுக்கு அங்கு ஒரு தெளிவு கிடைத்து மறுபடியும் சொந்த மதத்தில் ஒருவித பற்றுதல் உண்டாகலாமன்றோ? இந்தச் சிறிய தெளிவால் அவனது அன்னியமதப் பிரவேசம் தடுக்கப்பட்டுச் சாந்தி கிடைக்கின்றது. இந்தத் தெளிவு பெறுவிடிலோ வீண் அவதிதானே?

ஃ

"இன்றைய வீட்டுச்செலவுக்கு வழி எவ்வாறு? என் சிந்தை கலங்குதே" என்னுங்கால், "இன்றைக்கு எதுவும் வேண்டாம், நேற்று வாங்கிவந்தவற்றையே கொண்டு சரி செய்துகொள்ளலாம்" என்று மனைவி கூறுவாளானால், அந்தத் தெளிவு வீட்டுக்காரனுக்கு எவ்வளவோ மனோசாந்தி. 'இன்றுபொழுது எவ்வாறேனும் போகட்

எவர் நம்மைப் புகழ்வதாக நினைக்கிறோமோ, அவரே நம்மை அந்தரங்கத்தில் இகழ்வதாகவும் இருக்கிறார். நமது விழிப்புள்ள கண்ணைக் கண்டும், நாம் இனி ஏமாறமாட்டோம் என்பதை யுணர்ந்தும் அவர் வயிறு எரிகிறார்.

டும்; நானைக்குச் சம்பளம் வந்துவிடும்' என்று தைரியப்பட்டுக் கொள்கிறான்.

'எங்கும் வேலை கிடைக்கவில்லையே' என்று ஏங்குகையில் கடவுள் ஒரு இடத்தைக் காட்டிக்கொடுக்க, அந்தத் தெளிவில் அந்த இடத்தை எவ்விதமேனும் பற்றிக்கொண்டு முன்னுக்கு வந்துவிட முயற்சிக்கிறான்.

ஒரு விவாகத்தில் மணமகன் வீட்டாரைப்பற்றி 'உள் மர்மம் எப்படியிருக்குமோ' என்று கவலைகொண்டு பல இடங்களிலும் விசாரிப்பதில், "அவர்கள் பூர்வம் நல்ல நிலைமையில் இருந்தவர்களே; காலகதியால் யாவும்போய், தாங்கள் குதிரைவண்டியை வைத்திருந்த இடம்மட்டும் மிச்சமாகி அங்கு வசிக்கிறார்கள்; ஆயினும், பையன் நன்றாக வாசித்திருக்கிறான்; இப்போதுதான் வேலையில் அமர்ந்துள்ளான்; குடும்பம் கௌரவமானதே; சீக்கிரம் விருத்திக்கு வந்துவிடக்கூடும்" என்று மற்றவர் சொல்லும்போது, அந்தத் தெளிவு தனக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்து ஏழைகளானாலும் 'யோக்கியமான பெரிய குடும்பம்' என்று தன் பெண்ணை அங்கு தந்துவிடுகிறான். பிற்காலத்தில் அவர்கள் சீமான்களாகிவிடுகின்றனர். 'குதிரைக் கொட்டாரத்தில் குடியிருப்பவர்களுக்கா பெண்ணைக் கொடுக்கிறாய்?' என்று முன்பு பழித்தவர்கள் இப்பொழுது வாயடங்கிவிடுகின்றனர். அந்தச் சிறிய தெளிவு செய்த நன்மை இது.

ஃ

பத்திரமோ, உயிலோ எழுதுகையில் வக்கீலின் யோசனை கேட்பதில் அவர் தருகிற சட்ட ஆலோசனைத் தெளிவு பின்னுக்கு எவ்வளவோ நன்மையாகிறது "பத்திரம் வெகு நன்றாக எழுதப் பட்டிருக்கிறது; அவர்கள் விவகாரத்துக்கு வந்தாலும் ஜெயிக்க முடியாது; ஆனதால் நீங்கள் எதற்கும் விட்டுக்கொடுக்கவேண்டாம்" என்று லாயர் சொல்லும்பொழுது அந்தத் தெளிவு தைரியத்தைத் தந்து, "நீங்கள் வியாஜ்ஜியத்துக்கு வேண்டுமானால் செல்லுங்கள்; நான் உங்கள் இஷ்டப்படி நடக்க முடியாது" என்று எதிர்பக்கத்தாருக்குச் சொல்லிவிடும்படி செய்கிறது. அவர்களும் வழக்கு தொடுக்கத் தங்களுக்குப் பத்திரத்தில் அதிக பலமில்லை யென்று மௌனமாய்விடுகின்றனர். இது தெளிவு செய்த அநுகூலம்.

ஃ

வரவும் செலவும் சரியாகி எதுவும் மிஞ்சாத நிலையில் தன்னை நம்பிய குழந்தைகளுக்கு என்னகதி யென்று கவலைப்படும் வேளையில்

கோடலிக்காம்புகள் ஒவ்வொரு குடும்பத்திலும் கொஞ்சம் நாட்கள் ஜீவித்திருக்கும். ஆனால், அவர்களால் உபாதையடைந்த உத்தமர்களின் கண் கட்டு முன்பு தானே சீக்கிரத்தில் அது பச்சைப்பல்லக்கு ஏறிச் சென்றுவிடும்.

'லைப் இன்சூரன்ஸ் கம்பெனியிலாவது சேர்ந்து ஒரு ஏற்பாடு செய்து விட்டால் நல்லது' என்கிற ஒரு தெளிவைப் பெறுகிறான். அவ்விதமே சேர்ந்துகொள்வதில் அது தனக்குப் பிறகு ஒரு பெரிய சொத்து கிடைக்குமென்கிற தைரியத்தை உண்டுபண்ணிவிடுகிறது.

ஃ

தான் இயற்றிய நூல் 'உலகம் ஒப்பும் வகையில் முடிந்ததா யிருக்கிறதா ?' என்று சந்தேகிக்கையில் இன்னொருவர் அதை வாசித்துப்பார்த்துச் சில திருத்தங்கள் புகன்று, 'அவ்விதம் திருத்தி விட்டால் அருமையான நூலாகும்' என்கிறார். அவர் தருகிற தெளிவு அவ்விதமே திருத்தி அந்த நூலை அச்சிட்டுவிடும்படி செய்கிறது.

ஃ

வண்ணானிடம் துணிகள் போட்டு ஒன்றரை மாதமாகியும், அவனைத் தேடிப்போகும்பொழுதெல்லாம் அவன் வீட்டி லிருப்ப தில்லை ; அங்குள்ளவரைக் கேட்டால், "அவனுக்கும் எங்களுக்கும் சண்டை ; அவன் எங்கு சென்றானோ தெரியாது" என்றுகூற, அந்தச்சமயம் மனம் மிகவும் சோர்ந்துபோய் 'துணிகள் வருமோ யாதோ' எனக் கவலை மிஞ்சுகிறது. ஆயினும், 'வீடு அவனுக்குச் சொந்தமானது' என்பதைக் கேட்கையில் சற்றுத் தெளிவு உண்டாகி, 'எவ்விதமும் வீட்டுக்கு வருவான்' என்று தேற்றிக்கொள்ள முடிகிறது. மறுதினம் வண்ணானும் வந்துவிட, சலவைத் துணிகளும் வீட்டிற்கு வந்து சேருகின்றன. 'அவனுக்குச் சொந்த வீடு இருக்கிறது' என்ற தெளிவு இல்லாவிடில் துணிமணிகளைப் போட்டவரின் மனோவாதை சொல்லுந் தரமாமோ ?

ஃ

வயது அதிகமாகித் தேகவலிமை தளர்ந்து வாழ்க்கைச் சுகத்தை யனுபவிக்க வகையின்றிச் "சோர்வு" தோன்றிக்கொள்ள, அந்த விசாரவேளையில் வைத்தியர் "இதற்குக் கவலை வேண்டாம் ; ஸ்வர்ணமும் அயக்காந்தமும் சேர்ந்த ரஸாயன மருந்தால் பூரண குண முண்டாகிவிடும்" என்று தைரியம் கூறுவாரானால், அந்தத் தெளிவு, ஏமாறிப் பரிதாபமான திண்டாட்டமாய்விட்ட மனதிற்கு எவ்வளவோ சாந்தியும் புது சக்தியும் தருமல்லவோ ?

ஃ

முதன்முதலில் கர்ப்பவதியாகும்போது பிரஸவபயம் கொள்வதில், மற்றப் பெண்கள் தைரியம் சொல்லித் தேற்றும் தெளிவு பின்வரும் கஷ்டத்தைத் தாங்கப் போதிய வலிமை தருகிறது.

ஃ

தான் ஏதோ பிரமாதமான பெயர் பெற்றுவிட்டதாகச் சிலருக்கு எண்ணம். அதனால் தங்களை வெகு உயர்வாக அலங்கரித்துக் காட்டுகிறார்கள். யதார்த்தமான புகழ்ப்பிரதாப மேற்றவர்களோ பரம சாதுக்களாக உள்ளார்.

'அந்த இடம் இன்னும் அதிக தூரம் இருக்கிறதோ' என்று கவலைப்படுகையில், ஒருவர் எதிர்ப்பட்டு, "இல்லை, சமீபத்திலேயே இருக்கிறது" என்று தெரிவிப்பாராகில் அந்தத் தெளிவு அலுத்துப் போன கால்களுக்கு மறுபடியும் நடக்கப் புதுப்பலம் கொடுக்கிறது.

ஃ

கோயிலுக்குச் சென்ற இடத்தில் 'திரை எடுக்க நேரமாகும்' என்று திரும்ப நினைக்கும் சமயம், "கால்மணி நேரத்தில் தரிசனம் செய்யலாம்" என்று ஒருவர் சொன்னால், அந்தத் தெளிவு அங்கேயே காத்திருக்கவைத்து ஸ்வாமி தரிசனமும் கிடைக்கும்படி செய்விக்கிறது.

ஃ

ஜலம் அருந்துகையில் 'அதில் ஏதேனும் விழுந்திருக்கிறதோ' என்னும் சந்தேகம், அதை உற்றுப்பார்ப்பதில் விலகித் தெளிவு பிறக்க, உடனே மடமடவென்று உட்கொண்டுவிட மனது சம்மதிக்கிறது.

ஃ

'ஒருவனாக அந்தக் காரியத்தை எப்படிச் செய்ய முடியும்?' என்று ஏங்கும் சமயம், "நாங்களும் துணைக்கு வந்து உதவி புரிகிறோம்" என்று நண்பர்கள் தரும் தெளிவானது அவர்களின் சகாயத்தைக்கொண்டு அந்த வேலையை நடத்திவிட முடிகிறது.

ஃ

இரவில் தனியே நித்திரை செய்ய அஞ்சுகையில், மனிதர்கள் அருகில் இல்லாவிடினும் கடவுள் நமது பக்கத்தில் இருக்கிறார் என்ற தெளிவு அச்சமற்றுத் தூங்கச் செய்விக்கிறது.

ஃ

ஒருவன் ஒரு அன்னியனைத் தனது உண்மைத் தம்பிபோல் நம்பிவிடுகிறான். இன்னொருவன் அந்த உண்மைத் தம்பியிடம் போக, அந்தத் தம்பியோ தன்னை வெகு உயர்வாக நினைத்துள்ள அபிமான அண்ணனைக் கேவலமாகப்பேசிப் பல பொறாமைச் சொற்களை வாரிக் கொட்டுகிறான். இதைக் கேட்டவன் அந்த அண்ணனுக்கு உன் அருமைத் தம்பியின் அவலக்ஷணம் இப்படியென்று தான் நேரில் செவியுற்றதைக் கடிதமூலம் தெரிவித்துவிடுகிறான். இதை அண்ணன் அறிந்ததும் தெளிவுகொண்டு, 'போதும் அந்தத் தம்பியின் உறவு' என்று அதுமுதல் முற்றும் விலகிவிடுகிறான். இந்தத் தெளிவு கபடக்களஞ்சியமான தம்பியின் வஞ்சகப் பாசாங்கு வகையினின்றும் விடுவிக்கப் பண்ணுகிறது. விழித்துக்கொண்டவன் பிறகு ஏமாறுவதில்லை.

ஃ

"இப்படிப் பாயில் படுத்துக்கிடக்கிறேனே" என்று நோயாளி புலம்புகையில் "பயப்படாதே! நான் கவனிக்கிறேன்" என்று அவனுக்கு வேண்டிய முக்கியஸ்தர் சொல்லும்போது அந்தத் தெளிவு ரோகஸ்தனுக்கு ஒரு புதிய பலத்தைத் தருகிறது.

நண்பர்களை வெகு விஸ்வாசமாய் நம்புவதில், அவர்கள் சுய காரியமாய், வியாபார நண்பர்களாய்த் தங்கள் வருமானத்தையே முதலில் கவனிப்பவர்களா யிருக்கிறார்களென்று கண்டுகொள்ளுகிற தெளிவு, அதுமுதல் அவர்களை அறிமுகக் குப்பையில் ஒதுக்கிவைக்கவும், தான் ஏமாறுதிருக்கவும் உதவிசெய்கிறது.

ஃ

வியாபாரிகளை 'நாணயஸ்தர்கள்' என்று நம்புவதில், அவர்களிற் சிலர் "தோலிருக்கச் சுளை விழுங்கி" என்றும், "விற்ற பணத்தை ஒருபோதும் தராதவர்கள்" என்றும் தெரிந்துகொள்கிற தெளிவு பின்னுக்கு மோசம் போகாதிருக்க வைக்கிறது.

ஃ

தனது பெரிய பதவியில் 'அது நீடித்து நிற்காது' என்ற தெளிவு, அப்பதவியை இழக்குமுன்னரே இன்னொரு உத்தியோகத்தைத் தேடிவைத்துக்கொள்ளும்படி எச்சரிக்கிறது.

ஃ

"இந்த வண்டி தஞ்சாவூருக்குப் போகிறதுதானு?" என்ற சந்தேகத்தினல் வினவ, மற்றவர் "ஆம்" என்று தெளிவு தருவதில் ஒரு அமைதி ஏற்படுகிறது. ஃ

"புதிய வேலையில் அமரும்போது அந்த வேலையை இன்னின்னவாறு செய்யவேண்டும் என்று காட்டுகிற தெளிவு எவ்வளவோ முன்னுதவி யாகிறது. ஃ

விரதத்தில் அதன் வரலாற்றின் தெளிவு அந்த விரதத்தைப் பயபக்தியுடன் அநுஷ்டிக்கச் செய்கிறது.

ஃ

ஒன்றைக் கற்பதில் ஏற்படும் ஐயம் மற்றவரால் தெளிவிக்கப் படும்பொழுது—அதன் அருமை புலனுகின்றது.

ஃ

தான் அநாதை யென்று தனியே கண்ணீர்விடுகையில், "தைரியத்தை விடாதே." என்கிற தெளிவு நெஞ்சுக்குப் புதிய பலத்தைக் கொண்டு வருகிறது. ஃ

வேதநூலில் விளங்காத சந்தேகங்கள் பெரியோர்களால் தெளிவிக்கப்படும் பொழுது—"அறிந்தேன்—அறிந்தேன்—" என்று ஆநந்திக்கப் பண்ணுகிறது. ஃ

மருந்துக்கு ஒரு மூலிகை வாங்கியபின்பு "அந்த மூலிகை இதுவல்ல" என்று ஒருவர் தெளிவிக்கையில், அந்தத் தெளிவு சரியான மூலிகையைப் பெறச் செய்விக்கிறது.

"குழம்பு நன்றாயிருக்கிறதா?" என்று கேட்கையில், "வெகு திவ்யமாயிருக்கிறதே" என்று புசிப்பவர் சொல்லும் தெளிவு அக் குழம்பை ஆக்கியவர்களுக்குத் திருப்தி தருகிறது.

ஃ

பிரபஞ்ச மாய்கையினின்றும் விலகுந் தெளிவு யதார்த்தமான பகவத்பக்தியையும், பற்றற்ற தன்மையையும் உதிக்கச் செய்கிறது.

ஃ

இராஜ்ய ஞானத்தின் தெளிவு வாயையும் எழுதுகோலையும் வெகு ஜாக்கிரதையாய் இழுத்துவைத்து நிதானமாய்ப் பேசவும் எழுதவும் செய்கிறது.

ஃ

'மறுபடியும் ஒன்றுகூடிக்கொள்ளலாம்' என்கிற தெளிவு பிரிவாற்றாமையைச் சகித்துக்கொள்ளப் பண்ணுகிறது. ஒவ்வொரு புதிய தெளிவு ஒவ்வொரு நினைத்திலும் ஒவ்வொரு காரியத்திலும் தோன்றியவண்ணமே யுள்ளது. தெளிவு எதிர்படாவிடில் உலக வாழ்வில் முன்னேறுதற்கு இயலா. ஒவ்வொரு சிறிய தெளிவிலும் பெரிய நன்மை யுண்டு. எல்லாம் வல்ல கடவுள் நமது ஜீவியத்தில் அவ்வப்போது போதிய தெளிவையும் ஆற்றலையும் தந்து காத்து வருகின்றார். தெளிவு உதிக்கச் செய்வது இறைவனது ஒரு தனி அருள். அவர் நாமம் வாழ்க. அவரை நம்புவதே பெரிய தெளிவு.

அவர்கள் உனக்கு என்ன உறவு வேண்டும்?

அவர்களா? அவர்கள் பெரிய மகானுபாவர்கள். எனக்கு உலகம் இன்னவிதமென லௌகீக ஞானம் புகட்டிய குருநாதர்கள். அவர்களால் லோகாநுபவங்களை நன்றாகக் கற்றுக்கொண்டேன். அவர்களிடம் பட்ட அவமானத்தில் என் அறிவு மிக்க கூர்மை யாயிற்று. நான் தன் வசமாகவில்லையென்றும், தனக்கு உதவவில்லை வென்றும் கண்டுகொண்டு நிட்டவும் தொடங்கிவிட்டார்கள். நான் முதலில் அஞ்சியது சரியாயிற்று. என்னை விழித்துக்கொள்ள வைத்ததற்கு மிக்க சந்தோஷம். வெளுத்ததெல்லாம் பால் என்று இருந்த எனக்கு வஞ்சகம், மோசம், ஏமாற்று இவைகளெல்லாம் இன்னின்னவாறு இருக்குமென்று தங்கள் செய்கைகளால் காட்டி யுணர்த்திய பெரியோர்களாவர். அவர்கள் என்னை அவமானப்படுத்த எண்ண, நானோ அவமானத்திலிருந்து ஏற்படும் கற்பனை—அநுபவம்—புத்திமதிகளைப் பொறுக்கிக்கொள்கிறேன். என்னைத் தூஷித்துக் கேவலம் செய்த பெரியோர்களை, நான் அடைந்த இந்த அரிய ஞானபக்குவ லாபங்களுக்காக மனஸ்பூர்வமாய் வாழ்த்துகின்றேன்.

மெஸ்மரிஸம்

மெஸ்மரிஸம் எனப்படுவது முன்னொரு காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் ஜீவித்திருந்த மெஸ்மர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மனோசக்தியின் சம்பந்தமான ஒருவகை சாஸ்திரமாகும். இந்த சாஸ்திரத்திற்குப் பெயர்மட்டும் மெஸ்மரிஸம் எனக் கொடுக்கப்பட்டதல்லால் இதன் சம்பந்தமான தொழில்களும் சித்திகளும் பண்டைக்கால முதலே கீழ்த் தேசங்களில் நடைபெற்று வந்திருக்கின்றன. இந்த மெஸ்மரிஸம் இங்கிலாந்து தேசத்துக்குள் புகுந்தபின் மாஞ்சஸ்டர் நகரத்திலிருந்த டாக்டர் பிரைடு என்பவர் இதை நன்றாய்ப் பரிசோதனை செய்து முன்னிருந்த முறைகளோடு வேறு சிலவற்றையும் தாமாகச் சேர்த்து இதற்கே ஹிப்னாடிஸம் எனப் பெயரிட்டார். மேல்நாட்டாரால் மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் என்று சொல்லப்படுவதும், கீழ் நாட்டாரால் யோக சித்தி என்று சொல்லப்படுவதும் ஒரே தொழிலென்பதே கற்றோருடைய துணிபு.

கீழ்நாட்டில் பண்டைக்காலமுதலிலிருந்த யோக சித்தியும், மேல்நாட்டில் இப்போது வழங்கிவரும் மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் ஆகிய இவைகளும் ஒன்றென்று சொன்னதனால், மெஸ்மர் என்பவர் கீழ்நாட்டு ஏட்டுச் சுவடிகளை நேரில் படித்துணர்ந்து இச் சாஸ்திரத்தை நாட்டினாரென்றேனும், அல்லது இப்போது மேல்நாட்டாரால் எழுதி வைக்கப்பட்டிருக்கும் மெஸ்மரிஸ முறைகளே இந்த தேசத்தில் முற்காலத்தில் எழுதப்பட்ட சுவடிகளில் காணப்படுகின்றனவென்றேனும் சொல்ல இடமில்லை. மெஸ்மரிஸத்தின் நோக்கமும் யோக சித்திகளின் நோக்கமும் ஒத்திருக்கின்றனவென்று சொல்லலாமன்றி வேறொன்றும் நம்மால் வரையறுத்து முடிவுசெய்ய இயலாது.

யோகத்தின் பலனை ஆத்மார்த்தமான வழிகளில் உபயோகிப்பதே ஹிந்து யோகிகளின் வழக்கம். இடைவழியில் உண்டாகும் சித்தி விளையாட்டுகளை முடிவு காலத்தில் விட்டுவிடவேண்டுமென்று யோகசாஸ்திரங்கள் கூறும். ஆனால், மேல்நாட்டு மெஸ்மரிஸசாஸ்திரமோ பெரும்பாலும் ஆத்மார்த்தமான வழியில் உபயோகிக்கப்படுவதில்லை. மனிதனுடைய மனோசக்தியால் ஜனங்களுக்கு எவ்வகையிலும் உதவி புரியவேண்டும் என்பதே மேல்நாட்டாருடைய விருப்பம். இதை நிறைவேற்றும்பொருட்டு அவர்கள் செய்துவரும் முயற்சிகள் அநந்தம்.

வியாதிகளை நீக்குவதற்கு மெஸ்மரிஸ வித்தைபோன்ற எளியவழி வேறொன்றுமில்லை. ஒரு வியாதிக்காக மருந்து கொடுத்து அம்மருந்து அவ்வியாதியைக் கண்டிக்காவிடின் உடனே வேறு உபத்திரவம் உண்டாகும். மெஸ்மரிஸத்தால் எவ்வகைத் தீங்குமில்லை. உண்டாயின் நன்மையுண்டாம்; இன்றேல் தீங்கில்லை. இப்போது மெஸ்மரிஸ சாஸ்திரிகள் தீயகுணமுள்ள சிறுவர்களையும் பெரியோர்களையும் அதிக லகுவினில் திருத்திவருகிறார்கள். மெஸ்மரிஸத்தின் மேன்மையை அதற்கென்றுள்ள நூல்களிற் கண்டு தெளிக.

தொத்துவியாதி காலங்களில்.

எல்லாம் மனோவுறுதியைப் பொறுத்தது. வாந்தி—பிளேக்கு — பெரியம்மை—முதலிய பெருவாரி வியாதிகள் மலிந்து கிடக்கும்போது, நம்முடைய தேகமும் மனமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நாம் வாழும் இடமும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும். பழயது சாப்பிடக்கூடாது. புதியதே உண்ணவேண்டும். சுண்டக்கறி என்று ருசிபார்த்துப் புசிக்கொணாது. தாமச பதார்த்தம் கூடாது. சத்வ பதார்த்தங்களே விரும்பத்தக்கன. காய்கனி பதார்த்தங்களேதாம் அக்காலத்திற்கு அநுகூலமானதாகும்.

ஃ

மேலே கூறிய யாவையும் நாம் நம் வீட்டுக்குள் இருக்கும்போது கவனித்துத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும். ஆனால், வியவகாரம் (தொழில் முறைமை) காரணமாக நாம் ஒவ்வொருவரும் வெளியே போக வேண்டிவருமல்லவா? ஆம். வெளியே போகும்போது நாம் போகின்ற இடமெல்லாம் எங்கும் பரிசுத்தமாகவே இருக்குமா? சில இடங்களில் வாந்திபேதி கண்டு பட்டவர்களையும், பிளேக்கினால் இறந்துபோனவர்களையும், பெரியம்மை கண்டு டோலியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படுபவர்களையும் நாம் காணவேண்டி நேரிடும். விஷநோய் கண்ட இடங்களிலிருந்து வரும் மக்களை நாம் உண்மையறியாமல் தொடவேண்டியும் இருக்கலாம். அச்சமயங்களில்,

மனம் அற்புதமான தீரம்
அடைந்திருக்க வேண்டும்.
பயப்படப்போகாது.

ஃ

அதைரியமடைந்து பயப்பட்டாலோ வந்தது கெடுதி—விளைந்தது தீங்கு. மனம் நடுங்கினால் உடல் நடுங்கும்; உதரம் கெடும்; உதரம் கெடவும், தொத்துவியாதிப் புழுக்கள் தேகத்தில் சுலபமாய் நுழைந்து லக்ஷம்—கோடிக்கணக்காகப் பெருகி தேகத்தை நாசம் செய்துவிடும். மனோதீரமுள்ளவரையில் பயமில்லை.

தீரம் எப்படி யுண்டாகும்?

தைரியம் என்ற வார்த்தையையும், பயமில்லை என்ற வார்த்தையையும் நம்முடைய மனதில் ஸ்பஷ்டமாக எழுதி எப்போதும் அவைகளைச் சிந்தித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

ஃ

பிளேக்கோ, காலராவோ கண்டிருக்கிற யாதொரு வீட்டுக்கு நாம் போகும்படியாக நேரிட்டுவிடும்போது நாம் என்ன செய்யவேண்டும்? மனஸைக் கருங்கல்லாக்கிவிடவேண்டும். மனம் இப்படி யப்படி அசையப்படாது. சலிக்கக் கூடாது.

"பிளேக்கு என்னைத் தொடாது."
அல்லது
"வாந்திபேதி என்னைத்
தீண்டமாட்டாது"

"வருவன வருக" என்று வீரத்துடன் குடும்பத்தொல்லைகளையும் சோதனைகளையும் ஏற்கக்கடவோம். எதையும் சகிக்கவே நாம் பிறந்தோம்.

என்று உறுதியாகச் சிந்தித்துக் கொண்டிருந்துவிடவேண்டும். பிறகு திரும்பி வீடுவந்து சேர்ந்தவுடனே, உடுப்புகளையெல்லாம் கழற்றிச் சுத்தம் செய்து சோய்த்து உலர்த்திவிட்டு, ஸ்நானம் செய்து, நமக்குள்ள வேலையைக் கவனித்துக்கொண்டிருந்துவிடவேண்டும். மறுபடியும் மறுபடியும் பிளேக்கையும் காலராவையும் மனதில் ஒருபோதும் எண்ணப்படாது. கண்ணுற்கண்ட அந்த சம்பவங்களையும் நினைக்கலாகாது. அந்த நினைவோ, ஏக்கமோ, எதுவுமே இருக்கக்கூடாது. இதுவே நாம் தப்பித்துக் கொள்வதற்குச் சரியான சுலப வழி.

"அமிர்த குணபோதினி"யின் வாழ்த்துப்பா.

1. ஆதிமுதல் அந்தம் அனுபவாமிர்தகுண
போதினியி ரீராண்டு பூர்த்திக்குள்—நீதறவே
ஆயிர மாய்பதி னாயிர மாயிருபஃ
தாயிரம தற்குமே லாய்.

2. ஆனவொரு செய்கை யதிசயமாய் கேட்டியால்
தேனதனைக் கண்டுத் திகட்டுமோ—தானதுபோல்
ஓதுவதற் கென்னவொரு ஒய்யார மாயெழுதும்
போதினியின் பொன்னடையைப் போல்.

3 மேதினியி லேதியம்பு மேலான வர்போற்றும்
நீதி லனுபவத் தீங்கனியென்—போதினியை
மங்கையரு மாடவரு மாறுது ஓதுதலா
லெங்குண் டிதற்கு யிணையே.

4. ஒவ்வோ ரெழுத்திற்கு மோர்சுவையா கச்சுவைக்க
ஒவ்வொரு யேட்டிலு மோர்புதுமை—செவ்வையாய்த்
தந்தானே வள்ளல் தகுயிரா மானுசனென்
செந்தமிழ்பத் ராசிரியத் தேன்.

5. பத்திரிக்கை யைநடத்திப் பாங்குபெறச் செய்துமிக
சித்திபுற செய்வதனிற் சீருற்றுன்—இத்தரையில்
மங்களஞ்சே ரெங்குபுகழ் மாராச கோபாலன்
இங்கிதமே வாழி யிசைந்து.

B. தியாகராஜன்.

தன் லாபத்துக்காகப் பந்துமித்திரத்துவத்தையும் உதறிவிடுபவன் அசல் குள்ளநரியாவான். ஆனுல், அவனுக்கே அதிக சொத்து சேர்கிறது. துதிப்பதும் மதிப்பதும் அவனையே தான். உலகே ஒரு கோணல் வழி.

இரு கவிவாணர்கள் பார்த்து இன்புறுமாறு கவிகளைக் கடுமையாய்ச் செய்வதினும், இரண்டு லக்ஷம் ஜனங்கள் மனப்பாடம் செய்து வாயாரச் சொல்லித் தங்களின் சொந்தமான பாடல்களாக்கி மகிழும்படிக் கவிதைகளை எளிய நடையில் இயற்றுவதே அதிக கஷ்டமான வேலை.

பதங்களின் சேர்க்கை.

(145-ம் பக்கத் தொடர்ச்சி.)

24. அப்பிரதானி, (அ—அல்ல) x (பிரதானி—மந்திரி) அம்பனர்.
25. அமராவதி, (அமரர்—கடவுள்) x (வதி—இடம்) இந்திர நகரம்.
26. அமிர்தம், (அ—அல்ல) x (மிருதம்—மரணம்) அழியாமை, தேவருணவு.
27. அரிமர்த்தனன், (அரி—சத்துரு) x (மர்த்தனம் — அடிக்கை) சத்துருவை அடிப்போன்.
28. அர்த்தநாசம், (அர்த்தம் அல்லது அருத்தம்—பொருள்) x (நாசம் —அழித்தல்) பொருளை யழித்தல்.
29. அவஸ்தை, (அவ—கெட்ட) x (ஸ்தா—இருப்பு) சங்கடமான நிலை.
30. அவசியம், (அ—அல்ல) x (வசியம்—சுயாதினப்பட்டது.) அவசரம்.
31. அவமானம், (அவ—குறைவு) x (மானம்—கௌரவம்) மானவீனம்.
32. அனுயாசம், (அ—அல்ல) x (ஆயாசம்—இளைப்பு) இளைப்பின்மை.
33. அனுசிதம்—(அ—அல்ல) x (உசிதம்—தகுதி) பொய்.
34. ஆஷாடபூதி, (ஆஷாடம்—ஆடி மாதம்) x (பூச—பிறப்பு) ஆடி மாதத்தில் பிறந்தவன்.
35. ஆகாசவாணி, ஆகாசம் x வாணி. (வாணி—பேச்சு) அசரீரிவாக்கு
36. ஆசாரம், (ஆ—மிகவும்) x (சாரம் —நெறி) ஒழுக்கம்.
37. ஆதரி, (ஆதரம்—அன்பு) காப்பாற்று.
38. ஆநந்தம், (ஆ—மிகவும்) x (நந்தம்—சந்தோஷம்) மிக்க களிப்பு.
39. ஆபத்து, (ஆ—மிக) x (பத்து—உறுவது) சஞ்சலம்.
40. ஆலங்கட்டி, (ஆலம்—சலம்) x (கட்டி—சேர்க்கை) மழைக்கட்டி.
41. இதாகிதம், (ஹிதம்—நன்மை) x (அ—அல்ல) x (ஹிதம்-நன்மை) நன்மை தீமை.
42. இரணரங்கம், (இரணம் — யுத்தம்) x (அரங்கம் — இடம்) போர்க்களம்.
43. இரணியகன், (ஹிரணியம் — தனம், பொன்) x (அகம்—உட்புறம்) எலி. தன்வளையில் எலி தானியத்தை வைத்துக்கொண்டிருக்கிறதனால் அதற்கு இப்பெயரிடப்பட்டது.
44. இரத்தினவதி, இரத்தினம் x (வதி—இடம்) இரத்தின மிருக்கப்பட்டவள்.
45. உத்தம சீவி, (உத்தமம்—நலம்) x (சீவி—வாழ்) நன்மையாகப் பிழைத்திருப்பவள்.
46. உத்தம பாத்திரம், (உத்தமம் — மேன்மை) x (பாத்திரம்—தகுந்தவன்) சன்மார்க்க புருஷன்.
47. உபகாரம், (உப—நல்ல) x (காரம் — செய்கை) ஒத்தாசை, நன்மை.

சிறுமணித்திரள்

(முன் பக்கம் 181-லிருந்து.)

676. கரையின் மீது நின்று கொண்டு, குளிரையும் ஆபத்தையும் எண்ணி நடுங்கிக்கொண்டிருப்பதை விட்டு நம்மாலானவரை தண்ணீரில் இறங்கி மறுகரை யேறுவதுதான் உசிதம்.

677. மனிதன் செய்த பெரிய குற்றங்கள் யாவும், அற்பமென்று கருதியவைகளினின்றே உற்பத்தியானது. ஒரு அற்பப் பிசகினால்தான் மகத்தான காரியங்கள் நிறைவேறாமற் போகின்றன. ஆதலின், அற்பம் அற்பம் அன்று.

678. பெண்களில்லையேல் உலகமில்லை. பெண்களே உலகத்தைச் சமாதானத்துடன் நாளைக்கும் நடத்திச் செல்லுகிறார்கள்.

679. மனிதன் வாழ்நாள் மிக மிகக் குறுகியதென்றும், காலம் நில்லாமல் விரைவாகச் செல்லுகிறதென்றும் தெரிந்து என் சும்மாயிருக்கிறீர்கள். உங்களின் மதக் கடமைகளை—பணிகளைச் செய்ய, இப்பொழுதே, இந் நிமிடமே, முயலுங்கள்.

சோ. த. ஆனந்தன்.

680. இன்றைக்குக் கையில் இரண்டு காசு இருக்குமாயின் கர்வம் அதிகரிக்கிறது. கண் தெரிகிறதில்லை. தான் தலையெடுக்க உதவி செய்தவர்களின்மீதே வசைகளை வீசச் செய்கிறது. யாரையும் மதிக்கிறதில்லை. காசு தொலைந்தால், புதியவாழ்வு திடீரென்று பறந்தால், பழய ஸ்திதியை நினைத்துக் கொள்கிறார்கள்.

681. நியாயத்துடன் நடக்கும் உத்தமர்களை அவிவேகிகள் பரிஹஸிப்பது வழக்கம். வீட்டுக்காரனை லக்ஷியம் செய்யாமல் வீட்டிலுள்ள பெண்களிடம் பேசிவிட்டுச் செல்வது சில தந்திரசாலிகளின் சுபாவம்.

682. வாடகைக்கு இருந்த இடத்தில் பக்கத்து வீட்டில் குடியிருப்பவனின் அறிமுகம் அங்கு குடியிருக்கும் வரைக்கும்தான். பிறகோ அவன் யாரோ! நாம் யாரோ! தெருவில் நடக்கிற எத்தனையோ பேர்களில் அவன் ஒருவனாக முடிகிறான்.

683. உன் கால்களை வேலையில்லாமல் வீணில் அலையும்படி விட வேண்டாம். மனதைப் பழிவாங்கும் எண்ணத்துடன் இருக்க விடாதே. தெய்வமே கதியென்று நம்பி எந்தக் காரியத்தையும் அவரைத் தியானம் செய்து தொடங்கு.

684. நாக்கை ஸத்யவிஷயத்தில் உபயோகித்தால் இக பர கீர்த்தியுண்டு. பர ஹிதத்துக்காகத் தன் சுகத்தை அற்பமாய் நினைக்கப் பழகு.

685. நிறைவைக் குறைவாகவும், குறைவை நிறைவாகவும் நினைத்தல்தான் அறியாமை. உள்ளதை உள்ளபடியே அறிதல் அறிவு.

"அந்தக் குள்ளநரி விஷயமாய் நான் அனுஷ்டிக்கும் ஒதுங்கிய கொள்கையை மறுபடியும் புனராலோசனை செய்து பார்த்தேன். என் கொள்கையை மாற்றிக்கொள்ளச் சம்பவங்கள் எதுவும் நூதனமாய் அகப்படவில்லை."

686. நாட்டிலுள்ள ஸுக ஸாம் பிராஜ்யங்கள் வனத்திலுள்ள வைப வங்களுக்கு ஈடாகா. புண்யாரண்ய வாஸிகளாய் ஆத்மாநந்தத்தில் மூழ்கு வோரின் பிரபாவத்தை யாரால் வச னிக்க முடியும்?

687. தெய்வச் செயலை யறிவார் யார்? இந்த ஸம்ஸாரத்தில் சுகமும் துக்கமும் கலந்திருக்கின்றன. இதனு லேதான் ஞானிகள் இதை வெறுக் கின்றனர்.

688. நூறு குன்றுமணி கன முள்ள பாலை எடுத்துப் பரீக்ஷித்தால் அதில் மூன்று குன்றுமணி கனமுள்ள வெண்ணெயும், 5-குன்றுமணி பாற் சக்கரையும், 4½-குன்றுமணி பால லடைக்கட்டிக் கரு (Caseine Albumen) என்பனவும், ½-குன்றுமணி எலும்பை வலுக்கச் செய்யும் உலோ கங்களும், மீதி 86½-குன்றுமணி ஜல மும் காணுகிறது.

689. எத்தனை நாழிகை வார்த் தையாடினும் நிகழ்காலம் பிரயோ ஜனம் தராது. வருங்காலத்தில் பக வத் கிருபை இருக்குமாயின் இன்று நிறைவேறாததும் அப்பொழுது சுலப மாகலாம்.

690. குழந்தை பெறாத பெண் பெண்ணல்ல. அன்பில்லா விருந்து விருந்தல்ல. செலவுக்கு உதவாப் பணம் பணமல்ல. கனி ஈயாத மரம் மரமல்ல. கன்று ஈனாத பசு பசுவல்ல. வியாசம் எழுதாக் கல்வி கல்வியல்ல. எட்டிப் பாராதார் உறவின ரல்லர். தருணத்திற் குதவாதார் நண்பரல்ல. குழந்தை யில்லா வீடு வீடல்ல.

691. என் அரிய நண்பர்களே! நான் கண்மூடிய பின்பு நீங்கள் மயா னம் வரைக்கும் வருவீர்களா? அல் லது ஜாடையாய் உங்கள் வீட்டி லேயே இருந்துவிடுவீர்களா? நான் பாயிற் படுத்தால் மருந்து தேடிக் கொடுப்பீர்களா? அல்லது மறைந்து கொள்வீர்களா? கிருபை கூர்ந்து நான் சுகமாய் இருக்கிற இப்பொழுதே அதைச் சொல்லிவிடுங்கள்.

692. அந்த மனிதன் நம்மீது கோபமாய் உர்ரென்று இருந்தால் அதை நாம் அறியாத் தன்மையாக, அதையே கவனிக்காததாகவே நமது வேலையைப் பார்த்துக்கொண்டு போய் விட்டால் அந்த மனிதன் ஏமாறிச் செயலற்று அடங்கிவிடுவான்.

நிருப நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

நமது நிருப நேயர்களுக்கு அறிவிப்பது யாதெனில், தங்களால் தயாரித்தனுப்பப்படும் வியாசங்களில் சர்க்கார் சட்டங்களுக்கு விரோதமாயும், காங்கிரஸ் விஷயமாயும், அடக்குமுறை சட்டத்தைப்பற்றியும், மற்றும் இராஜீய விஷயமாகவும் குறிப்பிட்டிருந்தால் அவ்வித வியாசங்களை நமது பத்திரிகையில் கண்டிப்பாய்ப் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை இதனுல் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.



(முன்பக்கம் 180-லிருந்து)

534. Friendship above all ties does bind the heart, And faith in friendship is the noblest part. LORD ORREY.

எல்லாவற்றையும் விட நட்பு மனதைக் கட்டுப்படுத்துகிறது. நட்பில் நம்பிக்கைக் கொள்வது மிக மேன்மையான செய்கையாகும். லார்ட் ஆர்ரீ.

535. Great souls by instinct to each other turn, Demand alliance, and in friendship burn. ADDISON.

பெரிய மனிதர்கள் இயற்கையாகவே ஒருவரோடொருவர் அந்யோந்யமாக இருக்கப் பார்க்கிறார்கள். ஒற்றுமையாக இருக்க முற்படுகின்றனர்; நட்பு என்பதினால் கவரப்படுகின்றனர். அடிஸன்.

536. 'Tis thus that on the choice of friends, Our good or evil name depends. GAY.

சிநேகிதரைத் தேர்ந்தெடுப்பதில் தான் நம்முடைய நல்ல அல்லது கெட்ட பெயரோ பொருந்தி இருக்கிறது. கே.

537. You'll find the friendship of the world a show! Mere outward show! 'Tis like the harlot's tears, The statesman's promise or false patriot's zeal, Full of fair seeming, but delusion all. SAVAGE.

நட்புஉலகம் வெறுங்காட்சி என்பதை நீ காண்பாய். வெறும் வெளித் தோற்றம்! அது விலைமகளுடைய கண்ணீர் போன்றது. அமைச்சனுடைய உறுதி மொழியையும், அல்லது வெறும் தேசாபிமானியினுடைய ஊக்கத்தையும் போன்று எல்லாம் சிறந்த காட்சியாகத் தோன்றும். ஆனால், எல்லாம் பிரமையே. சாவேஜ்.

538. A generous friendship no cold medium knows, Burns with one love, with one resentment glows; One should our interests and our passions be, My friend must hate the man that injures me. POPE.

பெருந்தன்மையான சிநேகிதம் உணர்ச்சியும் பற்றும் இல்லாமல் இருக்க முடியாது. அது அன்பினால் தீவிரமாகிறது. ஏதாவது ஒரு சிறு துன்பம் வந்தகாலத்தில் பிரகாசிக்கும். அப்படிப்பட்ட நண்பர்களின் நோக்கங்களும், மனப்பான்மைகளும் ஒன்றாகவே இருக்கவேண்டும். எனக்குக் கெடுதி செய்தவனை என்னுடைய சிநேகன் வெறுக்கவேண்டும். போப்.

539. Friendship, mysterious cement of the soul. Sweetener of life, and solder of society. BLAIR.

சிநேகம் ஆத்மாவை ஒற்றுமைப் படுத்தும் ஒரு மறைவான பொருள்!

பகைவர்களிடத்திலே சிங்கம் போன்று கர்ஜித்திடுக. ஆனால், தம்மவரிடையே அடக்கம் பூண்டிடுக. அன்பினரிடமோ அடிமைப்படுக.

வாழ்க்கையை இன்புறச் செய்வது; சமூகத்தைக் கட்டுப்படுத்துவது.
பிலேயர்.

540. Friendship is still accompany'd with virtue, And always lodg'd in great and gene'rous minds.
TRAPP-ABRAM.

நட்பு உண்மையைத் தொடர்ந்து வருவது; அது விசேஷமாகப் பெரிய மனதும் தரும குணமும் உடையவர்களிடமே தங்கியிருக்கும்.
டிராப்-ஆப்ராம்.

541. First on thy friend deliberate with thyself; Pause, ponder, sift; not eager in the choice, Nor jealous of the chosen; fixing, fix;— Judge before friendship, then confide till death.
YOUNG.

உன்னுடைய சிநேகனைப் பற்றி உனக்குள்ளாகவே முதலில் ஆராய்ந்து பார்! நிதானி, சிந்தி, ஆராய். தேர்ந்தெடுப்பதில் ஆவல் கொள்ளாதே! தேர்ந்தெடுத்தபின் பொறாமை கொள்ளாதே. பொருந்தியபின் பொருந்தி நில்—நட்பிற்குமுன் விசாரித்துத் தீர்மானி. பிறகு சாகும் பரியந்தம் சார்ந்து நில்.
யெங்.

542. Reproach or mute disgust, is the reward of candid friendship, that disdains to hide. Unpalatable truth. SMOLLETT.

தாக்ஷிணையும் அருவருப்பும்—மனதிற்கு இஷ்டமில்லாத உண்மைகளை ஒளிக்க விருப்பமில்லாத—வெளிப்படையான நட்பின் சன்மானங்களாகும்.
ஸ்மாலட்.

543. And what is friendship but a name, And charm that lulls to sleep, A shade that follows wealth or fame, And leaves the wretch to weep.
GOLDSMITH.

நட்பு என்பது பெயரே யொழிய வேறொன்று மில்லை; தூக்கத்தை உண்டுபண்ணும் மந்திரம்; செல்வத்தையோ அல்லது கீர்த்தியையோ நாடிச் செல்லும் நிழல்; ஏழ்மை ஸ்திதியி லுள்ளவர்களைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு நீங்கும். கோல்ட்ஸ்மித்.

P. G. குலசேகரன்.

முக்கிய குடும்ப காரியத்தைக் கெடுக்காதே.

குடும்பத்தின் பொதுவானதும் முக்கியமானதுமான காரியம் முதலில் நிறைவேறட்டும். பின் நமக்குள்ளிருக்கும் குடும்ப சம்பந்தமான சில்லரைச் சச்சரவுகளைச் சுலபமாய்த் தீர்த்துக்கொள்ளலாம். அந்தச் சச்சரவுகளைத் தற்சமயம் காண்பித்துக்கொண்டு குடும்பத்தின் பொதுவானதாயுள்ள காரியத்தை இப்பொழுது கெடுக்கவேண்டாம். கெடுக்கும் நோக்கத்துடன் சச்சரவை வெளியில் இழுக்கவேண்டாம்.

'காலி'களும், துஷ்டர்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் தோன்றுவர்.



போடு தோப்புக்கரணம்!

("கா — கூ" எழுதியது.)

(முன்பக்கம் 170-லிருந்து.)



"எனக்கு ஒரே பிள்ளைதான். ஆகையால், அவன் விஷயத்தில் எனக்கு எதையும் குறையுடன் செய்ய மனம் இல்லை. தவிரவும், பெண்ணுக்குத் தாங்கள் போடவேண்டுமென்று கேட்கும் நகைகளையும் மற்றவையும் என் குழந்தைக்குத்தானே?......"

"அதுசரிதான், நானும் பெண்ணை விற்றுச் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணவில்லை. எப்படியாவது அவள் சுகமாக வாழ்க்கைப் பட்டால் போதும்."

"வயது —'எல்லாம்' பெரியவள் தானே?"

"என் அப்படிக் கேட்கின்றீர்?"

"இல்லை — இல்லை; ஜாதகப் பொருத்தம்?"

"இதோ இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே மிராசுதார் தன் பெண்ணின் ஜாதகத்தைக் கொடுத்தார். வியாபாரி வயது பதினேழு முடிந்துவிட்டதென்று கணக்கிட்டு முடிக்கவும், தான் 'எல்லாம்' பெரியவள்தானு என்று கொண்டிருந்த சந்தேகம் ஓடிப்போய் விட்டது. ஆகவே, அவருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவு சொல்லி முடியாது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியாது போமோ?' வியாபாரியின் சந்தோஷத்தை அவரது முகத்தால் ஊகித்துத் தெரிந்துகொண்ட மிராசுதாருக்கும் மனம் பூரித்துவிட்டது. ஏன்? தனது பெண் இவருடைய பிள்ளைக்குப் பொருத்தமானவளென்று எண்ணியே வியாபாரி சந்தோஷிக்கின்றார். அதிலும் நம் பெண்ணை நன்றாகப் பார்த்துக் கொண்டவர். ஆகையால், இவருடைய பையன் நம் பெண்ணுக்குத் தக்க உயரமானவன்தான் என்று நிதானித்துக் கொண்டார்.

ஃ

பெண்ணின் தகப்பனும் சரி, பிள்ளையின் தகப்பனும் சரி—'எப்படியாவது கல்யாணம் முடிந்து விட்டால் போதும்' என்றிருக்கின்றனர். எனவே, ஒருவர் கேட்பதெல்லாம் கொடுக்கத் தயாராகவிருக்கின்றார்; மற்றவர் கொடுத்ததை வாங்கிக்கொள்ளத் தயாராகவிருக்கின்றார். இவ்விதத்தில் மனப்பொருத்தம் தோன்றிவிட்டால் கல்யாணம் நடைபெற வேறென்ன பொருத்தம் வேண்டும்? முகூர்த்த நாள் நெருங்கிற்று.

காணமற்போன பொருளுக்குத் தன்னுடன் அனுதாபப்படுவோர் இல்லாமற் போவது வெகுவாய்த் துக்கிக்கத்தக்க பரிதாப சம்பவமல்லவா?

"அடா பயலே! என் சாமர்த்திய மெல்லாம் நேற்று வரையில்தான். பெண் பேசி "பரிச்சம்" போட்டு முகூர்த்தம் வைத்தாகி விட்டது. தெரிந்ததா? இனி தாலி கட்டுவது உன்னுடைய வேலை. ஏனென்றால், முக்கியமான பொருத்தம் சரியில்லை யென்று தோன்றுகிறது. அதாவது, அவன் உன்னைவிடக் கொஞ்சம் உயர மென்று சொல்லிக் கொள்ளுகிறார் கள்" என்றார் வியாபாரி.

தாய் மாமன்:—"அந்தக் கவலை உங்களுக்கேன்? நான்தானே மாப் பிள்ளைத் தோழன். தாலி கட்டும் வரையில் பெண்வீட்டார் பார்க்கும் படியாக நடக்காம லிருந்துவிட்டால் சரிப்பட்டு விடுகிறது."

செட்டியார்:—"நின்றுகொண்டு தானே தாலி கட்டவேண்டும். நமது பையன் குள்ளன் என்று தெரிந்து விடுமே."

"அந்தச்சமயத்தில் என்ன செய்வ தென்று எனக்குத் தெரியும்" என்று சொல்லிச் சமாதானப் படுத்தினர்.

இவ்விதமே கல்யாணப்பெண்ணின் வீட்டிலும் 'பெண்ணின் தென்ன மரத்து உயரம் வெளிவராமலிருக்க வேண்டிப் பெண்ணை நன்ருகக் குனிந்து உட்காரவைத்துச் சரிசெய்ய வேண்டும்' என்று அதற்கு வேண்டிய போதனைகளைப் பெண்ணுக்குக் கற்பித்தார்கள். நெட்டையும் குட்டையும் சேர்ந்தாலென்ன மோசம்? இனி போடப்போகிற குழந்தை குட்டிகள் குறைந்துவிடப் போகிறார்களா? அது ஒன்றுமில்லை! பின்னென்ன?

ஃ

முகூர்த்தத்திலும் இருதரப்பின ரும் தங்களுடைய குறையை மறைத் துக் கொள்ளுவதிலேயே கவனம் செலுத்தினரே தவிர மற்றவருடைய நடவடிக்கைகளைக் கவனிக்கவில்லை. புரோகிதர் பூர்வாங்கச் சடங்குகளை யெல்லாம் முடித்துக் கொண்டார். தாலி கட்டவேண்டியதுதான் பாக்கி. "செட்டியாரவாள்! என்ன இன்னம் தாமதப் படுத்துகின்றீர்கள். நாழிகை பத்தேகா லாகிவிட்டது. கடகலக்கி னத்தில் ஒரு நாழிகைதான் பாக்கி இருக்கின்றது" என்ருர்.

"என்னுல் ஒருவிதத்திலும் தாமத மில்லையே" என்று வியாபாரி சொல்ல,

மாப்பிள்ளையின் தாய்மாமா குறுக் கிட்டு, "என்ன ஐயரே! நெய்யெல் லாம் நெருப்பில் கொட்டிவிட்டீரா— இல்லையா?"

புரோகிதர்:—"ஏன்—எதற்காகக் கொட்டுவது?"

தாய் மாமா:—"அக்கினி— ஓமம் எல்லாம் முடிந்து விட்டதா என்று கேட்டேன்."

புரோகிதர்:—"ஆ ஹா! திருமங் கல்ய தாரணந்தான் பாக்கி."

தாய் மாமா:—"சம்மந்தி! திருமங் கல்யம் எங்கே?"

சம்பந்தி:—"இதோ — இருக்கி றது" என்று ஐயரிடம் கொடுத்தார். ஐயரும் மந்திரம் ஓதிக்கொண்டே தாய்மாமன் தனக்குத் தெரிவித்திருந் தபடி மாப்பிள்ளைக்குத் தாலிகட்டும் தந்திரத்தையும் சொல்லிக் கொடுத்து விட்டார். மேளம் "தட பட தட பட" என்று அடிக்கின்றது. பாண்டு வாத்தியம் "டமடம, டமடம" என்று ஒலிக்கின்றது. வேதியர் வேதம் ஓதுகின்றனர். ஸ்திரீகள் மங்க ளம் பாடுகின்றனர். மற்றவர் புஷ்பம்

"அவர் மனது எவ்வளவு புண்பட்டிராது?" என்று சொல்லத்தக்க தரு ணங்கள் எவையெவை? நீர் புண்படுத்தியது எத்தனை தடவைகளில் ஐயனே?

சந்தனம் மஞ்சளரிசி முதலியவை வாரி இறைக்கின்றனர். மாப்பிள்ளை தாலியைக் கையிலெடுக்கவும் மாமா கிளம்பினர்.

தாய்மாமன் :—"என்ன ஐயரே! கீழே தயிர் பால் நெய் வாழைப்பழம் — இதையெல்லாம்—ஓமம்பண்ணிய வைகளைக் காலால் மிதித்துக்கொண்டு தாலி கட்டுவதா?"

புரோகிதர் :—"இல்லை — வேண் டாம்; இதோ கையால் தள்ளி விடு கின்றேன்."

தாய்மாமன் : — "போதும் — போதும்; அந்தப் பலகையை இப்ப டித் தள்ளும்" என்றார். பலகையைச் சமீபத்தில் போட்டார். அப்பொழு தும் விடவில்லை. "இந்தப் பலகை மீதுகூட நெய் ஊற்றிவைத்தால் தான் நீர் அக்கினிவளர்த்து ஓமம் பண்ணிய ஜம்பம் தெரியும்போலிருக் கிறது."

புரோகிதர் : — "அடாடா! இது வும் குற்றமா? வேறு பலகை போடு கின்றேன்"

தாய்மாமன் :—"சரிதான் வேறு பலகை கொண்டு வருவதற்குமுன் உம்முடைய கடகலக்கினம் கடந்து போகும்" என்று சொல்லிக்கொண் டே பக்கத்திலிருந்த கம்பளி மூட் டையை இழுத்துப் பலகையின்மீது தள்ளினர். இந்த சமிக்ஞையை அறி ந்த மாப்பிள்ளையும் திடீரென்று அதன்மீது ஏறி நின்று கொண்டு தாலிக்கயிற்றை பெண்ணின் கழுத் தில் முடிந்துவிட்டார். பிறகு ஔபாச ஞதி சடங்குகளும் நடைபெற்றன. முகூர்த்தமும் இனிது முடிவடைந்து விட்டது. என்னே "மாமா"வின் சாமர்த்தியம்! தாலிகட்டிய பிறகு எல்லாக் கோணலும் நிமிர்ந்து சரியாய் விடுமல்லவா?

ஃ

"அவனின்றி ஓரணுவும் அசை யாது" என்பது போல் இப்படிப் பட்ட பொருத்தமான திருமணம் நடைபெற வேண்டுமென்பது இறைவ னுடைய கட்டளையாதலின் மானிட ராகிய நாம் அக் கட்டளையைக் கடந்து செல்ல இயலாதென்று சமா தானம் செய்துகொண்டனர்!

ஃ

நாட்கள் வாரமாக, வாரங்கள் மாதமாக, மாதங்கள் வருடமாக, வரு டங்களும் ஒன்றை யொன்று பின் தொடர்ந்து கல்யாணம் முடித்தபிறகு பத்து வருடங்களுக்கு மேலாகிவிட் டது. மூன்று பெண் குட்டிகளையும் ஒரு ஆண் குட்டியையும் நெட்டை யம்மா போட்டுவிட்டாள். வீடும் நிறைந்துவிட்டது. மாப்பிள்ளை குட் டையானாலும் குட்டிகளுக்குக் குறைவு ஏற்படவில்லை. மாப்பிள்ளையின் தகப் பனர் தன் பேரப் பிள்ளைகளோடு விளையாடியிருந்து, பிறகு வைகுண் டம் கைலாசம் பார்க்கச் சென்றார்.

ஃ

இப்போது நெட்டை நாயகியே வீட்டு ராணி. அவளே எஜமானி. அவள் இட்டதே சட்டம். அம்மா சொல்லும் வார்த்தைக்கு ஐயா பதில் சொல்லமாட்டார். அம்மாவின் முழங் காலுக்கு அருகில் ஐயாவின் உயரம் எட்டும். அம்மா உத்திரவிடும்போது கீழேயிருந்து தென்னமரத்திலுள்ள தேங்காய்க் குலைகளைப் பார்ப்பது போல ஐயா அவர்கள் அம்மாவின் திருவாய் அசைவதை அண்ணாந்து பார்த்து என்ன உத்திரவு வருகிறதோ அதன்படி நடந்துகொள்ள வேண்

எந்தக் காட்சி நெஞ்சுருகத்தக்கதா யிருக்கும்? அவரவர்கள் பட்ட புண் களையும் அநுபவங்களையும் நினைத்துப் பார்த்தால் இதற்குப் பதில் கிடைக்கும்.

டும். இல்லாவிடில் அம்மாவின் தொங்குகிற கைவிரலுக்கு அருகிலுள்ள ஐயாவின் தலையில் பலமானகுட்டு விழுந்து விடும். ஆகவே, ஐயா அடங்கிக்கிடக்க வேண்டியவரானார். இருதரப்பினரும் கோபம் கொண்டாலல்லவோ சண்டையும் சமாதானக் குறைவும் ஏற்படும். எப்பொழுதும் ஐயா மனையாளுக்குப் பயந்து அடக்கத்துடன் நடந்து வந்தாரென்றால் ஒற்றுமைக்கு இத்தம்பதிகளிடத்தில் எவ்வாறு பங்கமுண்டாகும்?

ஃ

இரவு மணி ஒன்பதுக்கு மேலாகி விட்டது. தினந்தோறும் எட்டுமணிக்கெல்லாம் கடையை மூடிக்கொண்டு வீட்டுக்கு வரும் வழக்கமுடையவர் இன்றுதினம் இன்னும் வரவில்லை! தவிர, வீட்டுச் சாமான்களும் இன்று வந்து சேரவேண்டும். அதையும் காணோம். எனவே, சிறிது மனக்கவலை கொண்டு தெருவீதி சென்று வழிபார்த்து நின்றாள். அரைநாழிகை, ஒரு நாழிகை, இரண்டு நாழிகையுமாயிற்று. வாசற்படியில் நின்று பார்த்தாள். சிறிது தூரத்தில் ஓர் குள்ளன் தலையில் ஒரு பெரிய கூடையுடன் வருவதைக் கண்டாள். அவ்வுருவம் சமீபத்தில் வரவும் தன் புருஷனென்று தெரிந்து நாணத்தால் சரீரம் நெளிந்தவன் போலும், "நேரம் சென்றுவரக் காரணமென்ன?" எனக் கேட்கவும் நாவெழாதவள் போலும் நடித்தாள்! தலைமீதுள்ள கூடையில் இரண்டு வீசை புளி, இரண்டுபடி உப்பு, எட்டுபடி அரிசி, இவைகளுக்கு மேல் கடைசாவியும், பணப்பையுமிருந்தது. பணப்பையைக் கண்டதும் அவளுக்கு ஏதோ ஓர் எண்ணம் தோன்ற, குள்ளன் கூடையைக் கொண்டுபோய் உள்ளே வைக்குமுன் அது மாயமாகப் பறந்து போய்விட்டது. ஐயா வாய்விட் டழுதார்.

ஃ

அம்மாள்: — "பயித்தியமென்று எண்ணி எல்லோரும் உங்களை ஏமாற்றி விடுகிறார்கள்!"

ஐயா:—"என்ன உளறுகின்றாய். கூடையிலிருந்த பணப்பைக்கும் நீ சொல்லுவதற்கும் என்ன சம்பந்தம்?"

அம்மாள்:—"நீங்கள்தான் சித்திரக் குள்ளனாக விருக்கின்றீர்கள். ஆகையால், தலைமீது இருந்த பையை எடுத்தவன் அதிகமாகக்கூட குனிந்திருக்கமாட்டான்."

ஐயா:—"நிலுவை வசூல் செய்து வைத்திருந்தேனே! ஐயோ!—முன்னூறு ரூபாய்க்குமே லிருந்ததே!"

அம்மாள்:—"நன்றாகப் போகட்டும்; அவ்வளவு அஜாக்கிரதையாக விருந்தால் அப்படித்தான் போகும்."

ஐயா:—"என்ன அஜாக்ரதை?"

அம்மாள்:—"பணப்பையை மடியில் வைத்துக்கொண்டால் என்ன கேடு?"

ஐயா:—"அப்படித்தான் செய்திருக்க வேண்டும். 'அதிக நேரமாகி விட்டதே' என்று அவசரமாகச் சாமான்களை யெல்லாம் கூடையில் போட இந்தப் பையையும் அவைகளுடன் போட்டேன்—."

அம்மா:—"ஆகையால், அது தொலைந்து போய்விட்டது—."

ஐயா:—"ஐயையோ தெய்வமே!"

அம்மா:—"ஐயோவும் நெய்யோவும் பயன்படாது. போடு தோப்புக் கரணம்."

கல்வியில்லாத ஜனங்கள் வெறும் மிருகங்களுக்கு நிகராவார்கள். "வித்யாவிஹீனபசு" என்பது பெரியோர் மொழி.

ஐயா :—" ஆ! என் கண்ணே! நீ தானு எடுத்தாய்?"

அம்மா :— " ஆ—கண்ணும் மூக்கும் பலிக்காது. போடு தோப்புக்கரணம்! நூறு உடனே போடு!"

ஐயா :—" நூறல்ல; உன் விஷயத்தில் ஆயிரம் வேண்டுமானுலும் போடுகின்றேன்; பை உன்னிடம்தானே இருக்கின்றது? அதை நிச்சயமாகச் சொல்லு."

அம்மா :—" அதைப்பற்றிப் பின் பேசிக்கொள்ளலாம். முதலில் வலது காதை இடது கையால் பிடித்துக் கொள்ளுங்கள்."

ஐயா :—" இதோ."

அம்மா :—" இடது காதை வலது கையால் பிடியுங்கள்!"

ஐயா :—" அப்படியே."

அம்மா : — " ஆரம்பிக்கலாம் — ஒன்று."

ஐயா :—" ஒன்று."

அம்மா :—" இரண்டு."

ஐயா :—" இரண்டு."

அம்மா :—" மூன்று."

ஐயா :—" மூன்று—போதாதா?"

அம்மா:—" இல்லை—இல்லை! அஜாக்கிரதைக்காக முதலில் நூறும், பணம் பையுடன் வேண்டுமானுல் ஐந்நூறும் போடவேண்டும்."

ஐயா :—" அடா கடவுளே! கால்விட்டுப் போகுதே!"

அம்மா :—" கடவுள் என்ன செய்யக் கூடும்? பணப்பையை வாங்கிக் கொடுத்துவிடுவாரா?"

ஐயா : — "இல்லை; உன்னைத் தொட்டுத் தாலிகட்டித் தோப்புக்கரணம் போடும் சுகமாவது அனுபவிக்க வைத்தாரே! போதும் போதும்!"

அம்மா :—" ஆம்! ஆம்! இந்தக் குள்ள உருவத்தைத் தேடி மாலையிட்டுத் தோப்புக்கரணம் வாங்கும் சுகமாவது அனுபவிக்க வைத்தாரே என்று தான் நானும் என் தலையெழுத்தென்று சந்தோஷப் படுகிறேன்"

ஐயா :—" இவ்வளவு தென்னைமர உயரத்துக்குக்கூட ஒரு ஏமாந்த மாப்பிள்ளை மடையன் அகப்பட்டானே!"

அம்மா :—" என் முழங்கால் உயரத்துக்கு ஒரு குள்ளக் கண்ணாளன் அகப்பட்டாரே. பெரிய பாக்கியம்!"

இந்த ஸம்பாஷணைகளுக்குப் பிறகு ஐயாவுக்கும் பணப்பை கிடைத்தது. ஐயாவும் அம்மாவும் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். நண்பர்காள்! நீங்கள் இந்தத் தம்பதிகளை ஆசீர்வதித்து, இவர்களைப்பற்றி எழுதிய என்னையும் கௌரவப்படுத்த வேண்டுகின்றேன்.

முற்றிற்று.

ஒற்றுமை யின்மை அவநம்பிக்கையினின்றும் உதித்த ஒருநிகழ்ச்சி. அவநம்பிக்கை அன்புக் குறைவினுல் ஏற்பட்ட சங்கதி. அன்புக்குறைவோ ஜன ஸமூகவாழ்விலும், கடவுளிடத்திலும் நம்பிக்கைக் குறைவினுல் ஏற்பட்டுள்ளது, இது நமது சொந்த நாகரிகத்தில் பற்று விட்டுப் போனதின் பலனுகும்; மத வுணர்ச்சி அற்று வீழ்ந்ததின் பலனுகும். இக்குறைகளைப் படிப்படியாக நிவர்த்திதுக்கொண்டு மேலே சென்றுல் ஒற்றுமையைப் பெறலாம்.



ஏகநாதன்

VI

முன் குறிப்பு:—ஏகநாதன், பசித்திருந்த தோட்டிச்சிக்கும் தோட்டிக்கும் அவர்களைச் சேர்ந்தோருக்கும் விருந்து உபசரித்து அனுப்பியதைக் காணச் சகியாத அந்தணர்கள் "சிரார்த்ததினத்தில் பிராமணர்களுக்கு இட்டுப் பிதுர்க்களைத் திருப்திசெய்யவேண்டியிருக்க, மூடத்தனமாய் தீண்டாதவர்களுக்கு இட்டுப் பிதுர்க்களை ஆழ்நரகில் வீழச் செய்தனையே நீசா!" என்று மிக்க கோபத்துடன் ஏகநாதனைத் தூற்றுகின்றனர். அயற்றைப் பாக்களில் காண்க.

சினம் மிகுந்த
முதல் பார்ப்பனன் :—"இன்றோடு ஒழித்தனை : உன்னோடு அழிந்தது
பிரம்ம தத்துவ தர்மமும், அதனோடு
அணைத்தனை அறிவின் விளக்கை : காரிருள்
சூழக் காரணம் ஆனாய் : அறிவிலாத்
தொழிலால் என்றுமே தீராப் பாபமும்
அழியா நரகில் ஆழ்ந்திடச் செய்தனை.
அந்தணர் இதயம் வநதவக் குருதியை
சந்தனம் போலச் சாற்றினாய் நெற்றியில்
பன்னெடுங் காவப் பிராமமண் ணியம்
உன்னுடை நீசத் தன்மையால் அந்தோ!
அஞ்ஞான இருளில் அஞ்சாச் செய்கையால்
அழ்ந்தது அந்தணர் ஒழ்ந்தா : ஒழிந்தார்
தூய நீற்றையே நேசமாய்ப் பூசினாய்
உன்னுடல் முழுதும்"—

2-ம் பார்ப்பனன் :— "என்ன நீ செய்தாய்?
உன்னத வானம் உன்னரு மிலேச்ச
வினையால் எண்ணரும் விசனமே உருவாத்
தோன்றும் தோடமே உருவாத் தோன்றிய
நீச! இன்றுகாண் ஞாயிறும் கோதிப்போடு
வானிற் றேன்றும் முன்னவர்க் கிட்ட
மட்டிலாக் கேட்டால்"—

அது குறும்புத்தனயான பொய்யென்று பட்டப்பகல்போல் விளங்கிவிடும் வேளையும் மின்னுக்கு ஒரு பொழுதில் எப்படியோ தானாக வந்துவிடுகிறது.

3-ம் பார்ப்பனன் :— "கெட்டனை தூர்த்த!
எட்டுத் திக்கும் கெட்டன உன்னால்
அறுந்து விழுந்த தறிவெனுந் தொடர்பு
பஞ்சமர் பறையர் எஞ்சிய மற்ருேர்
துஞ்சுதல் விடுத்தார்! அஞ்சுதல் ஒழித்தார்
மிஞ்சுவர் நம்மையும் : மிறட்டி யடிப்பர்—

முதல் பார்ப்பனன் :— என்னநீ அறிந்தாய்? என்னநீ கண்டாய்.
எண்ணிலாக் காலமாய் மண்ணிடை நிலவும்
வேதமும் பொருளும் சாதனை பலவும்
இன்றுனால் அழிந்த ஒன்றிலா தாகின.
பெற்றவுன் அறிவை எற்றிநீ உதைத்தாய்
ஈனக் குலத்தவர்க் கானஇச் செய்கையால்
எம்மை மதிப்பரோ இம்மியும் இனிமேல்?"—

2-ம்பார்ப்பனன் :— "என்னவுன் தீரம்! முன்னவர்க் கடுத்ததாம்
இத்தினம் ஒன்றில் எத்தனை இழிஞரை
உண்ணநீ செய்தனை எண்ணருங் காலமாய்
விள்ளரும் அறிவைக் கொள்ளையாய்க்கொண் [ட
முப்பிறப்பாளர் ஒப்பியே சாட்டிடும்
முன்னரே அன்னுர் மனமோ முன்னோர்
அறிவுப் பொக்கிஷம் அதனைப் பிறப்பினுற்
பெற்றுளர் : யோசனை சற்றும் இலாது [தோ
அவரையும் ஒதுக்கியே எவர்க்கென இருப்ப
அதனையும் செய்திலை அதமநீ! அந்தோ!
பிதுர்க்கடம் உலகில், இதுநிலை அறியா
மண்ணுல கிருந்தே எண்ணுடேர் உதவி
இன்றே வருமென நின்றுனைப் பார்ப்பார்
நின்ருர் எவ்விதம் நின்னையும் பொறுப்பார்?

3-ம் பார்ப்பனன் :— "ஆண்டுதோ ருண்டாய் வேண்டியே நிற்பர்
ஆன்ம விடுதலை அளிக்கும் எமையே—
பிறர்பொருட் டடைவாய் பேணியே நாஞ்செய்
திறமுள பலவகை அறவழி அனைத்தும
அழியா நிற்கும் கழிபேர் நிலையாம்
மோட்ச மெனுமோர் வீட்டைப் புகுத்தும்"

ஒரு ரூபாயைக் கொடுத்து இரண்டு அணுவுக்கு மட்டும் சாமான் வாங்கு கையில் கடைக்காரர் வெகு பிரியமாய் 'உட்காருங்கள்' என்று சொன்னுல், ரூபாய்க்குச் சில்லரை யில்லாமல் கடைஆளை வெளியில் வாங்கி வருமபடி அனுப்பியிருப்பதாக அதற்கு அருத்தமாம். இந்த வியாபார நட்பு நீடிக்குமா?

(வழக்கம்

முதல் பார்ப்பனன் :—"தோன்று தொட்டாத் தொடர்ந்தவோர்
இன்றனுல் அழிந்த இழிகுணப் பாதக !
பிதுர்க்கடம் விருப்பும் ஒதுக்கப் பட்டது—
தென்புலம், தெய்வம், இன்னுயிர், வீடு
இன்னவை அனைத்தும் இன்றென ஆகின.
அவையோடும் ஒழிந்தார் அந்தணர் அனைவரும்
அவரே பிர்மப் புதல்வராம் அவர்தம்
பிறப்பு நின்றால் பிர்மத் தெய்வம்
பிறப்பதும் இலையால் பிறகும்————
உன்னத வனப்பும் மண்ணிலா வஞ்சிறு
பிர்மத் தெய்வப் பலவும் என்றும்
பிறவா திருக்கப் பண்ணினம்"—

2-ம் பார்ப்பனன் :— "மௌனமேன்
பேசாயோஉன் பேழ்வாய் திறந்து
நீசனே !

3-ம் பார்ப்பனன் :— "ஐயகோ! நாசனே என்னதான்
செய்தனை?"

மு. துரைப்பிள்ளை.

வாடகை வீட்டுக்காரர்களின் உறவு !

ஒரு கடையில் ஒரு சாமானை வாங்கும்போது நமக்கும் கடைக்காரனுக்கும் எவ்வளவு உறவு உண்டோ, அவ்வளவு உறவே நமக்கும் நாம் வாடகைக்கு இருக்கும் வீட்டின் சொந்தக்காரருக்குமாம். சாமான் வாங்கிய க்ஷணம் கடைக்காரனின் மகா உறவு (!) தீர்ந்துவிடுகிறது; வாடகை வீட்டை நாம் விட்டுத்தொலைத்தவுடன் அந்த வீட்டின் உறவும் முடிந்துவிடுகிறது. காசு நீட்டாவிடில் கடைக்காரன் சாமான் தரான். வாடகை ரூபா நீட்டாவிடில் வீட்டுக்காரன் வீட்டைக் காலி செய்யச்சொல்லி அத்துடன் நம்முடன் குலாவிய உறவையும் முடித்துவிட்டு, அதிகமிருந்த 3-தினத்து வாடகையும் கேட்பான். வாடகை வீட்டினுடையவும் அவ்வீட்டுக்காரனுடையவும் நேசமும் உறவும் இவ்வளவு தான். இந்த நிலையிலே என்ன குலாவுதலோ, என்ன நேசமோ, என்ன உறவோ, என்ன பல்லிளிப்போ? ஹா! ஹா!

சில மனுஷ்யர்களைப் பார்க்கும்பொழுதே அவர்கள் நரித்தனம் முகத்தில் தெரிகிறது. பாவம்! அந்த அவர்களால் மறைப்பதற்கு முடியவில்லையே!





தைரியநாத முதலியார் நேற்று காலை லண்டனிலிருந்து திரும்பினர். அவர் நமது கடையில் முன்பு ஒரு அங்கத்தினராயிருந்தவர். மாத சந்தாவான நான்கணாவுக்கு ஒரு வருஷம் அலைய வைத்துவிட்டு அதைத் தராமலே லண்டனுக்குப் போய்விட்டவர். இத்தகைய தர்மவான் லண்டனில் ஜான் பிஷராட் வீதியிலுள்ள ஊமைப் பிள்ளைகளின் பள்ளிக்கூடத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தாராம். அவரை நமது அங்கத்தினர் ஒருவர் பேட்டி கண்ட போது, "அங்கு நான் செய்த தர்மம் தர்மத்திற்கல்ல; என் பெயர் பல பத்திரிகைகளிலும் என் படத்தோடு வந்து நான் ஒரு பெரிய மனிதனாவதற்கே தந்தது" என்று கூறினாராம். தைரியநாதர் குட்டையான மனிதர். இரண்டாயிரம் ரூபாய் கொட்டிக்கொடுத்தும்கூட அவர் உயரத்தில் ஒரு அங்குலம் கூட வளர்ந்து பெரிய மனிதராகவில்லை. பாவம்!

ஃ

ஏமாந்த செட்டியார் நமது கடைக்கு வந்து பின்வரும் சங்கதியைத் தெரிவித்துக்கொண்டார். "ஒரு தனவந்தர் விரும்பியவாறு எனது நகைப்பெட்டியை எடுத்துக்கொண்டு அவர் தந்த விலாஸப்படி வீடுதேடிச் செல்லுகையில் வழி தவறி வேறு தெருவிற் சென்று அவர் வீட்டை விசாரித்தேன். ஒருவன் ஒரு வீட்டைக் காண்பித்துவிட்டுத் தானும் உள்ளே நுழைந்து நான் தேடிவந்துள்ள விவரத்தைச் சொன்னான். உடனே உள்ளிருந்து லாவண்ய சுந்தரியொருத்தி வந்து, என்னை அறையில் இருக்கச் செய்து, "எஜமானர் சீக்கிரம் வந்துவிடுவார்; நீங்கள் கொண்டுவந்த நகையை எடுங்கள்!" என்றாள். நானும் 800-ரூபாய் பெறுமான வைரத் தோடு ஒரு ஜதையை எடுத்துக்கொடுக்க, அவள் அதை யணிந்துகொண்டு, "என் அருமையான காதலரே! தங்களின் அன்பை என்னென்பேன்?" என்று கூறி, என்னையணைத்து முத்தங்களிட்டாள். அது ஒரு தாசி வீடு என்று பிறகு தெரியவந்தது. நான் நகையைத் தரும்படி கேட்க, "என்னை வைத்துக் கொண்டிருந்தபோது போட்ட நகையை எப்படித் தரமுடியும்?" என்றாள். பிறகு நான் கோர்ட்டுக்குப் போக நேர்ந்தது. ஆயினும் என்ன, தாசியின் பலத்த படே படே சாக்ஷிகளால் நான் அவளை வைத்திருந்ததாகவே கோர்ட்டார் எண்ணி வழக்கைத் தள்ளிவிட்டனர். என்ன செய்வேன்" என்றார்.

ஃ

அல்லாபிச்சை பின்வருமாறு கூறினார்:—"என்னை அவதூறு செய்த பாவியை இரவு ஒரு கடையின் அருகே நான் காண—அவனது கரங்கள் தன்னை யறியாது கைகூப்ப—யானும் பழய அன்புடன் அவன்

பழய பெருச்சாளிகளை ஒழித்து, புதிய ரத்தத்தைப் புகவிட்டால் தான் ஊழல் தொலைந்து நிர்வாகம் உருப்படும். தொலைப்பது லேசில் இருக்கிறதா?

தோளில் கையிட்டுத் தழுவ—ஸமரஸமாக—நானும் மன்னித்திட—அவனும் தன் செய்கைக்குக் கண்ணீர்விட—அத்துடன் 'சென்ற ஸம்பவங்களை இருவரும் மறந்துவிடுவது' என்று முடிவுசெய்துகொள்ள — கடைசியில் ஒருவருக்கொருவர் விடைபெற்றுக் கொண்டு சாந்தமாகப் பிரிந்து வீடு சென்றோம். இது பரஸ்பரம் நேரில் சந்தித்துக்கொண்டதில் ஏற்பட்ட நன்மையாகும். எவ்வளவு விரோதம் முற்றினும் நேருக்கு நேராகப் பார்க்க வந்துவிட்டால் அது ஒருவித சமரஸத்திற்கு வழி செய்துவிடும். இந்த சமரஸம் கடிதங்கள் எழுதிக்கொள்வதில் நடக்காது, பலிக்காது" என்றார்.

ஃ

தாண்டவக்கோனின் வாக்கு :—"பரிசுத்த மனதிற்கு ஒரு வீரத்தன்மையும் ஜோதியும் இயற்கையிலேயே உளது. குற்றமுள்ள நெஞ்சினர் பரிசுத்தவானைக் காண வருகையில், அவனிடமுள்ள தூய ஜோதியைக் கண்டு பின்னடைந்து மெதுவாக விலகிப் போய்விடுகின்றனர். குற்றமுள்ள நெஞ்சுக்குத் தாங்கள் முன்னர் கூறி ஏசிய சொற்களும், நயவஞ்சகமாய் ஏமாற்றிச் சென்ற செயல்களும் நினைவுக்குவந்து நெஞ்சைத் துளைப்பதால், பார்ப்பதற்கு வந்துங்கூட முகம் நாணிக் கோணி, அகம் கூசி ஏதும் பேசாது மௌனக்கட்டைகளாய்ச் சென்றுவிடுகின்றனர். இது அவர்களின் கள்ளமனமே செய்யும் காரியம். மனதில் கபடமற்றவனோ அவர்களின் முன் செயல்களை நினைத்து விலகி மௌனமாகிவிடுகிறான். பொருந்தாத ஹிருதயங்கள் என்றும் பொருந்துவதில்லை. குற்றமுள்ள நெஞ்சுக்கு அவனையொத்த துஷ்டர்கள் கிடைத்தால் அப்போது வெகு கொண்டாட்டமாகிவிடுகிறது. மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில் காக்கையுகக்கும் பிணம்" என்றார்.

ஃ

இந்தச் சமயத்தில் நமது கடையின் அங்கத்தவர்களில் ஒருவரான உழைந்தகட்டைச் செட்டியாரைத் தேடிக்கொண்டு அவர் மனைவி வந்து வீட்டில் நகை காணாமற்போனதைப் பற்றி விவரமாய்ச் சொன்னார். அதற்கு உழைத்தகட்டை தமது மனைவியைப் பார்த்துச் சொல்லியதாவது :— "எப்பொழுது அந்த நகையைக் கழற்றினாயோ அதைச் சோம்பல் கொள்ளாமல் உடனே பெட்டியில் வைத்திருந்தால் அது ஒருபோதும் காணாமற்போயிராது. கழற்றிக் கீழே வைத்துவிட்டு மற்ற வேலைகளைச் செய்திருக்கிறாய். வேலைமுடிந்ததும் மறந்து எழுந்து போய்விட்டாய். பிறகு நினைவு வந்து அங்கு போய்ப் பார்க்க நகையைக் காணவில்லை. அங்கு அந்தச் சமயம் இருந்த பெண்ணின் மீது சந்தேகமாகி அவளை யழைத்துக் கேட்கிறாய். எங்கேயாவது எடுத்தவர்கள் கொடுப்பார்களா? வெகு சுலபத்தில் நல்ல லாபமாய்க் கிடைத்த நகையைக் கைவிடுவார்களா? அவர்கள் ஆயிரம் சத்தியங்கள் செய்து தாங்கள் எடுக்கவேயில்லை யென்று தான் சொல்வார்கள். கூடக் குலாவுவதும், மறந்துவைத்ததைச் சுருட்டிக்கொள்வதும், இரவல் பெற்று விழுங்கிவிடுவதும் எங்கும் உள்ள வழக்கமே. கடைசியில் நகைபோனது போனதே. அந்த நகை செய்யத் தட்டானிடம் எத்தனை தடவை நான் அலைந்திருப்பேன்? எவ்வளவு கஷ்டப்பட்டு அதற்குப் பவுன் வாங்கியிருப்பேன்? அந்த என் பாடு உன் மூளையில் ஏறவில்லையே? 'இங்கே

கழற்றிவைத்தால் எங்கே போய் விடப் போகிறது?' என்கிற உன்னுடைய அசங்காரபுத்தியும், அலக்ஷிய சுபாவமும், அநியாயமாக ஒருநகையை இழந்துபோகும்படி செய்துவிட்டது. நீ எடுத்ததாகச் சொல்லும் பெண் உண்மையாகவே எடுத்திருந்தால் உன் பட்டித்தனத்தைக் காண்பித்து நீ ஏசின வச்சுகள் சரிதான். அவள் நிரபராதியா யிருந்தால் நீ ஏசியதில் எவ்வளவு தவித்துப்போயிருப்பாள்? இவ்வளவு அலங்கோலத்துக்கும் நீ நகையைக் கழற்றியதும் உடனே பெட்டியில் வைத்துப் பூட்டியிருந்தால் ஒன்றுமில்லையல்லவா? நகை போனதுமட்டுந்தானா? இன்றைய தினத்து ஸந்தோஷமும் தொலைந்து எவ்வளவு மனோவேதனை யுண்டாகி விட்டது? ஒரு பண்டம் வாங்க ஒரு பணம் செலவழிப்பதற்கு எவ்வளவோ யோசிக்கிற நிலையில் இப்படி அநியாயமாக—அஜாக்கிரதை காரணமாக ஒரு நகையைப் போக்கடிப்பதில் யாருக்கென்ன லாபமோ? புதிய நகை செய்வதைவிட இருக்கிற நகையைக் காப்பாற்றிக்கொண்டால் அதுவே புதிய நகையாகும். இருக்கிறதைப் போக்கடித்துவிட்டுப் புதிய நகை செய்வதில் யாது பயன்? உன்னுடைய மூடத்தனமும், சிரத்தைக் குறைவும், கவனமின்மையும் உன் வீட்டுக்காரனை எவ்வளவு துன்பப்படுத்திக் களைத்துப்போகும்படி செய்கிறதென்பதை யோசித்துப் பார். இனியாவது புத்தி வருமா? மறுபடியும் இப்படியேதானா? மூடமே! என் முன் நில்லாதே போ!" என்றார். அவர் மனைவியும் மௌனமாய்ப் புறப்பட்டுச் சென்றாள்.

ஃ

அவள் போனபின்பு உழைந்த கட்டைச் செட்டியார் மிக்க மனோவேதனையுடனே சொன்னதாவது :— "ஏதோ நான் கஷ்டப்பட்டுப் பாத்திரங்கள், நகைகள் வாங்கினால் அதை என் மனைவி வெகு சீக்கிரம் போக்கடித்து விடுகிறான். இதற்காக நான் அவளிடம் சண்டையிட்டு லாபமென்ன? எத்தனையோ குடும்பங்களில் கணவன் பாடுபட்டுத் தேடிய சொத்தை அவனுக்குப் பின் அவன் மனைவி தன் அறியாமையினால் அழித்துக் குடும்பத்தையே கடனுக்கு உட்படுத்தி விடுவதில்லையா? அதற்குச் செத்த கணவன் வந்து கோபித்துக் கொள்ள முடிந்ததா? எத்தனையோ புத்திரர்கள் தங்கள் தந்தை தேடிய சொத்தைப் பாழாக்கியுள்ளார். இறந்துவிட்ட தந்தை மீண்டும் வந்து கேட்டதுண்டா? அதுபோல், நான் நெற்றி வியர்வை கொட்டத் தேடியவற்றை எனக்குப் பிறகு என் மனைவி என்னென்னவாறாக உபயோகிக்கப் போகிறாளோ? முழுச்சொத்தையுமே அவள் பிரியப்படி செய்ய விட்டுவிட்டுக் கோவணம் கூட, இந்தத் தேகம் கூட, எனக்குச் சொந்தமற்று இவ்வலகினின்றும் பிரிந்துவிடவேண்டிய நிலையிலுள்ள நான். இந்தச் சொற்ப நகையையும் பாத்திரங்களையும் அவள் தன் அஜாக்கிரதையால் போக்கடித்து விட்டதற்காக அவளை நான் ஏன் வீணாகக் கண்டித்தும் கோபித்தும் துன்புறுத்தவேண்டுமோ? பத்திரமாக இழக்காது வைத்திருந்தால் அவளே நாளைக்கு அவற்றை அனுபவிக்கிறாள். இல்லாவிட்டால் எப்படியாவது போகிறாள். அவள் பாடு என்று விட்டுவிட்டு வீட்டில் இதற்காக எவ்வித கலகமுமின்றி யிருக்க விரும்புகிறேன். சமாதானத்துடன் என் நாட்களைமுடித்துக்கொண்டு போய்விடவேண்டுமென்பதே என் நோக்கம்" என்று வருத்தமாய்ச் சொன்னார். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

ஆணும் பெண்ணும்.

குடித்தனப் பாங்கின் மணம் இல்லத்தாசியைப் பொறுத்தது. மனைவி ஸ்தானம் வகித்த எல்லாப் பெண்டிர்க்கும் இல்லாள் என்ற பெயர் பொருந்தாது. தம் கணவன் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்து, ஒழுக்கமாகவும் சிக்கனமாகவும் குடித்தனம் செய்து, புக்ககத்தைத் தன்னகமாகக் கொண்டு, அவன் வாழ்வு தன் வாழ்வாகவும், அவன் தாழ்வு தன் தாழ்வாகவும் கருதி இல்லறம் நடத்தும் பெண்டிர்களே 'இல்லாள்' என்னும் பெயருக்கு உரியவராவார்கள். இது மாதிரியே கணவனும் இருத்தல் வேண்டும். தான் கைப்பிடித்த காரிகைக்குத் தான்தான் ஏற்ற துணையென்றும், தன்னையன்றி அவளுக்கு வேறு துணையில்லையென்றும் இவன் உணரவேண்டும். உணருதலோடின்றி அவளிடம் பக்ஷமாகவும், அன்பாகவும் நடந்து இல்லறத்தை ஒழுங்குடன் செலுத்துதல் வேண்டும். அப்போதுதான் குடித்தனம் சீர்பட்டுச் ஸ்ரேயமாய் நடந்தேறும்.

ஃ

சிலர், தம் பெண்களை அதிக செல்வமாக வளர்க்கிறார்கள். வேலையொன்றும் செய்ய விடாமல், 'பேசாமல் உட்கார்ந்து பூவேலை செய்து கொண்டிருந்து சாப்பாட்டு வேளையில் சாப்பிட்டால் அதுவே கஷ்டம்' என்று அவ்வளவு செல்வமாக வளர்க்கிறார்கள். தாம் எப்படி வளர்த்தார்களோ அப்படியே கொண்ட வீட்டிலும் இருக்க வேண்டும் என்று பல வருஷங்களாக நஷ்டமும் கஷ்டமும் அனுபவித்துப் பற்பல ஊர்கள் திரிந்து, கடைசியில் ஒருவனுக்குக் கொடுக்கிறார்கள். அவனோ விவாகம் ஆகிய ஒரு மாதம் வரையில் வெகு பக்ஷமாக இருந்துவருகிறான். அது ஆயதும் தன் சுயரூபத்தைக் காட்டத் தலைப்படுகிறான். "கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்" என்று பலபல குற்றங்களை அவன்மேல் போட்டு அந்த நல்லாளைப் பலவாறு இம்சித்து, உதையும் குத்தும்கூடக் கொடுக்கத் தலைப்படுகிறான். அவள், இரகசியமாகப் பெற்றோர்க்குக் கடிதம் எழுதுகிறாள். பெற்றோர் மிக்க வருத்தப்பட்டு ஓடி வந்து பார்க்க வரும்போது, புருடன் அவர்களைத் தன் வீட்டில் நுழையக் கூடாது என்று தடுக்கிறான். உடனே சண்டை உண்டாகிறது. முற்றுகிறது. குடும்பம் கலகமே நிறைந்து சிதைகிறது.

ஃ

வேறு சிலர், தம் பெண்ணைப் பணக்காரர்களுக்கே தரவேண்டும் என்று பணக்காரனையே பார்த்துக் கொடுக்கிறார்கள். அவனோ தன் பணச் செருக்கால் மாமனார் வீட்டையே மதிக்காமல், அவர்கள், எளிய நிலைமைக்குப் பணக்கார மாப்பிள்ளை வந்துவிட்டாரே என்று கடன் பட்

அவர்மேல் அவ்வளவு ஆத்திரப்படுவதேன்? சாபமிடுவதேன்? பகைமை கொள்வதேன்? அவருக்குள்ள கீர்த்தி தனக்கு வரவில்லையே யென்றுதான். அவர் ஒரு மூடனாயிருந்தால் எந்தப் பகையும் அவர்மீது கொள்வதில்லை.

டாகிலும் விருந்து செய்ய, அதைச் சரியாகச் சாப்பிடாமல் அதில் அதில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, ஒவ்வொன்றிற்கும் குற்றம் சொல்லி விட்டு, வைத்ததை அப்படியே வைத்து விட்டு எழுந்துவிடுகிறான். அவர்களுக்கு ஏதாவது இடுக்கண் உற்ற காலத்தும், அதைப் பாராமல் பராமுகமாக இருந்துவிட்டு அவர்களைத் தவிக்க வைக்கிறான். இதில் தன் மனைவியைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விடுகிறான். அவர்கள் "ஐயோ! இவன் மனம் கல்லா! இரும்பா!" என்று ஏங்கி அவனை நிந்திக்க முற்படுகின்றனர். சிலர் தாய் வீட்டுக்கு எந்த ஸம்பவத்துக்கும் அனுப்புவதேயில்லை.

ஃ

வேறு சில பெற்றோர்கள், தாங்கள் மூச்சுடன் இருக்கும்போதே தம் பிள்ளைகளுக்கு விவாகம் செய்து கண்ணாரப் பார்க்க ஆசைகொண்டு சின்னஞ் சிறு பருவத்தே—விவாகம் இன்னதென்று அறியா அந்த வயதிலே—கல்யாணம் செய்து வைக்க, கணவன் இளம் வயதிலேயே இறந்து விடுகிறான். பின் அந்தப் பெண்ணை—கணவன் சுகம் இன்னதென்று தெரியாத அந்தப் பெண்ணை—அமங்கலியாக்கி, மொட்டை யடித்து, மூலையில் உட்காரவைத்து விடுகிறார்கள். இம்மாதிரியாகக் கெட்ட குடும்பங்கள் அநேகம்.

ஃ

சிலர், தம் பிள்ளைக்குப் படித்த பெண்ணையே விவாகம் செய்துவைக்க வேண்டும் என்று கருதிப் படித்தவளையே பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கின்றனர். வந்தவளோ மாமியார் மாமனார் முதலியவர்களை மதிப்பதில்லை. கணவனையும் மதிப்பதில்லை. அவர்களை வேலைசெய்யும்படி விட்டு விட்டு இவள், மேல் அதிகாரம் செய்யத் தொடங்குகிறாள். வேளைக்கு ஒரு ஆண் பிள்ளையைப்போல இலையில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு எழுந்து விடுகிறாள். அவர்கள் 'படித்த மங்கையின் வாழ்வு போதும்' என்று வயிறெரியத் தலைப்படுகிறார்கள்.

ஃ

சிலர், கல்யாணம் ஆனதும் ஒரு புது உருவுடன் புறப்படுகிறார்கள். நடை, உடை, பாவனை எல்லாம் வேறாகிப் புது ஆளாகிறார்கள். தான் மணந்த மங்கையின் குணம் எத்தகைய தென்பதை உணருவதற்கு முன்பாகவே, அவளிடத்தில் வைத்த புது மோகத்தால் அவள் எது எது செய்யச் சொல்கிறாளோ அவைகளைச் செய்து, வேண்டாம் என்பனவற்றை ஒழித்துத் தாசானுதாசனாக நடக்கிறார்கள். பெற்றோர் வார்த்தையையே பெரும்பாலும் மதிப்பதில்லை. இது பெற்றோரிடத்தில் கொஞ்சம் அன்பு வைப்பவர் நடப்பது.

ஃ

மனைவியிடத்தில் கொஞ்சம் அதிக ஆசை உடையவர்கள், 'அவள் சொற்படி நடந்தால் பெற்றோர்க்குக் கஷ்டம் ஏற்படும்' என்று பேசாமல் குடும்பத்தை விட்டுப் பிரிந்து தானும் தன் மனைவியுமாக வாழத் தலைப்படுவர். அதுமுதல் பெற்றோரை எறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அவர்கள் பட்டினி கிடந்து செத்தபோதிலும் ஏனென்றுங் கேட்கமாட்டார்கள்.

(மற்றதில் முடிவு)

P. G. தலசேகரம்.

கடைக்காரருடைய உபசாரம் தமது வியாபாரம் நன்றாக நடப்பதன் பொருட்டுச் செய்யப்படுவதே தவிர, நம்மீது ஏதோ பெரிய மதிப்பும் அன்பும் கருணையும் வைத்து அந்த உபசாரத்தைச் செய்துவிடவில்லை. தெரிகிறதா?



ஆடி! ஆடி!! ஆடி!!!



ஆடி பிறந்ததப்பா! இனி அடுத்தடுத்துப் பண்டிகைகள்தானப்பா! புது மருமகப்பிள்ளைகள் பாடு குசால்தானையா! பழைய மாப்பிள்ளைகளுக்கு ஆடி அழைப்பும், மாமி வீட்டு வரிசையும் இனி வருவது ஏது? விகடன் ஆடிக்கதையை முன்னொருதரம் பாடிப் படித்திருக்கிறேன். இப்போது வேறொரு வழியில் என் பேச்சை ஆரம்பித்துக்கொள்கிறேன். முறைப்பு சலிப்பு விரைப்பு புளிப்பு இல்லாமல் கேளுங்கள் என் நஞ்சான் குஞ்சான் குட்டிகளே!

ஆடி ஆடி ஆகாயத்திலே பறக்கிறதே 'காற்றாடி'; அதன் சங்கதியென்ன தெரியுமா? அதன் வாழ்வு நிலையற்றது; எங்கேயாவது ஒன்றில் மாட்டிக்கொண்டு தொங்கும்படியும் வந்துவிடும். ஆகாயத்தில் பறக்கிறதும் வெகு பொழுதில்லை. எல்லாம் சிறிதுநேரம் வரைக்கும்தான். காற்றாடியைப் போன்று வீட்டைவிட்டு வெளியில் தாவிப் பறக்க நினைக்கும் சில "பறக்கைகள்" பெண்களில் காணப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் "அழகு பெண்ணே! காற்றாடி, உன்னை அழைக்கிறாண்டி கூத்தாடி" என்று ஒரு பழமொழியையும் சொல்லுகிறார்கள். வீட்டுக்கு அடங்கி வாழ்கிற நினைவில்லாமல் கண்டவர்கள்மீது இச்சை வைத்துத் திரியும் கசுமாலங்கள் என்ன அழகுடன் கூடியிருந்தாலும் கேவலமானவனான கூத்தாடி போன்றவனின் கைவசமாகிக் கதிகெட்டலைவார்களென்பது இப்பழமொழியின் கருத்து. காற்றாடியைப்போல சிறு நூலான ஒரு அல்பத்தின் ஆதரவைக் கொண்டு ஆகாயத்தில் பறக்க நினைக்கிறவர்களின் வாழ்வும் இப்படித்தான் சீக்கிரம் விதி கிழிந்து இடையில் கயிறு அறுந்துவிடுகிறது. வந்த நடு வாழ்வும் நலங்குலைந்து நடுவீதி நாராயணாவாகிறது!

இனி, 'உறவாடி'யின் சங்கதியோ வெகு சமர்த்து. தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காகப் பற்களை

"நான் எதிர்பார்த்த அனுதாபமும், அறிவும் அவர் எழுதின பதிலில் காணப்படவில்லை. அதைப் பொருட்படுத்திக் கவலைப்படப் போவதுமில்லை,"

இளித்தும், கூட இருந்து வேலைசெய்தும், மிக்க வேண்டியவர்கள்போல நடித்தும், இன்னும் ஆயிரம் தந்திரஜித்து வித்தைகள் செய்வதுமான சங்கதிகள் சொல்லியும் முடியாது, எழுதியும் அடங்காது. இதில் உறவாடிப் பெண்களைக் கெடுத்துவிடும் பரம சண்டாளத்தனமான சங்கதிக்குத்தான் இன்னும் அதிகமான எச்சரிக்கை பெறவேண்டும். எங்குமில்லாத எவரும் காட்டாத அவ்வளவு உறவை இவன் ஏன் இங்குக் காட்டுகிறனென்பதைக் கவனித்துப் பார்த்திருந்து கழுத்தில் கையை வைத்து வெளியில் தள்ளவேண்டும். தள்ளினுலும் திரும்பியும் ஒரு காரணம் சான்பித்துக்கொண்டு மறுபடியும் இந்த 'உறவாடி' உள்ளே நெருங்குவான். அப்பொழுதுங் கண்ணுயிருப்பதுடன் மட்டுமன்றி, எப்பொழுதும் கண்ணுகவே இருந்து தொலையவேண்டிய பெரிய சங்கதியடா அப்பா இது!

ஃ

'ஒக்க ஆடி'—ஒரு பெரிய விஷமி. இங்கும் இனிக்கப் பேசியிருந்துவிட்டு, அங்கும் போய் இவ்விடத்தைப்பற்றி இழிவாய் இகழ்ந்து, மறுபடி இங்கும் வந்து குலாவுகிற ஒரு கருநாகமாக்கும்! இதை எங்கு கண்டாலும் அண்டவொட்டாமல் அப்போதைக் கப்போதே துண்டித்துவிடவேண்டும். இது ஒரு குளிர்ந்த கொள்ளி! குடிகெடுக்கும் புள்ளி!

ஃ

'கண்ணுடி'யின் செய்தியில் அது ஒரு பொருளைப் பிரதிபிம்பித்துக் காட்டுகிற தன்மையுடையது. ஒரு பொருளை நிறுத்தி அதன் எதிரே பத்துக் கண்ணுடிகளை வைத்தால், அந்தப் பத்துக் கண்ணுடிகளிலும் அந்தப் பொருள்தான் தெரியும். பொருளென்னவோ ஒன்றேயொன்றுதான்; பத்தும் அதே பொருளைக் காட்டுகிறது. அதுபோலவே, ஒருவரையொருவர் பார்த்து, அவரை இன்னெருவர் பார்த்து, இன்னெருவரை மற்றெருருவர் பார்த்து, அவரை வேறெருவர் பார்த்து, இப்படியே பார்த்துப் பார்த்து ஒன்றைப்போலொன்ருகப் பலவாக அநேகமாகச் செய்துகொண்டு—ஒருவன் எவ்வளவோ சிந்தித்தும், கஷ்டப்பட்டும், செலவிட்டும், ஆராய்ச்சி செய்தும், ரகசியங்களை யறிந்தும், பரீக்ஷித்தும், யூகித்தும் செய்த ஏற்பாட்டைக் கண்ணுல் பார்ப்பதுதான் தாமதம்! அதைப்போலவே வேறெருவன் செய்தும், அதை முதலில் கண்டுபிடித்தவனுடைய கஷ்டத்திற்குப் பங்கமே யுண்டாக்கிக்கொண்டும், அவனுக்குப் போட்டியாக நின்று நஷ்டப்படுத்தியும்விட முயலுகின்றனர். இது மாத்திரமா? முதல் நூல், சார்புநூல் என்று நன்னூல்காரர் சொல்லியிருப்பதுபோல், முதல் நூலானது தெய்வப்புலமை பெற்றேரர் எழுதிய நூலென்ருல், வழி நூலும், சார்பநூலும் அதனைக்கொண்டுதான் செய்கிறதா யிருக்கலாம். இந்தக் காலத்திலோ பல பல நூல் இயற்றுகிறவர்களெல்லாம் இந்த ஏற்பாட்டைச் கைக்கொண்டு முதல் நூலுடைய பெருமையையே அழித்துப் போடுகிறர்கள். முதல்நூலின் நமை நாற்றமே காணுமல் செய்து போடுகிருர்கள். ஒருவன் கஷ்டத்தோடு பொருளமைதியுடன் ஒரு நூலோ கதையோ எழுதினுல் அதைப் பார்த்து வண்டி வண்டியாய் எழுதிவிடுகிருர்கள். எப்படி கண்ணுடி ஒரு

"நான் அவனைத் 'தீயவன்' என்றும், 'வஞ்சகப்பாவி' என்றும், சொல்வதை நீ மறுப்பது புத்திசாலித்தனமாகவோ, யோக்கியமாகவோ ஆகாது."

பொருளை அப்படியே பிரதிபிம்பித்துக் காட்டுகிறதோ அவ்விதமே இந்தக் கண்ணாடிக்காரர்களும் ஒருவன் சுயமாய்க் கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்ததைத் தப்புச் சரியாகத் தங்களுடையதையும் காட்ட முயன்று போட்டி போடுகிறார்கள்; வேறு கடை வைக்கவும் ஆரம்பிக்கிறார்கள். ஆகவே, இத்தகைய கண்ணாடிக்காரர்களை அதிகமாக உள்ளே சேர்க்காமல் உளவு கண்டுகொள்ள விடாமல் என்நந்சான் குந்சான்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்தக் கண்ணாடித் தாசிரிகளுக்குக் கிரகிக்கிற மூளை மெத்த அதிகமா யிருக்குமாம்!

ஃ

"சூதாடி"யின் சங்கதி வெகு பேருக்குத் தெரிந்தது. தர்மர் கதையும், நளன் கதையும் அறியாதாரில்லை. "நீ கெலித்தாயா, அவன் கெலித்தானா? யார் தோற்றது? யார் ஜெயித்தது?" என்கிற கேள்விகளைக் கோர்ட்டுக்குள் போனால் தினமும் கேட்கலாம். வியாஜ்யம் என்பதும் ஒரு சூதாட்டம்தான். நியாயமோ அநியாயமோ அது அவனவனுக்குள் மறைந்திருக்கிற சங்கதி. தோற்பதும் ஜெயிப்பதும் அதிர்ஷ்டத்தின் சங்கதி! பொய்—கோபுர உயரத்தில் எழுந்து பெருமைப்படுகிறதும், மெய்—கிடந்து விழிக்கிறதும் அங்குதான்! வியாஜ்ஜிய விவகாரங்களானது குடும்பம் நாசமாய்ப்போகிற குட்டிச்சுவரான சூதாட்டமாகவே இருக்கிறது.

ஃ

"தொனப்பாடி"யின் கதை வெகு தொல்லை பிடித்தது. இவர்களிடத்தில் நாம் அகப்பட்டுக்கொண்டால் போதும் போதும்! 'கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன்' என்றாலும் விடமாட்டார்கள். தொன தொன தொன வென்கிற வீண் தொனப்பில் நமக்கே வெறுப்புண்டாகிப் போய், "ஆகட்டும்! போய்விட்டு வாருங்கள்! எனக்கு அவசரமான வேலையிருக்கிறது" என்று போகச் சொன்னாலும், போய்விடுகிறாற்போல் ஒரு பத்தெட்டு அடி தாண்டிப் போகிறதும், எதையோ நினைத்துக்கொண்டு மறுபடியும்வந்து நாலைந்து தொனப்பு தொனப்புவார்கள். அப்படியே மறுபடியும் வந்து தொனப்புவார்கள். இவர்களால் மணியும் நேரமும் காலமும் வீணே போகிறதேயன்றி ஒரு பிரயோஜனமுமிராது. நமது வேலை வெட்டியும் கெட்டுப் போகிறது. இவர்களுடைய தொனப்பில் மெத்த ஆவியைச் செலவழிக்கிறார்கள். அந்தத் தொனப்புகளுடன் பேசி முடித்து ஓய்கிற சூட்டுக்கு ஒருபடி நெய் சாப்பிட்டாலும் தணியாது போலும்! இதோடு இன்னொன்று! நமக்கு ஏதோ அலுவலிருந்து ஒரு நாலைந்து மைல் தொலைவிற்கு நடந்து போகவேண்டியிருக்கும்போது இப்படிப்பட்ட தொனப்பாடி ஒருத்தர் அகப்பட்டுக் கொண்டால் நமக்குத் துட்டு செலவில்லாமலே, கால்நடையின் கஷ்டம் தெரியாமலே, இங்கே தொடங்குகிற தொனப்பு கடைசியான இடம் வரைக்கும் தொனப்பிக்கொண்டு வந்துவிட்டு, அப்படியும் கொஞ்சம் மீதி வைத்துக்கொள்ளுவார்கள். அந்தத் தொனப்பை மறுபடியும் திரும்பும்போது எடுத்துக்கொள்ளுவார்கள். அவசரமாய் அனுப்பவேண்டிய தபால் நேரங்களில் இந்தத் தொனப்பாடிகள் வந்துவிட்டாலோ உழைப்பாளிக்கு அடிவயிறு பற்றியெரியும். கடைசியாக இன்னொன்று! ஒருவன்

நேர்முகமாக இருந்து முற்பட்டுச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் பின்முகமாக இருந்து பழிப்புப் பேச்சுகள் பேசிக்கொண்டு ஒதுங்கி நிற்பது வெகுபேர்கள் செய்யும் சங்கதி. இவர்கள் வாரிக்கொள்வது யாதோ?

வேலை செய்து அலுத்திருக்கின்ற நேரத்தில் இந்தத் தொனப்பாடிகள் வருவதில் இவர்களிடம் களைப்பு தீரக் கொஞ்சம் பேச்சு வார்த்தைகள் கொடுக்கப் போனாலோ, கடைசியில் அதன் முடிவோ, அவர்கள் போகும் போது ஒரு புஸ்தகமோ, ஒரு பொருளோ வேகு உறவாக இரவல் கேட்டு எடுத்துக்கொண்டு பக்குவமாக நழுவிவிடுவார்கள். அப்பால் அவர்களின் பெண்டாட்டி பிள்ளைகள் மேல் ஆணையாக அதைத் திருப்பி எந்த ஜென்மத்திலும் கொடுக்கவே மாட்டார்கள். இன்னும் எவ்வளவோ விவடன் அளக்கலாம். இவ்வளவு வரைக்கும் இது போதும்!

ஃ

"குறைபாடி"யின் செய்தி உலக முழுதுக்கும் நிறைந்திருக்கிறது. எந்தக் குடும்பத்தில் புகுந்தாலும் குறை கூறுகிறதுதான் சங்கதி! எந்த மனுஷரும் குறை சொல்லுவதே வேலையாயிருக்கிறார்கள். பெற்ற பிள்ளைகள் மீது தாய் தகப்பன் குறை கூறுகிறது! பெற்றவர்கள்மீது மக்கள் குறை கூறுகிறது! மாற்றாந்தாய் மூத்தாள் பிள்ளைகளின்மேல் குறை கூறுகிறது! சகோதரர்கள் பங்கு பங்காளிகள்மீது ஒருவருக்கொருவர் குறை சொல்லுகிறது! புருஷன்மீது மனைவி—மனைவிமீது புருஷன், மாமியார்மேல் மருமகள்—மருமகள்மேல் மாமியார், எஜமான்மீது வேலைக்காரர்—வேலைக்காரர்மீது எஜமான், உபாத்தியாயர் மேல் மட்டிப்பையன்கள்—பையன்கள்மேல் உபாத்தியாயர், அதிகாரி மீது சேவகர்கள்—சேவகர்மீது அதிகாரிகள், கோயில் குருக்கள்மேல் ஜனங்கள்—ஜனங்கள்மீது குருக்கள், அர்ச்சகன் பூஜாரிமீது தர்மகர்த்தன்—தர்மகர்த்தன்மீது அர்ச்சகன் பூஜாரி, கோர்ட் கச்சேரிகளில் புகுந்தால் பொய் புனைசுருட்டு வழக்காளியோ—மெய்வழக்காளியோ இருதரத்தாருமே ஜட்ஜிகள்மீது குறை கூறுகிறது, ஜட்ஜிகள் மெய் வழக்காளிமீதோ பொய் வழக்காளிமீதோ குறைகூறித் தீர்ப்பு எழுதுகிறது, சரக்கு — சாமான் — பண்டம்—பல வகை ஜவுளி—நகை நட்டு—வாங்குவதிலும் ஒவ்வொரு சரக்குகளின் மேலும் குறைகூறுகிறது! கூலிக்காரர்களுக்கு எவ்வளவு துட்டுகள் கொடுத்தாலும் திருப்தி யிருக்கிறதில்லையானதால் கூலிக்காரர்கள் குறை கூறுகிறது! ஜட்கா வண்டி கூலிவண்டிக்காரர்களும் அப்படியேதான்—வண்டி சத்தம் பேசிக்கொண்டதற்கு மேலும் ஜாஸ்தி துட்டுக் கேட்டுக் குறை கூறுகிறது! நோயாளிகள் வைத்தியன்மீது குறைகூறுவது—வைத்தியன் நோயாளிகள்மீது சரியான பத்தியம் பிடிக்கவில்லை வாய் கட்டவில்லை யென்று குறைகூறுகிறது! சில வைத்தியர்கள் வியாதியஸ்தன் சாகிற சருவாயில் கூடப் பணத்தைப் பிடுங்கிவிட்டு மருந்து கொடுத்தவுடன் அவன் செத்துப்போனால் அவன் ஆயுளின்மேல் குறை கூறுகிறது! இப்பால் இன்னும் என்ன சொல்ல? எல்லாவற்றைப் பார்க்கிலும் பெரிதாகப் "பாழுங் காலமே! கெட்ட காலமே!" என்று காலத்தின் மேலே குறை கூறுவதுதான் வெகு விசேஷம்! இவைகள் எல்லாவற்றிற்கும்மேலே—பெருங் கஷ்டத்திலோ— துக்கத்திலோ—மெய்வழக்குத் தோற்றுவிட்டதிலோ நொந்து போய் அநேகர்

நகரவாசத்தில் $1\frac{1}{2}$ அணுவுள்ள சோப் 4 மைலுக்கு அப்பால் உள்ள ஊரில் இரண்டணுவாகவும், இவ்விதமே $2\frac{1}{2}$ அணுவாக உள்ளது 3 அணுவாகவும் விற்கிறது. இப்படி விற்கும் கடைக்காரருக்கே 'நயமாகக் கொடுப்பவர்' என்று பெயர். எவ்வளவு உறவிலும் வியாபாரி தன்னுடைய லாபத்தை விட்டுத் தரார்.


"பாழுந் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா! உன் கோயில் இடிந்து குட்டிச் சுவராய்ப் போகாதா?" என்று தெய்வத்தின்மீது குறை கூறுகிறதுதான் வெகுவான வழக்கத்தி லிருக்கிறது! "வாயாற வுண்டபேர் வாழ்த்துவதும், நொந்தபேர் வைவதும் எங்களுலக வாய்ப்பாடு?" என்று ஒரு பக்தர் புலம்பினதுபோலத் தெய்வத்தின்மீது குறை கூறுகிற கதை எங்கும் காணும் சங்கதிதான். இவர்களின் பூர்வ வினைக்குத் தெய்வம் என்ன செய்யும்? அதை எண்ணிப் பார்க்க ஆத்திர நெஞ்சுக்கு நேரமில்லையாகும்! உலகமே நிலையில்லை. அதில் இருப்பது கொஞ்ச நேரமாம்! அதற்குள்ளே இடித்துக் கொள்வது கொஞ்ச நேரமாம்! இன்னுமுள்ள 'அடி'களை அடுத்த தடவைக்கு வைத்துக் கொண்டு இப்போது ஒரு அவசர கல்யாணத்திற்குப் போய் வந்துவிடுகிறேன். விடை கொடுங்கள்! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!

'உனக்கு எனது பெண்ணைக் கொடுத்ததைவிடப் பறையனுக்குக் கொடுத்திருக்கலாம்" என்று ஒரு மாமனார் மீறிச் சொல்வதை விட மௌனமே மேல். தந்தபிறகு அங்கு தூஷணை ஏன்? பகைமை ஏன்?

பதவி பேதத்தில் மனம் மாறுதல்.

பதவிபேதம் மனிதர்களின் மனத்தையும் கொள்கைகளையும் மாற்றிவிடுகிறது சாதாரண வேலையிலிருந்தபோது அனைவருடனும் கலந்து எளியவர்களுக்காக இரக்கமான வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருந்தவர் புதுபதவி பெற்றுவிடவே, முன் அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு ஏழைகளைச் 'சோம்பேரி ஜனங்கள்' என்று தூஷிக்க ஆரம்பித்துவிடுகிறார். எளிய பெண்ணாயிருந்தபோது மற்றப் பெண்களுடன் சாதாரணமாய்ப் பேசிக்குலாவியவள், பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டுக் காசுமாலை கழுத்தில் ஏறியதும் முன்பு பழகிய பெண்களுடன் பேசுவது தனது கௌரவத்திற்குத் தாழ்வு என்று கருதத் தொடங்கிவிடுகிறாள். ஜனப் பிரதிநிதியாயிருந்தபோது அதிக வார்த்தை. சர்க்கார் பிரதிநிதியாகிவிடும்போது பொறுப்பு உணர்ந்து பேசும் திறன்!

மெதுவாக உள்ளே நுழைந்து கொள்ளும் வேலையைச் சிலர் வெகு சாதுரியமாய் நிறைவேற்றப் பார்க்கிறார்கள். அவர்களின் சூதை யறிந்தவர்களோ அதற்கு மேலும் எச்சரிக்கையாக இருந்துகொண்டு எந்த வகையிலும் அவர்கள் உள்ளே வராதபடி வெகு ஜாக்கிரதைப்பட்டு கத்தரித்துவிடுகிறார்கள்.



ஒருவன், வீட்டையும் மற்றவர்களையும் தாங்குகிறான். அவனைத் தாங்குகிறது எது ?— அவனுடைய பணப் புஷ்டியும் ஆண்மையுந்தானும் !

ஒருத்தி ஒருவனை வேண்டுமென்றே விரோதித்து அவன் மனதைப் புண்ணாக்குகிறாள். இவள் மனத்தைப் புண்ணாக்குவதென்ன ?—தான் இப்போது விரோதிப்பவனிடம் முன்பு தன் கற்பைத் தந்துக் கெடுத்துக் கொண்ட சங்கதியை எங்கே வெளியிழுத்துவிடுகிறானோ என்பதுதானும்!

எல்லோரிடமும் வெகு தளுக்காகப் பேசி யாவருக்கும் நல்ல மனிதனாய் எதிலும் பட்டுக்கொள்ளாதபடி வெகு தந்திரமாய் நடக்கிறான். இவனிடம் அப்படி நடக்கிறவன் யார்?—இவனைப் பார்த்து இவனையே ஒரு மாதிரியாக வைத்து ஒவ்வொன்றையும் கற்றுக்கொண்டவனதானும்!

ஒருவன் ஊருக்கெல்லாம் விருந்து செய்கிறான். அவனுக்கு விருந்து செய்கிறது யார் ?— அவனைப்போல ஏமாந்த தறிதலையான ஒருவனும் !

இவன் அவனை ஏமாற்றப் பார்க்கிறான். இவனை ஏமாற்றப் பார்க்கிறவன் யார் ?—இவனுடைய நரித்தனத்தைத் தெரிந்து ஏமாறாதவனும் !

"கணவனை இழந்த பெண்களுக்குத் தலையைச் சிறைப்பதுபோல, மனைவியை யிழந்த புருடர்களையும் ஏன் மொட்டையடிக்க லாகாது ?" என்று விகடக் கோமாளி வினவுகிறார் !

"எங்கள் துணையின்றி ஆண் கூட்டங்கள் எந்தச் சங்கதிக்கும் விரல் அசைக்க முடியாது. ஆனாலோ, நாங்களே கூடி நடத்தும் பல சங்கதிகளில் ஆண் நாற்றத்தையே உள்ளே வரவிடுவதில்லை. ஆகவே, அதிக சமர்த்து யாருக்கு ?" என்று பெண்கள் விகடனிடம் வந்து பந்தயம் போட்டுக் கேட்டார்களாம் !

"என்னைக் கைவிடாத காருண்யமுள்ள கம்பீரமான காதலா!" என்று அழைத்து, ஒரு மாமி தன் மருமகனுக்கு ஆசைக் கடிதம் எழுதினாளாம்!

முகத்தில் அழகிய கரும் புள்ளிகளும், பள்ளங்களும் விழக்கூடிய சோப் ஒன்றை விகட ரஸாயன நிபுணர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறாராம் !

சந்நியாசிகள் திபேத்தில் ஏராளமாயிருப்பதற்குக் காரண மென்னவெனில், ஸ்திரீகளைவிட 10-மடங்கு புருஷர்கள் இருப்பதுதானும் ! ஒவ்வொரு ஸ்திரீகளுக்கும் 2-அல்லது 3-புருஷர்கள் இருப்பார்களாம்! அப்படியானால் அங்கே பதிவிரதா தர்மம் அதிகந்தானிருக்கும் !

வலியப்போய் உறவாடும் வழக்கமில்லாதவனைச் சிரித்து, இழுத்து, பிடித்து, பிரித்து,பசப்பி வசப்படுத்துவது வெகு கஷ்டமா யிருக்குமாம் !

இரு புத்திமான்கள் சந்திக்கிறார்கள். நெடுநேரம் வெகு பிரியமாய்ப் பேசுகின்றனர். ஆனால், இருவரும் ஒருவரையொருவர் அறியாது மறைத்துள்ள கபடம், பொறாமைகளை மட்டும் ஒருபோதும் வெளியிட்டுக்கொள்வதில்லை.

பழமொழிக் குறிப்புகள்

2—அற்ப குணம்.

(முன்பக்கம் 162-லிருந்து.)

191. என்னடா கருடா! சுகமா?
இருக்கிற இடத்திலிருந்தாற் சுகம்.

நாகத்திற்குக் கருடன் சத்துரு. கருடனைக் கண்டதும் நாகம் பதுங்கி ஒளிவது அதன் இயற்கை. அத்தகைய நாகம் சிவபெருமானுக்கு ஆபரணமாக அவருடைய சடையில் இருக்கும்போது அச்சமயம் ஆகாசத்திற் பறந்துசென்ற கருடனைப் பார்த்து "என்னடா கருடா! சுகமா?" என்று க்ஷேமம் விசாரிப்பதாயிருந்தால் அது எவ்வளவு அகங்கார புத்தி என்னலாம். தான் சிவபெருமானின் சடையில் இருக்கையில் இந்தக் கருடன் தன்னை யொன்றும் செய்ய முடியாதென்கிற கர்வசிந்தையல்லவா. இத்தகைய மமதையுடன் கருடனை க்ஷேமம் விசாரிக்கச் சொல்லிற்று. அதைப் பார்த்த கருடனும் தனக்கு உண்டான ஆத்திரத்தை யடக்கிக் கொண்டு "இருக்கிற இடத்தி லிருந்தாற் சுகம்தான்" என்று பதில்சொல்லிப் போயிற்றும். இதுவானது அற்பர்களுக்கு ஏதோ அதிர்ஷ்டவசத்தால் புதுவாழ்வு கூடிக்கொண்டதும், முன்பு தான் வணங்கி மரியாதை செய்தவர்களை எல்லாம் அலக்ஷியித்து 'இவர்களென்ன பெரியமனிதர்கள்' என்று எண்ணி, அவர்களுக்கு முன்பு தமது புதுவாழ்வின் பெருமையைக் காண்பித்துக் கொண்டு கர்விப்பதானது அற்ப புத்தியின் தன்மையை விளக்குகிறது. எவ்வளவோ பேருக்குத் திடீரென்று செல்வம் வந்திருக்கிறது; திடீரென்று உயர்ந்திருக்கிறார்கள். அந்த உயர்ந்துவிட்ட வாழ்விலே அவர்கள் முன்புபோலவே அமைதியான குணத்தோடிருந்து அடக்கத்துடன் நடந்துகொள்ளுகிறவர்களாயிருந்தால், தமது புதுவாழ்வில் எவ்விதமான துள்ளிவிழுதலும் இல்லாமல் உத்தமமான மனப்போக்கைக் கொண்டவர்களாயிருந்தால், பகவானும் அந்த நல்ல வாழ்விலேயே அவர்களை வைத்து மேன்மேலும் உயர்த்தி ஆசிர்வதிக்கின்றார். அவ்விதமின்றி, அவர்கள் தங்களுக்கு வந்த வாழ்வின் பெருமையிலே கண்களடைத்துப் போய்த் தான் முன்பு மதித்தவர்களை யெல்லாம் தாழ்வாய் நினைத்துக் கேவலப்படுத்திவிட்டு, கடவுளுக்கும் பொறுக்காத கொடுமைகளைச்செய்து, தனக்கு உதவி புரிந்தவர்களை யெல்லாம் கண்டபடிஇகழ்ந்து அவமதித்து ஆவாரிப்பார்களானல், அத்தகையோரை அந்த ஏழடுக்கு மாளிகையிலிருந்தும் கீழே தொப்பென்று விழும்படி தள்ளி அவர்களிடமிருந்த பொன்கிண்ணிக்குப் பதிலாக பழய மண்கிண்ணியையே கொடுத்து அவர்

இறந்துவிட்டவன் சேகரித்து வைத்திருந்த ரிக்கார்டு ஆதாரவுகள் யாவும் இப்போது ஒரு காகிதக் குப்பைபோல மதிப்பற்று மங்கிக் கிடக்கின்றன.

களின் புது வாழ்வை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டுவிடுகின்றார். இது எத்தனையோ இடங்களில் கண்ட அனுபவம். இவ்விதம் திடீரென்று பெரிய தனிகர்களானவர்கள் துள்ளி விழுகின்றார்களேயன்றி, சாஸ்வதமாய்ப் பரம்பரைப் பெரியமனிதர்களாயுள்ளவர்கள் அந்தப் பெருமையையே அறியாதவர்களாய் எவ்வளவோ அமரிக்கையோடு வாழ்வதையும் ஆங்காங்கு பார்க்கலாம். லக்ஷ்மீமான்களாயுள்ளவர்கள் எவ்வித ஆடம்பரமுமின்றி ஒரு சாதாரண வெள்ளைவேஷ்டியை யுடுத்திச் சாதாரணத் தன்மையில் சாமான்யர்களாய் நிற்பதையும் பார்க்கலாம். அவர்கள் தங்களின் பெருமையில் மயங்கிவிடவில்லை. தங்களுக்குள்ள பெருமையைமே அவர்கள் அறியவு மில்லை. அவர்கள் தங்களைத் தாங்கள் அறியாவிடினும் உலகம் அவர்களை எவ்வளவோ கௌரவித்து வணங்குகிறது. தங்களின் பிராணனுக்குச் சமமாக அவர்களை நினைத்து வாழ்த்துகிறது. திடீரென்று புதுவாழ்வு கண்டவர்களையோ உலகம் அவர்களின் முகத்துக்கு முன்பு துதித்து, முதுகுக்குப் பின்பு அவர்களைக் கேவலமாய் இகழ்ந்து காறி யுமிழ்கின்றது. அவர்களுக்கும் அந்தவாழ்வு நீடித்துநிலைத்து நிற்பதில்லை. ஆகாயவாணம்போல் திடீரென்று உயரக்கிளம்பிக் கடைசியில் சிறு குச்சியாகக் கீழே விழுந்து, இருக்கிற இடம்கூடத் தெரியாமல் மறைந்து போய்விடுகிறார்கள். சாமான்ய வாழ்விலேயே என்றைக்கும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் உயர்வதேயில்லை. ஆயினும், அந்தச் சாமான்ய வாழ்வில் நீடித்தகாலம் அவர்கள் க்ஷேமமாகவே கௌரவமாய் இருந்துகொண்டு சமாதானத்துடனும் வாழ்கிறார்கள். திடீரென்று உயர்ந்து மலையுச்சியிலிருந்தும் தொப்பென்று விழுந்தவர்கள் பாடுதான் பெரிய தவிப்பும் திண்டாட்டமும் ஏக்கமுமாய்ப் போகிறது. எளிய நிலையிலிருந்து பெரிய இடங்களில் வாழ்க்கைப்பட்டு, காசுமாலையும் வைர அட்டிகையும் போட்டுக் கொண்டு அந்த வாழ்வில் கர்வித்துப்போன பெண்கள் நினையாத நேரத்திலே திடீரென்று கணவனை இறக்கக் கொடுத்து, ஸர்வ சொத்துக்களையும் தாயாதிகள் கைப்பற்றிக்கொள்ள, பழயபடி தங்களின் கூரைவீட்டிற்கே அழுதகண்ணீருடன் திரும்பிவிட்டதையும் பார்த்திருக்கலாம். இந்தப் புதுவாழ்வு இல்லாமல் தங்களையொத்த ஏழையையே மணந்து வெகுகாலம் மஞ்சள் குங்குமத்தோடும் திருப்தியாய் வாழ்கிற பெண்களையும் கண்டிருக்கலாம். புதுவாழ்வில் அல்பபுத்தியையும் மமதையும்கொண்டு மீறிவிட்டவர்களுக்கு அந்த வாழ்வு நீடித்துநிற்பதில்லை யென்பது அநுபவம். அதாவது, வந்த புதிய வாழ்வை அல்பகுணமானது அடியுடன் வேர் அறுந்துவிடுகிறதென்பது கருத்து.

வாங்கி வருவதால்தான் சண்டை. எந்தப் பதார்த்தமும் வீட்டுக்கு வாங்கி வராமற்போனால் ஒரு சண்டையு மில்லை. பணம் செலவிட்டும் சந்தோஷமில்லையே! காசின் அருமை தெரியாத இடத்தில் என்ன வாங்கியும் பயனில்லை.

இலையில் உட்கார்ந்தபடியே எச்சிற் கையால் தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறும்படி வீட்டிலுள்ளவர்கள் அந்தபுசிப்புவேளையில் ஏதேனும் ஒரு கொடுமை செய்துவிடுகிறார்கள். அந்தக் கசப்பு வீட்டைவிட்டு எங்கேனும் ஓடிவிடச் செய்கிறது. ஓடி மறைந்தால்தான் மன ஆறுதல் தருகிறது.



1. விருந்தாளிகள் நம் வீட்டிற்கு வந்ததும், "மூட்டைப்பூச்சி இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு உயிர் போகிற பாவனையாகப் பேசுகிறார்கள். அவர்கள் வீட்டிற்குப்போனாலோ 'மூட்டைப்பூச்சி அங்கேதான உற்பத்தியாகிறது' என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

2. கூட்டுவியாபாரத்தில் பங்காளிகள் சண்டைபோட்டுக் கடையை மூடிவிட, இதில் சில புலிகள் வந்து "இப்படி அப்படிச் செய்யுங்கள்" என்று இரண்டுபேருக்கும் நல்லது சொல்வதுபோல் சொல்லி விட்டு, வெற்றிலைப்பாக்கோ, சிகரெட்டோ, காபியோ—அகப்பட்டதை வாரிக் கொண்டு போய்விடுகிறார்கள்.

3. ஐயா, "வந்து இரண்டுமாதமாயிற்றே; எங்கேயாவது வேலை பார்த்தீர்களா!" என்றால், "நான் வெளியிற் சென்று வேலை தேடுவதாயிருந்தால் எவ்வளவோ வேலை கிடைக்கும். நான் ஒன்றுக்கும் போகிறதேயில்லை. தானாக வரட்டுமென்று இருந்துவிடுவதே என் வழக்கம்" என்று சிலர் வாய்வீரம் பேசுவதுண்டு. இவர்களின் வீட்டுக்குள்ளோ அன்னம் சுன்னமாகித் தரித்திரம் பிடுங்கித் தின்றுகொண்டிருக்கும்.

4. சண்டை நடக்கிற இடத்தில் சில கலகக்கொள்ளிகள் வந்து "ஐயா! சும்மா இருங்கள்! நீங்கள் சும்மா இருங்கள்!" என்று சமாதானப் படுத்துகிறதுபோல் சொல்லிவிட்டு இருபக்கமும் கண்ஜாடை காட்டிவிடுகிறார்கள். மறுபடியும் சண்டை மூண்டுவிடுகிறது. இதில் இவர்களுக்கு என்ன லாபமோ? ஈசா!

5. இரவல் புஸ்தகத்தைப் படித்துவிட்டுக் கொடுக்கும்போது, "என்ன ஸார்! அந்தக் கதையில் ஒரு சாராம்ஸமாவது இல்லையே" என்று குற்றம் சொல்லிக்கொடுக்கிறார்கள். நன்றாய்ப் புதிதாக இருந்த புஸ்தகம் நசுங்கி அழுக்கு பட்டு நாசமாய்ப் போனதுதான் இந்தப் பாவிகளுக்குக் கொடுத்துப் பெற்றதில் வந்த லாபம்!

6. பந்துவின் குழந்தையென்று கூப்பிட, அது வெடுக்கென்று பேச, நாம் கொஞ்சம் தட்ட, அது ஓலமிட, தாய்மார்கள் ஓடிவந்து பல வசைகள் பாட, இவ்வளவு கூப்பாடு எனப்பா?

சங்கர நாராயணன்.

II

7. சலித்தவர் சொல்லியது:— பொழுது விடிவதும், தலை முழுகுவதும், சாப்பிடுவதும், சோற்றைத் தூக்கிக்கொண்டு வேலைக்கு ஓடுவதும், பொழுதெல்லாம்பாடுபடுவதும், மாலையில் ஏங்கி இளைத்து வீடு திரும்புவதும், சாப்பிடுவதும், உறங்குவதும், மறுபடி பொழுதுவிடிந்தவுடன் பழய பாட்டைத் தொடங்குவதும் இதுவேதான் உலகவாழ்க்கையோ? இதற்கேதான் பிரபஞ்சத்தில் ஜனித்ததோ?

குழந்தைகள் பக்கம்

இரண்டு படங்கள்

வஸந்த ருதுவிலே மிக்க இரமணீயமான ஒரு காலை நேரம். எங்கு பார்த்தபோதிலும் இனிமையாகக் கூவும் பறவைகளின் கூட்டம். பூமியில் அங்கு மிங்குமாக முளைத்தெழுந்த பூஞ்செடிகள். இயற்கையம்மை மிக டாம்பீகமாக உடுத்தி ஆடையாபரணங்கள் அணிந்து கொலுவீற்றிருந்தனள். பட்டணத்தின் புழுதி நிறைந்த வீதியொன்றில் குறுகிய அறையொன்றினில் வசித்துவந்த சித்திரமெழுதும் திறமை கொண்ட கவியொருவன் அவ்விளங் காலையின் மாக்ஷிமையைக் கண்டு மகிழ்ந்தவனாய் நகரத்திற்கு வெளியிலே வெகுதூரம் சென்று உலாவிவிட்டுத் திரும்புகையில் ஏதோ ஒரு எளிய குடிசையினருகில் வந்து சேர்ந்தான். அவ்விடம் இயற்கையான அழகு ததும்பி நின்றது. அங்கே ஒரு வீட்டின் வாயிலிலே உட்கார்ந்திருந்த வெகு அழகான ஒரு குழந்தையைக் கண்டு அவன் பிரமித்து நின்றான். ஏனெனில், அந்தக் குழந்தையினிடம் மாசு, களங்கம் முதலிய தோஷங்கள் எள்ளளவும் இன்றி அது தெய்வீகத்தன்மை நிறைந்து நின்றது. உடனே கவி தன் புத்தகத்தை யெடுத்து அக்குழந்தையைச் சித்திர ரூபமாக வரைந்து, அதனடியில் 'ஒளிச்சுடர்' என எழுதினான்.

வருடங்கள் பல சென்றன. சித்திர விற்பன்னனின் புகழ் எங்கும் பரவிற்று. அவன் ஒரு தினம் தனது பழைய புத்தகங்களைப் பார்க்கும்பொழுது இக்குழந்தையின் சித்திரத்தைக் காண இன்பம் நிறைந்த அந்த சந்தர்ப்பங்கள் யாவும் நினைவுக்கு வந்தன. அந்தச் சித்திரத்தை அவன் பூர்த்தி செய்வித்ததும், அது உயிருள்ள குழந்தையெனவே தோன்றியது. அமைதியும் சாந்தமும் தூய்மையும்

ஒரு பதார்த்தம் வாயில்போட்ட முதலிலும், பிறகு எல்லாம் ஆகிக் கடைசியிலுள்ள மிச்சத்திலும்தான் மிக அருமையுடன் ருசியாயிருக்கிறது.

மாசற்ற தன்மையும் களங்கமில்லா ஒளியும் உருவெடுத்து வந்தன போலத் தோன்றின.

கவிக்கு ஒரு யோசனை பிறந்தது. இந்த சாந்தமூர்த்தியான குழந்தைக்கு நேர்விரோதமான தன்மையைக்கொண்ட ஒரு மனிதனைக் கண்டுபிடித்து அவனையும் சித்திரத்தில் வரைந்து அதனடியில் 'இருண்ட மூதேவி' என எழுதி இருபடங்களையும் பக்கம் பக்கமாகத் தொங்கவிட வேண்டுமென அவனுக்கு ஆசை யுண்டாயிற்று. உடனே அவன் மூதேவியின் கடாக்ஷம் பெற்றவர் வாழ்கின்ற சிறைச்சாலை, குடிச்சாலை முதலான இடங்களுக்குச் சென்று தேடினான். வெகுநாள் கழிந்த பின்னர் அவனுக்குத் திருப்தியான ஒரு மனிதன் அகப்பட்டான். அவனது முகத்தில் எண்ணிறந்த பாபங்களின் அடையாளங்கள் இருந்தன. கடுமையும், வெறுப்பும், கொடுமையும், பொய்யும், மற்ற மகா பாதகங்களும் அவனையே சரணாக அண்டியிருந்தன. அவன் முகத்தைக் கண்டோரனைவரும் திடுக்கிட்டுச் சென்றனர். அவன் தனது தாயைக் கொன்ற குற்றத்திற்காக அப்பொழுது சிறையிலிருந்தான்.

அவனது சித்திரத்தை வரைந்ததும், கவியானவன் தான் எழுதிய இருபடங்களையும் எடுத்துவந்து முதலில் சிறையிலிருந்த கொலைகாரப் பாவியினிடமே காட்டி, தான் குழந்தையின் படத்தை எழுதிய வரலாற்றையும் கூறினான் அதன் பின்னராவது அவனது மனம் நல்வழியில் திரும்பட்டும் என்பது நமது கவியின் நோக்கம்.

படங்களைக் கண்ட சிறையாளி "கிரீச்'' என்று கதறிக் கீழே விழுந்தான். பிறகு கண்களைக் கையினால் மூடிக்கொண்டு கவியை நோக்கிக் கூறலானான். "ஐயா! இப்பொழுது தாயைக் கொன்று சிறையில் வாழும் நானே ஒருநாள் அந்தக் குழந்தையாக இருந்தேன். தாங்கள் என்னைச் சித்திரத்தில் வரைந்தது எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. ஆனால், எனக்கு வயது வந்தபிறகு நான் ஸஹவாஸ தோஷத்தினால் கெட்டுப்போனேன். குடியே என்னை இக்கதிக்கு உட்படுத்தியது. என் அன்னையின் சொல்லையும் நண்பர்களின் பேச்சையும் கேளாமல் நான் இவ்விதம் ஆனேன். ஒளிச்சுடரென என்னை எவரும் வியக்கும்படி என்வாழ்வைத் தொடங்கிய யான் இருண்டமூதேவியாக வாழ்வை முடிக்கின்றேன்" என்றான். சித்திரவிற்பன்னன் இதைக்கேட்டுத் திகைத்துச் சோர்ந்தான். சிறுவர்களே! ஸகவாச தோஷத்தின் தீமைகளைக் கண்டீர்களா?

R. இராமகிருஷ்ணன், M. A.

"என்ன பரிதாப நிலையிது! நகையை வைத்து நாற்பதுரூபாய் பெற்றேன். முப்பத்தொன்பது ரூபாய் இன்று பல கடன்களுக்குமாகத் தீர்ந்து விட்டது. இனி கையில் ஒரு ரூபாயே பாக்கி. இது நாளைக்குப் போதுமா?''

விடுகதை வினா

1. கோணமாணலாய் ஓடிடுவான். கோபமானால் விஸ்வரூப மாகிவிடுவான். நல்லவனென்று பெயருடையான். நடக்கும்பொழுது உயிரை வாங்கிடுவான். பளபளப்பாய்த் தோன்றிடுவான். பறக்குமொருவனைப்பார்க்கில் பதுங்கிடுவான். அதிகம் வயதே ஆனாக்கால் அரசர் மெச்சும் ஆஸ்தியை வைத்திருப்பான்.

2. ஓங்கிய உருவமுண்டு. குறுகிய கையுண்டு. குனிந்தால் பச்சைக்கண். நிமிர்ந்தால் சிவப்புக்கண். ஆரவாரமாய்ப் பேரிரைச்சலுடன் வருகின்ற ஒருவனை வந்து பாரென்று எதிர்த்து நிமிர்ந்துநின்று அட்டகாசத்தை யடக்கி அவனை—"கீ—கீ—" என்று கூச்சலிடும்படிச் செய்திடுவான். இவன் யார்?

3. சொல்லொன்று சொன்னவுடன் நில்லாம லோடுகிறான். ஓடுகிற வழி தெரிகிறது, உருவம் தெரியவில்லை. அவனைக் கையால் பிடிக்க முடியாது, கண்ணால் பார்க்க முடியாது, காதால் கேட்டுக்கொள்ளலாம். இவன் யார்?

4. உடலெல்லாம் பளபளப்பு; பட்டாடையல்ல. கழுத்து உயர்ந்திருக்கும், ஒட்டகையல்ல. வாலோ நீண்டிருக்கும்; குரங்குமல்ல. கண்களோ அநேகமுண்டு; இந்திரனல்ல. உச்சியிலே உன்னதக் கொண்டை யுண்டு. உண்மை கண்டு உரைப்பாய்தானே.

5. ராஜம்பாள் என்ற பெண்ணை ராஜு என்றும், சீனிவாஸன் என்பவனைச் சீனு என்றும் அழைப்பதுபோல், ஒரு ஊரின் பெயரையும், இரண்டெழுத்துக்கொண்ட பாதிப்பெயரால் சொல்வதில் முன்னெழுத்து கண்டத்திற்கு மேற்பட்டுச் சிரசிலுள்ள ஒன்றையும், பின்னெழுத்து அந்த ஊரின் பெயரை யெழுதுவதற்கு வேண்டிச் சாதகமாயிருப்ப தொன்றையும் குறிக்கும். ஊரின் பெயரென்ன?

6. பத்தரைமாற்றுப் பசும்பொன்மேனி கொண்டாள். சந்திரபிறை போன்ற ஆபரணம் பூண்டிருப்பாள். அநுபவம் செய்வோமாகில் அமிர்தரஸம் நல்கிடுவாள். தரையினி லுள்ளவரைத் தலைஉயர்த்தி மேல்நோக்கச் செய்திடுவாள். எட்டெழுத்துப் பெயருடையாள். இரண்டுடன் மூன்று நான்கெழுத்தினை நீக்கிப் பார்ப்போமானால் முக்கனி என்பதைக் குறித்திடுவாள். இவள் யார்?

வ. சு. நாராயணசாமி செட்டியார்

II

7. ஒரு வீட்டில் சேவல், பெட்டை, குஞ்சுகளுமாகச் சேர்ந்து மொத்தம் முப்பது இருக்கிறது. அதற்குத் தீனி முப்பது படி தானியம். இதில்

"எல்லா நகையும் கடனுக்கு அடகில் இருக்கிறது. வீட்டில் ஒரு நகையு மில்லை. நாளைச் செலவுக்கு வழியு மில்லை. இனி எவ்விதமோ ஈசனே!"

சேவல் இரண்டுபடியும், பெட்டை முக்கால்படியும், குஞ்சு அரைக்கால்படியும் ஆகத் தின்றால் எத்தனைச் சேவல், எத்தனைப் பெட்டை, எத்தனைக் குஞ்சு?

சங்கா நாராயணன்.

விடுவிப்பு:—1. நாகசர்ப்பம், 2. ரயில்வே கைகாட்டிமரம், 3. டெலிபோன் சமாசாரம், 4. மயில், 5. நாகப்பட்டணம்—நாகை, 6. முந்திரிப்பழம், 7. சேவல் பெட்டை குஞ்சுமாகச் சேர்ந்து முப்பதும், தானியம் படி முப்பதும் இருக்கவேண்டும்.

சமர்த்து வாழ்வு சந்தியிலே!

பிறர் செலவிலேயே தங்கள் காரியத்தையும் முடித்துக்கொள்வதும், பிறாது அடுப்புவிறகிலேயே தங்கள் சோற்றைச் சமைத்துக்கொள்வதும், பிறர் ஆக்கின குழம்பில் இரவல் பெற்றுத் தாங்கள் குழம்புவைக்காமலே பொழுதைப் போக்கிவிடுவதும், பிறாது அவசர சங்கதியிலேயே தங்கள் சங்கதியை முடித்துக்கொள்வதும், பிறர் வாடகைக்குப் பேசி ஏறிய வண்டியிலேயே தாங்கள் இலவசமாய் ஏறிச் சென்றுவிடுவதும், தாங்கள் விலைக்கு வாங்காமலே இன்னொருவர் விலைக்கு வாங்கிய புத்தகம் பத்திரிகைகளை இரவலில் பெற்று ருசி பார்த்துவிடுவதுமான சமர்த்துகள் சில ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டு. என்ன சமர்த்து செய்தாலுமென்ன? இவர்களிற்பலர் ஓங்கிவளர்ந்து விருத்தியடையக்காணோம். தரித்திரக்குப்பைகளாகவேதான் கிடக்கின்றனர். பத்து காசுக்குச் செலவில்லாமலே போகிற லாபம் ஒருபக்கத்தில் இந்த சமர்த்தால் ஏற்பட்டாலும், மற்றொரு பக்கம் வீடு இடிந்தோ, சம்பாதிக்கிறவன் கண்மூடியோ, நம்பியிருந்த இடம் நாசப்பட்டுப்போயோ சந்தியில் நிற்க நேர்ந்துவிடுகிறது. இவர்களிடம் ஏமாறின பேதைகளோ வெகு நல்ல வாழ்வில் வாழ்வதும் ஆச்சரியந்தான்.

எஜமானன் தூங்கினால் குமாஸ்தாவும் அந்த சமயம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்கிறார். சம்பளம் தருகிறவனுக்குத் தக்கபடி தலையை ஆட்டு.

நரம்பு தண்டு சுரை என்பன ஒருங்கு சேர்ந்தால் யாவர் மனத்தையும் வசீகரிக்கும் இன்னிசை நிறைந்த யாழ் எனப்படும். அவை ஒற்றுமை கெட்டுத் தனித்தனிப் பிரிந்தால் நரம்பு வேடர்கைக் கண்ணியெனவும், தண்டு விறகெனவும், சுரை பிக்ஷாபாத்திரமெனவும் படும்.

அலக்ஷியத்துக்கு மருந்து



தாங்கள் என்னவோ மஹா பெருமையில் புரள்வதுபோல் காட்டிக் கொள்வது. கோடிக்கணக்கான பொன் குவித்து விட்டதுபோன்ற மமதையில் திமிர் பிடித்து நிற்பது. நல்ல மழைகாலத்திலும் விசிறிக்கொண்டு கர்வம் மிஞ்சுவது. பிறரைச் சிறிதுகூட மதிப்பதில்லை; லக்ஷ்யமே செய்வதில்லை. தங்களைப்போன்ற குடும்பஸ்தனென்ற எண்ணங்கூட இல்லை. பிறருக்குள்ள கௌரவ நிலையைக்கூடக் கருதுவதில்லை. என்னவோ தங்களின் எச்சிலைச்சோற்றுக்குக் கதிகெட்டுக் காத்திருப்பவர்கள்போல நினைத்துவிடுவது. நேற்றுத்தான் உயர்ந்த தங்களின் புதிய வாழ்வின் பவிசியில் மற்றவர்களை மிக்க இழிவாக அவமானப் படுத்திவிடுவது. தங்களை இமயமலை உச்சியில் உயர்த்திக்கொண்டு மற்றவர்களைச் சிறு துரும்பாகத் தாழ்த்துவது. தங்களின் மனைவிமக்களைத் தேவலோகத்திலிருந்து வந்ததுபோல வெகு உயர்வான மதிப்பில்வைத்து, மற்றவர்களைக் குப்பைக் கூட்டுபவர்களாக எண்ணிக் கொக்கரிப்பது. இவ்வளவும் போதாமல் மஹாமேதாவி போலப் பிறருக்குப் புத்திசொல்லவும் வந்துவிடுகிறது. தங்களின் அற்ப கல்வியை மறைத்துக்கொள்வது. இத்தனை ஆரவாரங்களுக்கும் பிறர் அடங்கி நடப்பினே இன்னும் அவர்களிடம் மீறியே மிதிக்கப்போவது! அவர்களின்மேல் குதிரை ஏறுவது!

இன்னோருக்குத் தக்க புத்தி வரும்படி செய்வதற்கு—அவர்கள் காட்டின அலக்ஷியத்துக்குப் பத்து பங்கு அதிகமாக அலக்ஷியம் செய்தும், அவர்களை ஒருபொருட்டாய் எண்ணுதலைச் சுடச்சுட மெதுவாகப் பட்டும் படாமல் காட்டிக்கொண்டும், சாக்கடைக் குப்பைக்குச் சமமாக அவர்களை நினைப்பதாய் உணரவைத்துக்கொண்டும், பதிலுக்குப் பதில் இறுமாப்புக் காண்பித்து நிமிர்ந்துநிற்கத்தொடங்கிவிட்டால், அவர்களும் இந்தப் புது மாதிரியைக் கண்டு திகைத்து, 'மனிதன் மீறிவிட்டான்' என்றும், 'மாயையிலிருந்து விழித்துக்கொண்டான்' என்றும், தாங்கள் செய்த அலக்ஷியத்துக்கு இது பதிலுக்குப் பதில் என்றும் கண்டுகொண்டு, செய்யும் வகை ஏதும் தெரியாமல் செத்த நாயைப்போல் பல்லிளித்துவிட்டுப் பக்குவமாய்ப் பசப்பிப்பேச ஆரம்பித்து, அதுமுதல் அடங்கிவிடுவார்கள். அதற்குப் பிறகு வெகுமரியாதையாகவும், மதிப்புவைத்தும் நடக்க—பேசத் தொடங்கிக்கொள்வார்கள். இதுவே அந்த மமதைபிடித்த கர்விகட்குத் தகுந்த பேதி மருந்து. இந்த மருந்தை அவர்களுக்குக் கொடுப்பதற்குமுன், அவர்களின் தயவு சகாயம் எதுவும் தனக்குத் தேவையில்லையென்ற ஒரு மேலான நிலையைத் தன்னிலே உண்டாக்கிக்கொண்டு, முழுதுமே விலகியபடி இருந்து, அதன்பிறகு இந்த அலக்ஷிய மருந்தைத் தந்தால் வெகு நன்றாகப் பேதியாகும். ஆனால், அவசரப்பட்டோ, ஆத்திரத்துடனே, அடங்காதகோபத்தில் மீறியோ இந்த மருந்தைத் தந்துவிடாமல், நிதானித்துச் சாந்தமாய்ச் சிறுகச் சிறுகக் கொடுத்து அகங்கார மலச்சிக்கல்களை யெல்லாம் பேதிமூலமாக வெளிப்படுத்திவிடவேண்டும்.

பிளாவிடஸ்

(ஞான ஜோதி கண்ட பெரியார் படும் பாடு.)

(முன்பக்கம் 160-லிருந்து.)

பிளாவிடஸ்ஸின் விஷயம் இவ்வாறாக, ரோமன் சக்ரவர்த்தியை இனி கவனிப்போம். அவனோ தன் பகைவர்களால் முற்றுகை செய்யப்பட்டான். இவனது கஷ்ட காலங்களிலெல்லாம் சுத்த வீரனாக விளங்கி வெற்றி தந்துவந்த ஸிம்ஹமாகிய பிளாவிடஸ் இப்போது தன்னருகிலே இல்லாததை நோக்கியும், அவன் காணாமற்போனதற்குப் பிரலாபித்தும், அவனை நினைத்து நினைத்துப் பலநாளும் வருந்தினான்.

ஃ

"பிளாவிடஸ் மட்டும் இப்போது தளகர்த்தனா யிருப்பானேல், இந்த யுத்தத்தை அரைநொடியில் முடித்திடுவான்" என்று கூறித் துக்கமுறுவான். பிறகு அவனைத் தேடுதற்பொருட்டு நாலா திக்குகளிலும் ராணுவ வீரர்களை அனுப்பினான். அவனைத் திரும்பவும் ரோம் நகருக்குக் கொண்டுவந்து சேர்ப்பவர்களுக்குத் திரண்ட வெகுமதி கொடுப்பதாகப் பறை சாற்றுவித்தான்.

ஃ

இவ்வாறு அனுப்பப்பட்ட வீரர்கள் பல்வேறு இடங்களில் சுற்றியலைந்தும் தங்கள் தலைவனைக் காண முடியாமல், முடிவில் இவன் கூலி வேலை செய்துவரும் கிராமத்தை யடைந்தனர். அப்போது பிளாவிடஸ் ஒரு கழனியில் குழிதோண்டிக் கொண்டிருந்தான். இவன் முன்பு வந்துகொண்டிருக்கும் வீரர்களில் முன்பு தன் சைனியத்திலிருந்த ஒரு ராணுவ வீரனைத் தெரிந்துகொண்டான்.

ஃ

இவ்வீரன் இவனை யணுகி "இக்கிராமத்தில் சுற்றுப்பக்கங்களில் எவ்விடமேனும் பிளாவிடஸ் என்ற ஒரு அன்னியன் இருக்கிறானா?" என்று கேட்டான். இதற்கு உத்தரமாக பிளாவிடஸ், இளைப்பாறிச் சிறிது தாக சாந்தி செய்யும்பொருட்டுத் தன் குடிசைக்கு வரும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டு அழைத்துச் சென்றான். அப்பொழுது பிளாவிடஸ் தான் முன்னிருந்த நிலைமையையும், அக்கால் தனக்கு உண்டாயிருந்த ஓங்கிய புகழையும், தான் அனுபவித்திருந்த மகோன்னதமான சுகத்தையும் நினைத்தவனாகக் கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தான். அச்சமயம் வீரர்களில் ஒருவன், "இம்மனிதனுடைய உறுப்புகளும் சாயலும் நமது சேனாதிபதியான பிளாவிடஸ்ஸை அநேகமாய் ஒத்திருக்கின்றன வல்லவா?" என்று தன் தோழனைக் கேட்டான்.

ஃ

ஜனங்களின் உயிராகிய சமூக வாழ்க்கையில் காணப்படும் ஊழல்களை எல்லாம் "மத சம்பந்தமானவை" என்று மழுப்புவது பெரிய மோசடியாகும்.

மற்றவன் மறுமொழி பகர்வதன் முன்னரே இருவரும் சேனாபதி முன்பு ஒருகால் யுத்தமொன்றில் பெற்றுள்ள கத்திவெட்டின் வடுவைக் கண்ணுற்றனராக, உடனே தங்கள் ஆசனங்களினின்றும் எழுந்து அவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டனர்.

"சக்கரவர்த்தி தங்கள் வருகையை அல்லும் பகலும் இடையறாது எதிர்பார்த்தவண்ணமாக இருக்கின்றார். உம்மைக் கண்டுபிடித்தால் உமது அந்தஸ்துக்குத் தக்கவாறு ஆடையாபரணதிகளால் அலங்கரித்து உடனே அழைத்து வரும்படிக் கட்டளையிட்டிருக்கிறார்" என்று அவர்கள் கூறினர்.

கிராமவாசிகளெல்லோரும் வியப்படையுமாறு இவ்வேழைக் கூலியாளான பிளாஸிடஸ் அரசனுக்குரிய அணிகளால் அலங்கரிக்கப்பட்டு சேனா வீரர்கள் தன்னைப் புடைசூழ்ந்துவர ரோமாபுரியை நோக்கிச் சென்றனன். அல்லல் ஒருகாலம்! செல்வம் ஒரு காலம்! அவனியின் வாழ்வு ஒரு விசித்திர மாய்கையே!

நகரை யணுகலும், சக்கரவர்த்தியும் மற்றுமுள்ள குடிபடைகள் அனைவரும் இவனை எதிர்கொண்டழைத்து, நல்வரவு கூறிக் கைகொட்டி ஆரவாரித்து, ஜயபேரிகையும் கொட்டினர். முன்னம் இவனுக்கு உரித்தாயுள்ள பட்டங்களை யெல்லாம் சூட்டினர். சர்வாதிகாரத்துடன் ஸைனியத்திற்குச் சேனாதிபதியு மாயினன். உடனே பிளாஸிடஸ் தன் மனத்தை முற்றும் யுத்த விஷயத்தில் செலுத்தவோனாகித் தேசத்திலுள்ள ஒவ்வொரு வாலிபரையும் ராணுவத்திற் சேரும்படி ஆக்ஞாபித்து ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினான்.

இவ்வாறு சேர்ந்தவர்களில் இரண்டு வாலிபர்களின் பராக்கிரமத்தையும், தைரியத்தையும், வீரச் செயல்களையும், கண்டவர் மனத்தை வசீகரிக்கத்தக்க வனப்பினையும் பிளாஸிடஸ் கண்டு மிகுதியும் ஸந்தோஷமடைந்தவனாய் அவர்களுக்கு ராணுவத்தில் முதன்மையான பதவியைக் கொடுத்தான். இவ்விரு வீரர்கள் தங்கியிருந்த வீட்டின் அதிகாரி ஒரு மாது. அவளோ அந்நிய நாட்டாள், மிக்க அழகு வாய்ந்தவள். ஆனால், வியஸனமான குறிகள் அவள் முகத்தில் தோன்றிக்கொண்டே யிருந்தன. இவ்விரு வாலிபர்களும் ஒருவரையொருவர் முன்பு அறியார்கள். எனெனில், இவ்விருவரும் வெவ்வேறு கிராமங்களினின்றும் வந்தவர்கள். ஆனால், சீக்கிரத்தில் சிநேகிதர்களாகிவிட்டார்கள். இயற்கையின் வலிமையும் அதன் சக்தியும் என்ன லேசானதா? ஒரு நாள் இவர்கள் தங்கள் தங்கள் பூர்வ சரித்திரங்களைப்பற்றிப் பின்வருமாறு ஸம்பாஷித்தனர்:—

இருவரில் மூத்தவன், "என் குழந்தைப் பருவத்தைப்பற்றி எனக்குக் கொஞ்சம் நினைவிருக்கிறது. என் தந்தை மிக்க கீர்த்தி பெற்ற ஒரு சேனாதிபதி. பின் துர்அதிர்ஷ்டத்தால் இடுக்கண்கள் பல நேரிட்டன. நாங்கள் ஒரு பெரிய கப்பலில் பிரயாணம் செய்தோம். அக்கப்பலில் என் தாய் தங்கிவிட்டாள். என் தந்தையும் தம்பியும் நானும் கரையை யடைந்து அநேக மைல்கள் அதிகக் கஷ்டப்பட்டு நடந்தோம். ஒரு ஆற்றங்கரையை அடைந்தோம். என் தம்

பெற்றோர்களின் பலங்கொண்டு சபையேறியவள் விவாகமான பெண்ணாவள். தன் பலம்கொண்டு சபையேறியவளோ விவாகத்துக்கு முன் கற்பழிந்து திருமண பாக்கியத்தை இழந்த தூர்த்தையாவாள்.

பியைக் கரையோரத்தில் விட்டுவிட்டு என்னை என் தந்தை தூக்கிக்கொண்டு அக்கரை சேர்ந்து அவ்விடத்தே என்னை இருக்கும்படி சொல்லித் தம் பியைக் கொண்டுவரத் திரும்பிச் சென்றார். அப்பொழுது ஒரு சிங்கம் அங்கு வந்து என்னைத் தூக்கிக்கொண்டு ஓடிற்று. இதைப் பார்த்த சில இடையர்கள் தங்களின் நாய்களை ஏவிவிட்டு அச் சிங்கத்தினிட மிருந்து என்னை மீட்டு வளர்த்துவந்தார்கள்" என்று சொல்லி, இன்னும் மேலே கூறுவதின் முன் மற்றவன் எழுந்து, "நீ என் உடன் பிறந்தான்; அதில் யாதொரு ஸந்தேகமுமில்லை. நான் அச்சமயம் சிறு குழந்தையாக இருந்தபோதிலும் எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. என்னை வளர்த்துவந்த கூலியாட்கள் என்னைக் கோனுயிடமிருந்து தப்பவைத்துக் காப்பாற்றினதாகவும், அதே சமயத்தில் இன்னுமொரு குழந்தையைச் சிங்கம் தூக்கிச் சென்றதாகவும் பல முறை எனக்குச் சொல்லியிருக்கின்றார்கள்" என்றனன்.

(மறு சஞ்சிகையில் முடிவு.)

வெளி யறிவுடன் ஒரு குடும்ப நிலையைப்பற்றித் தாழ்த்திப் பேசலாம். "அவ்வளவு சம்பாதிக்கிறானே" என்றும் சொல்லலாம். அக் குடும்ப நிலையே தனக்கு வரும்போது உள்ளறிவுடன் குடும்ப நிர்வாகத்தை யறிந்து அடங்க நேர்கிறது. 'முன்பு பேசியது பிசகு' என்றும் தெரிகிறது. வந்த அவ்வளவு பணமும் செலவாய்விடும் விவரத்தை உள்ளறிவு விவரிக்கையில் பழித்துப் பேசிய வாய் மூடிக்கொள்கிறது தானே பட்டால் தெரியும்.

விஷச் சொல்லைச் சுத்தி செய்தல்.

ஒரு சொல்லிலுள்ள விஷத்தை அந்தச் சொல்லை வேறு விஷயத்தில் பிரயோகிக்க மாற்றினால் நீங்கிவிடும். "அடா" என்ற பதத்தைத் தன் குழந்தைக்கும் தம்பிக்கும், "அடி" என்ற பதத்தைத் தன் மனைவிக்கும் மாற்றி உபயோகித்துவிட்டால் அதிலுள்ள விஷத்தன்மை போய்விடுகிறது. இவ்விதமே செயலிலுள்ள விஷத்தன்மையையும் எடுத்துவிட முடிகிறது. தன் மனைவியுடன் ரமித்தலைக் கற்பழித்ததாகச் சொல்லப்படுவதில்லையன்றோ? அவள் அவன் கையைப் பிடித்தானெனில், அவன் தன் கணவனாயின் அங்கு குற்றமேது?

உத்தரவு கேட்கும் நடிப்பு.

நிச்சயார்த்தமான பிறகு மாப்பிள்ளை வீட்டார் திடீரென்று வந்து, "இன்று மிகவும் நல்ல நாள்; மூர்த்திப் பெண்ணை அழைத்துப் போகிறோம்; நீங்கள் மூன்று நாள் பொறுத்து வரலாம். மறுபடியும் உங்களை வந்து அழைக்கிறோம்" என்கிறார்கள் பெண்வீட்டார் சிறிது தூரத்திலிருக்கிற ஒரு முக்கியஸ்தரைக் குறிப்பிட்டு, "அவரை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு வந்துவிடுங்கள்; அவர் 'அனுப்ப முடியாது' என்றாலும் நாங்கள் அனுப்பிவைத்து விடுகிறோம்; பேருக்கு ஒரு வார்த்தை கேட்டு வாருங்கள்" என்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டார் முக்கியஸ்தரிடம் சென்று கேட்க, அவரோ "பெண்ணையும் மற்றவர்களையும் ஏககாலத்தில் அழைத்துப்போகிறதுதானே; இதற்கு ஒருநாள், அதற்கு ஒருநாளா?" என்கிறார். பிறகு எப்படியாவது அனுப்ப வேண்டியதுதானே என்று யோசித்தபடி "உங்கள் பிரியம்போல் அழைத்துப்போகலாம்" என்கிறார். மாப்பிள்ளை வீட்டாரோ "நீங்கள் வந்து சொன்னால்தான் அனுப்புவார்கள். இல்லாவிட்டால் முடியாது என்று விடுவார்கள்" என்பதாய் முக்கியஸ்தரை ஆகாயத்தில் தூக்கிவைத்துப் பசப்பிப் பேசுகிறார்கள்.

ஃ

இதன்பிறகு முக்கியஸ்தர் மாப்பிள்ளை வீட்டாருடன் பெண்வீட்டுக்கு வர, அங்கோ பெண் சிங்காரிக்கப்பட்டு ரயிலுக்குத் தயாராக இருப்பதைப் பார்த்து, தன்னை உத்தரவு கேட்டதெல்லாம் வெறும் நடிப்புச் சங்கதியேயென்றும், தான் அனுப்ப முடியாதென்று சொல்லியிருந்தாலுங்கூடப் பெண்வீட்டார் பெண்ணையனுப்பியேவிடுவார்களென்றும், தான் மறுத்திருந்தால் வீணாக கெட்டபெயர் வாங்கும்படி நேர்ந்திருக்குமென்றும், நல்ல காலமாய்த் தப்பியதென்றும் மனதிற்குள் எண்ணியபடி வெளிக்குச் சிரிப்பு காண்பித்துக்கொண்டு கூடக்குலாவிப் பெண்ணை மாப்பிள்ளை வீட்டாருடன் அனுப்பிவைக்கிறார்.

ஃ

பெண்வீட்டார் இந்த முக்கியஸ்தரை, அவர் அனுப்ப மறுத்தாலும் தாங்கள் அனுப்பிவைப்பதாகச் சொன்ன வார்த்தையை மாப்பிள்ளை வீட்டார் நன்றாக மனதில் வாங்கிக்கொண்டு, அந்த விவாகத்திற்கு வெகு பாடுபட்டு முடிபோட்ட முக்கியஸ்தரிடத்தில் பிறகுமதிப்பு குறைந்து அலக்ஷியமாய் விடுகிறார்கள். உத்தரவு கேட்கும் நடிப்பில் இது ஒரு தினுசு!

ஃ

ஒருவர் வீட்டில் இன்னொருவர் வந்து புகுந்துகொள்வது வெகு வேடிக்கை. வீட்டுக்காரன் எங்கோ ஓரிடத்திற்குப் போயிருக்கிறான். தங்கள் வீட்டில் கடன் ஜப்தி வரப்

பிரஸவம் பெரிய விஷயம்; அதைப் பெண்களே சமாளித்துவிடுகின்றனர்.

போவதால் சாமான்களைக் கொண்டு வந்து வைக்க இடம் தரவேண்டு மென்று வீட்டுக்காரனுக்கு ஒரு கடிதம் எழுதி ஒருவரிடம் கொடுத் தனுப்புகிறார்கள். அவன் அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு "ஆபத் துக்குக் கேட்டுச் செய்யவேண்டிய தில்லை; உங்கள் பிரியம்போல் செய் யத் தடையில்லை" என்று பதில் அனுப்புகிறான். ஆனால், அவனுக்குக் கடிதம் அனுப்புமுன்பே சகலசாமான் களையும் அவ்வீட்டில் நிரப்பியாயிற்று. ஒப்புக்கு—உபசாரத்துக்கே அவ னுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. இதை வீட்டுக்காரன் வீடுவந்தபிறகு அறிகிறான். தன்னை உத்தரவு கேட் டது ஒரு பாசாங்கு நடிப்பு என்றும், தான் இடம் தர மறுத்திருந்தாலும், அவர்கள் வலிய சாமான்களைக் கொண்டுவந்து போட்டிருப்பார்க ளென்றும் அறிந்துகொள்கிறான்.

ஃ

இதுபோன்ற பாசாங்கு நடிப்பு கள், உத்திரவு கேட்கும் நடிப்புகள் இன்னும் எத்தனை எத்தனையோ உண்டு. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்போல், மாதிரி பார்க்க இவ்விரு குறிப்புகளே போதும். இவற்றினின்றும் இதுபோன்ற வற்றை நெடுக யூகித்துக்கொள்க. இவ்விதம் ஒருவர் பாசாங்கும் நடிப்பும் செய்வதில், மற்றவர்கள் உண்மையா னவர்களா யிருந்தபோதிலும் கபடத் திற்குக் கபடமாகவே சிரித்து நடந்து கொண்டு போகும்படி நேர்ந்துவிடுகி றது. கடைசியில் இந்த நடிப்புக்காரர்க ளின் குணங்களே மனதிற்குப் பிடியா மல் புலம்பி ஒதுங்கும்படியும் ஆகிறது.

ஆக்குவதும் பெண்ணே! அழிப்பதும் பெண்ணே!

தயிர் விற்பவளும், தயிரை வாங்குபவளும் இருவரும் பெண்களே. விற்பவள் செட்டுத்தனமாய்க் கொஞ்சமே தந்து பணம் சேர்க்க, வாங்குபவளோ அந்த செட்டுத்தன மின்றி அளவுமீறி வாங்கிக் கடன்படுகிறாள். ஒரு பெண் ணுக்குப் பணம் சேர, மற்றொரு பெண்ணுக்குக் கடன் சேரு கிறது. கணவன் கொண்டுவந்து போடுகிறான், நமக்கென்ன வென்று அழிக்கும் பெண் செட்டுத்தனத்தை யறிவதெங்கே? விவாகத்தில் வாழையிலையைப் பெரியதாய் ஒரு பெண் போடவர, மற்றொரு பெண்ணோ, "இப்படிப் போட்டால் கட்டுமா" என்று சொல்லி இலையை இருபாகியாய்க்கிழித்து 30-இலையை 60-இலையாக்கினாள். 60-இலையாக்கினவளும் பெண்ணே. 30-இலையாகப்போடப்போனவளும்பெண்ணே. பணத்துக்கு வீட்டுக்காரன் படுங்கஷ்டம் தெரியாத டம்பா சாரிப்பெண்கள் குடும்பத்திற்குப் பெரிய சனியன்களே. சிக் கனமற்ற பெண் சீர்படுவதும் அதிகநகையணிவதும் அரிது.



பிரசங்கியாரைப் பழித்தல்.

நற்கருத்துகளமைந்த விஷயங்களைச் சுலபமாகத்தெரிந்து அதன்படி ஒழுகவும், நீதிகள்-ஸத் விஷயங்கள் இவற்றைப் பின்பற்றி நடக்கவும், தீயகுணங்களாகிய புறங்கூறல், வீண்வம்பு பேசுதல், வன்சொல் வழங்குதல், பிறரை இகழ்தல் இவைபோன்றனவற்றை விலக்கவும், மேன்மையான பிரபஞ்ச உண்மையை மனதில் பதியச் செய்யவும் ஸத்பிரசங்கம் நல்ல துணையாகும். தீய எண்ணங்களை அடக்கியாளப் பிரசங்கங்கள் ஓர் வழிகாட்டியெனலாம். பிரசங்கம் கேட்கச் செல்வோர் பிரசங்கியார் போதிக்கும் விஷயங்களைக் கேட்டு அவைகளினால் நன்மை பெற உத்தேசித்து அவ்விடம் ஏகுவதே நன்று. பிரசங்கியாரின் நடக்கை எவ்வாறாயினும் ஆகுக. நமக்குப் பிரஸங்க போதனைகளே பிரதானம். சில தினங்கட்குமுன் நடந்த ஒரு பிரசங்கத்தில் பிர்ஸங்கம் கேட்ட எல்லோரும் எழுந்து வெளியிற் போகும்போது அவர்களிற் சிலர் பிரஸங்கியாரைப் புகழ்வதைவிட்டு —'அந்நிய ஸ்திரீகளைக் காதலிப்பது மகா கொடிது' என்றும், 'பெரும் பாவம்' என்றும் உதாரணங்களோடுபிரசங்கம் செய்த இவர் "ஏகபத்தினி விரதம் உண்மையாகக் கொண்டவரா?" என்றும், மற்றொருவர் "இல்லை; அவர் பல மங்கையர்களை மருவுவதாக வதந்தி" என்றும், பின்னும் ஒருவர் "அப்பரதேசி ஸ்திரீ லோலன்" என்று தனக்குத் தோன்றுகிறதாகவும், அது எவ்விதமெனில், ஷை பிரசங்கியார் பிரசங்கம் செய்யும் போது அடிக்கடி அவர் பார்வை தூரத்தில் உட்கார்ந்திருக்கும் ஸ்திரீகளினிடம் சென்றது" என்றும் பல பலவாறு பேசினர். இவ்வாறு பிரஸங்கியைப் பழித்தலால் பிரசங்கம் கேட்ட பயனைப் பெற இயலுமோ?

அ. கோ. லக்ஷ்மணன்.

பெண்கள்

கூட்டங்கூடி வெகு நேரம் வெகு சிரத்தையாய்ப் பேசுகிறார்கள். என்ன பேச்சுகளோ? பேசுவதற்குத்தான் எங்கிருந்து ஓயாத சங்கதிகள் அகப்படுகின்றனவோ? பெண்களின் ஆரவாரமே எங்கும் பெரிது. சிங்காரிப்பிலும் பெண்கட்குத்தான் அது அழகு தருகிறது. ஆடவர்களின் சிங்காரம் மொஹரம் பண்டிகையின் புலிவேஷம் போல் இருக்கிறது! "பெண்ணுலகுக்கே எல்லா கௌரவமும் சேரும்.



ராஜா :—"உங்கள் பெயரைச் சொன்னால் அவருக்கு வெகு மதிப்பு."

ரோஜா :—"மதிப்பைவிட என் கடமையைச் சரிவரச் செய்தேனு என்பதையே நான் முக்கியமாகக் கவனிப்பது. மதிப்பு—மிதிப்பு இரண்டுக்கும் நான் சிரிப்பதே வழக்கம்"

ஜான் :—"நான் நேற்று வாங்கிய மோட்டாரைக் காட்டுகிறேன் வாரும்!"

ஜோன் :—அதைவிட ஒரு நிலம், வீடு வாங்கியிருந்து காண்பித்தால் நான் மிகவும் ஸந்தோஷப்படுவேன்."

குப்பன் :—"நீ பார்த்துவிட்டுக் குப்பையில் எறிந்த அந்தப்பத்திரிகையை இன்னும் படிக்கவில்லையென்று பொய் சொல்லி அவனிட மிருந்து ஏன் வாங்கினாய்?"

சுப்பன்:—"எனக்கு அது தேவையில்லையானாலும், நான் ஏமாந்தவனென்று மெதுவாக அதை சுருட்டிக் கொண்டு போக நினைத்த அவனது திரெண்ணத்தைத் தெரிந்துதான்."

நீலா :—"இதுவரை கடிதமே போடாதவர் இப்போது தான் ஞாபகம் வந்து எழுதினாக்கும்."

பாலா :—"அல்ல, அல்ல. என்னால் ஆகவேண்டிய வேலை ஏதாவது ஒன்று அவசரமாக இப்பொழுது அவருக்கு ஏற்பட்டிருககலாம்."

நாணு :—"உன் மாற்ருந்தாய் சண்டையிட்டுக்கொண்டு கோபமாய்ப் போய்விட்டாரே—ஏன்?"

வேணு:-"என்னிடம் அவர்களுக்கு ஆகவேண்டிய வேலை தீர்ந்ததும் அப்படித்தான் ஒவ்வொரு தடவையிலும் பிரிகிறது பலநாள் வழக்கம்."

நேசன் :—"உன் தங்கை வந்திருக்கிருளே. நீ பேசவில்லையா?"

வாசன் :—"அவள் என்னை மனஸ்பூர்வமாக அண்ணன் என்று எண்ணியிருந்தால், நானும் தங்கையென்று நினைத்திருப்பேன். இரண்டு மில்லை. உடன்பிறப்புக்கல்லவோ அந்த உருக்கம் வரும். அது இங்கு ஏது?

சீதா :—"அவன் ஏன் அந்த வீட்டையே சுற்றிக்கொண்டுதிரிகிருன்?"

ராதா :—"வீட்டுப் பெண்களை மயக்கிக் கற்பை விழுங்குவதற்காக."

கோபு :—"அவ்விரு பெண்களையும் பார்த்து வெகு பிரியமாய்ப் பேசிச் சிரித்தாயே—ஏண்டா?"

பாபு :—"இருவரும் என்னால் கற்பு குலைந்தவர்கள். ஆனல், அது அவளுக்குத் தெரியாதென்று இவள் எண்ணம்; இவளுக்குத் தெரியாதென்று அவள் எண்ணம். அதை நினைக்கவும் எனக்குச் சிரிப்புவந்தது."

சுந்தரன் :—"காலணு அரையணுவுக்குக் கெஞ்சிக் கேட்டுத் திருப்தியடைந்தவேலைக்காரி இப்போது ஒரு ரூபாய் வேண்டுமென்ருளே ஏன்?"

சந்திரன் :—"நேற்று அவளை முத்தமிட்டுவிட்டேன். அந்த அதிக உறவிலே அவள் கேட்டிருக்கலாம்."

ராமன் :—"சாந்தி முகூர்த்தத்திற்கென்று புஸ்தகம் இரவல் பெற்றுப் போனவன் பிறகு வரவேயில்லையே?"

பீமன் :—"வராவிட்டாலென்ன? அதோடு அவன் சள்ளை தீர்ந்தது. இனி இரவல் கேட்க நெருங்கமாட்டான். ஒருசமயம் என்னைக் கண்டாலும் பதுங்கி மறைவான்."

பழயபெண்-: (நேற்றுச் சாந்தியானவளைப் பார்த்து) "என்ன, ஆச்சா ?"

புதுப் பெண் :—(தலையை யசைத்து நாணி) "உம்."

குட்டை :—"மாப்பிள்ளை 60-வயதானு லென்ன ? ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் அவன்சொத்துதானே!"

நெட்டை :—"அது எப்படியடி பிறக்கும்? எங்கவீட்டுக்காரருக்கு 40-வயதுதானே. நான் தனியாயல்லவோ தூங்குகிறேன். 60-வயதில் அந்தக் கல்யாணம் பெரிய அக்கிரமமடி யம்மா."

வைத்தியர் :—"எல்லா ரகசிய சங்கதிகளும் எனக்கு எட்டிவிடும்."

வக்கீல் :—"எல்லாக் குடும்ப ஊழல்களும் என்னிடம் வந்துவிடும்."

விஸ்வநாதன் :—"அந்தத் தாசி அவ்வளவு மயக்கியும் நீ அவளிடம் சிறிதும் மயங்கவில்லையே ?"

ஜெகநாதன் :—"அவளுக்குத் தருகிற ரூபாயை என் மனைவியையே ஒரு தாசியாக எண்ணிக் கொடுத்தால் அது என் வீடு முழுதக்கும் செலவாகுமே என்று எண்ணிவிட்டேன்."

அவன் :—"இந்த மாம்பழம் புளிக்கிறதே? தெரியாது வாங்கிவிட்டேன்.

இவன் :—"சம்பந்தப்பட்டு அநுபவிக்கும்போது எதுவும் புளிக்கும் தான். தின்னுமல் தூர இருந்தால் எவ்வளவோ இனிக்கும். புளிக்கும் சங்கதியும் வெளியில் வந்திராது.

எத்தன் :—"இத்தனை நாளாகியும் என்னை மறக்கவில்லையே. ரொம்ப சந்தோஷம்."

சித்தன் :—"எப்படியப்பா மறக்க முடியும் நீ செய்த படுமோசத்தை?"

மனைவி :—"நாம் இவ்வீட்டில் வாடகைக்கு இருந்தாலும், இவ்வீட்டார் நம்மீது எவ்வளவோ விஸ்வாசமுள்ளவர்கள்."

புருஷன் :—"ஒருமாத வாடகையை நான் கொடுக்காமல் நிறுத்திவிடுகிறேன். அப்பொழுது இந்த வீட்டாரின் விஸ்வாசம் எவ்வளவிலிருக்கிறதென்று பார். எல்லா விஸ்வாசமும் என் பணப்பை செய்யும் கூத்தல்லவோ!"

ராமு :—"அவள் தன் புருஷன் இறந்தபோது, 'அவனோடு இவ்வளவு வரைக்கும் வாழ்ந்த வாழ்வு போதும்' என்றாளே; இப்போது எப்படியிருக்கிறாள் ?

காமு :—"ஐயோ! அவர் இருந்தால் இப்படி நான் ஏமாறவேணு? என் பெண்ணுக்கு நல்ல இடம் கிடைத்திருக்குமே" என்று அவள் அழுகிறாள்.

அவர் :—"நீங்கள் என் மகள் கல்யாணத்திற்கு ஏன் வரவில்லை? கொஞ்சம் தலைகாட்டிவிட்டு மறைந்து விட்டீர்களே ? அது சரியா ?"

இவர் :—"நீங்கள் அந்த சாவுவீட்டிற்கு வந்து ஒரு நிமிஷம் குந்தித் தலைகாட்டிவிட்டு உங்கள் வீட்டிற்குப் போய்விட்டீர்களே ? நானும் உங்களைப் பார்த்தே அந்த திணுசைக் கற்றுக்கொண்டேன். நீங்கள் செய்தால் சரி, நான் செய்தால் மட்டும் தப்பா ?"

பத்திராதிபர்களுக்குக் கொடுக்கும் பணத்திற்கு அறிஞர் எவரும் கவலைப்படுவதற்கில்லை. (ஸ்ரீ M. P. குருசாமி சர்தார்.)



பந்நா தேவி

(முன் பக்கம் 152-லிருந்து)

இராம்சிங்குக்கோ எல்லையற்ற சந்தோஷம். இச்சமயத்தைப் போல் இனி எச்சமயம் வாய்க்கும்? அவன் உடனே ஓடிவந்து குதிரைக் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு சிறுவனைப் பார்த்து, "நண்பனே! இது பொல்லாக் குதிரை; இவ்வளவு நேரம் நீ இதனை விடாமல் பிடித்திருந்ததே ஆச்சரியம். நல்லது, உன் இஷ்டப்படியே நான் உதவி செய்வேன். நீ அருகில் இராதே; அதோ தெரியும் அப்பாறையிற் குந்தி சிறிது இளைப்பாறு; அதுவரையில் நான் இதனைப் பிடித்துக்கொண்டிருப்பேன்" என்றான். அந்தப் பையனும் 'நல்லது' என்று குதிரையை விட்டுக் கொஞ்சத் தூரத்திலிருந்த பாறையின்மீது உட்கார்ந்து காலை யாட்டிக் கொண்டிருந்தான். இராம்சிங்கு குதிரையைச் சாந்தம் செய்வதுபோல முதுகில் தட்டிக்கொடுத்து சரேலென்று அதன்மேல் ஏறினான்.

பையன் உடனே பாறையினின்றும் குதித்துக் கோவென்று கத்தினான். இராம்சிங்கு தன் குதிகாலால் குதிரையைத் தட்ட, குதிரை அரிகந்த மார்க்கமாய்ப் பறந்தது. இச்சிறுவன் செய்யும் சவாரியைக் காண விழைவான்போல் இருளை நீக்கிச் சந்திரனும் எழுந்தான்.

இந்நிலவு வழியைப் பார்த்துச் செல்ல அனுகூலமாயினும், இவனை எதிரிகள் காணவும் இடம் தந்தது. குதிரைப்படையில் நூறுபேர் அவனைத் தொடரலானார்கள். இராம்சிங்கின் குதிரை ஓடுவதில் ஒப்பற்றதாதலானும், இராம்சிங்கும் இலேசானவன் ஆதலானும், அது அதிக வேகமாய்ச் சென்று சீக்கிரத்தில் மலைச்சாரலைக் கடந்து, கோட்வாருக்கும் அரிகந்தத்திற்கும் மத்தியிலுள்ள மணல் வெளியில் போய்க்கொண்டிருந்தது. கடுங்காற்று வீசுவதுபோலும், கானாறு ஓடுவது போலும்

பெண்கள் தங்களைக் கொண்டவனிடம் தான் போரிடலாம். மற்ற இடத்தில் அது வேகாமல் அடங்கிவிட நேரும். அடக்கியும் விடுவார்கள்.

குதிரைபோகக் கண்டு இராம்சிங்குக்கு உண்டாகிய சந்தோஷமோ அதிகம். அவன் இறுமாப்புடன் திரும்பிப் பார்க்கையில், தன்னைத் தொடர்ந்த குதிரைவீரர் ஒவ்வொருவராய்க் குறைந்து, கடைசியில் இரண்டொருவரே நெடுந்தூரத்தில் தோன்றினார்கள். எதிரில் அறுபது மைலுக்கப்பால் அரிகந்தமலை தோன்றியது. பொழுது போகப் போக, அறுபது மைல் ஐம்பதாகி, பின் நாற்பதாகி, அப்பால் முப்பதாகி, பிறகு இருபதாகி, இப்போது பத்தாயிற்று. குதிரையும் ஓடிவந்த அலுப்பால் மெதுவாக நடக்கலாயிற்று.

சற்றுப் பொறுத்துக் கோழி கூவிற்று. காகங்கள் கரைந்தன. கிழக்கு வெளுத்தது. சூரியன் தோன்றினான். கோட்டைக் கதவும் திறக்கப்பட்டது. இராம்சிங்கு நெருங்கி, காவலாள னொருவனைக்கண்டு தன்னை அரசன்பால் அழைத்துப் போகும்படி சொல்ல, அவன் அப்படியே அரண்மனைக்கு அவனைக் கூட்டிச்சென்றான்.

கொலுமண்டபத்தில் ஓர் கூட்டமும், கூட்டத்தைச் சுற்றி நாய்களுமிருந்தன. அக்கூட்டத்தின் நடுவில் இருவர் வேட்டையாடை தரித்துத் தலையில் சரிகைப்பாகை யணிந்து நின்றார்கள். அவர்களுள் ஒருவன் உமேத்சிங்கென அறிந்து இராம்சிங்கு தன் குதிரையினின்றும் குதித்து மடியிலிருந்த வளையலை எடுத்து அவன் கையிற் கொடுத்துச் சங்கதி முழுமையும் சாற்றினான். உமேத்சிங்கின் உள்ளம் மலர்ந்தது; உடல் பூரித்தது. கை வளையைக் கண்ணில் ஒத்தினான். முத்தமிட்டான். தனக்கும் அவள் தந்தைக்கும் உள்ள பகையை யோராது அவ்விளங்குமரி தன்னை மதித்துத் தன் உதவியை நாடியது தனக்குக் கௌரவம் அன்றோ? தன்னை அவள் கைவளை நண்பனாகக் கருதிக் கைவளையைக் கழற்றி யனுப்பியது தான் செய்த தவப்பேறன்றோ?

நெடுநாளாக அம்மங்கையர்க்கரசி மீது தான் மையல் கொண்டு தன் மனதைச் செலுத்தியதை அம்மனம் அறியுமே! ஓர்நாள் அவள் உப்பரிகையில் ஒய்யாரமாக உலாவ, தம்மிருவர் கண்களும் ஒன்றையொன்று உற்று நோக்கி இன்புற்றதைத் தன் இதயம் உணருமே!

(மற்றவை மற்றதில்)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

முதல் மனைவி யுடனேயே வாழ்ந்தால், தனக்குச் சோர்வும் வயோதிகமும் வருகிற சமயம் அவளுக்கும் அது நேர்ந்து கிழவியாகி சாதாரணமாகிறது. இரண்டாம் மனைவியுடனே வெனில், அவளுக்குப் புது யௌவனமும், தனக்குச் சோர்வுள்ள வயோதிக சமயமுமாகி இருவர் நிலையும் ஒன்றுபடாமல் அதிர்ப்தி ஜனிக்கிறது. இச்சை நிறைவேறாமல் ஏமாறவும், ஏமாற்றவும் வருகிறது. இதில் ஒற்றுமையும் கெடுகிறது.

தலை வணங்காமலும், பிறருக்கு உட்படாமலும், தன் கையும் சொல்லும் நிலையும் மேலாகவே இருக்கும்படிச் சிலருக்குப் பகவான் அமைத்துள்ளார்.

மானிட விக்கிரகம்.

நமது மானுஷீக ஜாதியினது ஜனிப்பின் மாக்ஷிமை என்னே! ஒரு சிசுவானது மாத்ரு கர்ப்பத்தில் இருக்கும்போது அது சுவாசம் விடுவதில்லை. ஆனால், அது பூமியில் ஜனித்தவுடனே ஸ்வாஸிப்பதற்கு வாயுவும், சூட்டைப் பெறுவதற்கு உஷ்ணமும், பார்ப்பதற்குப் பிரகாசமும், ஆகாரத்திற்கு அமுதமும் ஆயத்தமா யிருக்கின்றன. அந்த சிசுவானது ஜனிப்பதற்கு சில நாட்களுக்குமுன் அந்த மாதாவின் மெல்லிய மார்பில் அதிகப் பால் அகப்படாது. ஆனால் அந்த சிசுவானது ஜனித்தவுடனே அதின் ஆகாரத்திற்காக உடனே பாலும் ஊற்றெடுத்துப் பெருகுகின்றன. இது இறைவன் அருளன்றோ.

ஃ

பாலையுண்ணும் அந்தச் சிசுவானது பிறக்கும்போதே இருபது பற்களையுடையதாயிருக்கினும், அப்பற்கள் தாயின் மெல்லிய மார்பகத்தில் படாதபடி (Gum) தந்த (ஜவ்வு) போர்வையால் மூடப்பட்டிருப்பதும் அதிசயமே. சிசுவின் எலும்புகள் (Cartilage of Gristle) மிகவும் நுட்பமான குருத்தெலும்புகள். அவை சிசுவின் தேகத்தைத் தாங்குவதற்கும் திடனற்றவை. பிறகு கிரம போஷணாதிகளால் (The Phosphate of lime) நீபாக்கினி சுண்ணாம்பு முதலிய பிராகிருத பதார்த்தம் விருத்தியாகி (Museles) தசைநாரம்புகளினாலும் திடனைப் பெற்றுக்கொண்டு சுமார் ஒரு வருஷமான பிறகு சிசுவானது நிமிர்ந்து நிற்கவும், தத்தி நடக்கவும் ஆரம்பிக்கின்றது.

ஃ

இவ்விதம் சிசு சரியான பருவத்தைப் பெறுங்காலையில், அதன் சிரசில் இருபத்திரண்டு எலும்புகளும், முண்டத்திற்கு ஐம்பத்திரண்டு எலும்புகளும், கைகளுக்கு அறுபத்துநாலு எலும்புகளும் இருக்கின்றன. அவைகளைப் பந்தப்படுத்த நானூறு தசைநாரம்புகள் பின்னிக்கொண்டிருக்கின்றன. இதனோடுஇடைவிடாமலோடிக் கொண்டிருக்கும் இரத்த நரம்புகளும் இன்னும் பற்பலவிதமான குடல்களும் இருக்கின்றன. சரீரம் முழுதிலுமுள்ள எலும்புகள் பதினான்குபவுன் நிறையுள்ளவை. இருபத்துநான்கு பவுன் நிறையுள்ள இரத்தமும் தசையும் இருப்பதாகவும், நூற்றறுபத்தாறு பவுன் நிறையுள்ள ஜலபாகம் இருப்பதாகவும், இந்த ஜலபாகத்தில் பத்து பவுன் சுண்ணாம்பும், பதினான்கு பவுன் கரியும் இருப்பதாகவும், இத்தப்பதினான்குபவுன் கரிபாகத்தில் (Oxygen) பிராணவாயுவும், (Nitrogen) அமிலவாயுவும், (Hydrogen) ஜலவாயுவும் கலந்திருப்பதாகவும் தோன்றுகிறது. இவ்வளவும் சிசுப் பருவத்திற்கே.

எந்த இடத்திலும் பெண்கள் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டதும் சாதாரணமாய்ப் பேசி வெளியிட்டுக்கொள்ளும் அந்தரங்க மனோபாவங்கள் ஆடவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்ப்படும்போது பேசிக்கொள்ளப்படுவதில்லை.

மானிடரின் தேகஅமைப்பு கேவலம் (Nature) சுபாவமெனில் அது மௌடீகமேயாம். ஏனெனில் மூக்கு இருக்கவேண்டிய இடத்தில் காதும், காது இருக்கவேண்டிய இடத்தில் கண்ணும், கை யிருக்கவேண்டிய இடத்தில் காலும் இருக்குமேயாகில் யாது பிரயோஜனம்?

ஃ

ஒரு பதார்த்தத்தின் பெருமையை காதினுடைய சகாயத்தால் மனது விரும்ப, அப்பதார்த்தத்தைக் கால்களினால் நடந்துபோய்க் கைகளால் கொள்ளவும், அது கூர்மையோ, முறடோவென்பதை ஸ்பரிச நரம்புகள் அறிவிக்கவும், அதுவெண்மையோகருமையோவென்ற வருணபேதத்தைக் கண்கள் காட்டவும், அது சுகந்தமுள்ளதோ துர்க்கந்தமுள்ளதோவென்று மூக்கு முகரவும், அதை வாயில்வைக்க அதை விழாதபடி உதடுகள் தடுக்கவும், அப்பதார்த்தம் கடினமானதாகில் முன்வாயிலுள்ள கூர்மையான பற்கள் அதைக் கண்டதுண்டமாக்கவும், அப்படித் துண்டுகளாக்கப்பட்டவைகளை அகலமாகிய அடிவாய்ப் பற்கள் மாவைப்போல மென்றுகொடுக்கவும், அப்படி மென்றதினால் உண்டாகும் இரசத்தை உப்போ, புளிப்போ, காரமோ, இனிப்போ வென்ற சுவைகள் நாக்கின் சகாயத்தினால் மூளைக்கு எட்ட அதில் மனதும் ஆநந்தமடைகின்றது.

ஃ

பிறகு அந்தப் பதார்த்தமானது அன்னவாகி வழியாய்க் கீழுக்கு இறங்கி, தீனிப்பையிற்போய்விழுகின்றது. இவ்விதமாகவே புசித்த அன்னபானாதிகள் தீனிப்பையில் போய்ச்சேர, அந்தத் தீனிப்பையானது அதைப் பிசைந்து மெதுவாக மசியும்படி செய்கின்றது. அப்போது தீனிப்பையில் ஜனிக்கும் (Gastric Juice) ஜடாராக்கினி யென்னும் ரஸமானது மேற்படி பதார்த்தங்களுடன் கலந்து (Chyme) அன்னப்பாகாகின்றது. அந்த அன்னப்பாகு சிறுகுடலில் இறங்க, அப்போது கல்லீரலில் பிறக்கும் (Bile) பித்தநீர் வந்துசேர, அன்னப்பாகில் இருக்கும் இரத்தம் வேறாகவும், திப்பி வேறாகவும் பிரிந்துவிடுகின்றது. அன்னரசத்தைச் சிறுகுடலிலிருக்கிற நரம்புகள் கிரகித்துக்கொண்டு, இடதுபக்கம் புஜநாளத்திற் கொண்டுபோய் சேர்க்கும். அந்த அன்னரசம் நுரையீரலுக்குப் போய் இரத்தமாகி தேகத்தைப் போஷிக்கின்றது. உதவாத திப்பியோ மலரூபமாகி வெளிப்பட்டுவிடுகின்றது! அன்னபானாதிகளால் தேகத்தில் கரைகிற ரத்தம் மறுபடியும் பூரணமாகின்றது. ஓ! இதென்ன விந்தையான நியமனம்!! என்ன ஆச்சரியமான அமைப்பு!!! எல்லாம் சுபாவம் (Nature) என்கிற கேவலமான வார்த்தை சரியோ? அந்த சுபாவமானது இப்படி எந்தெந்த உறுப்புகள் எங்கெங்கிருந்து எந்தெந்தத் தொழிலைச் செய்யவேண்டுமோ, அதை அந்தந்தவிதமாகச் செய்விக்க சக்தியுடையதாகுமோ? மானிட விக்கிரகத்தைக்கொண்டே அதைப்படைத்த ஆதிநாதனின் சோதி சொரூபத்தையும், அவரது அரிய செயல்களையும் சிந்தித்து அறியக்கடவோம்.

பழய நண்பன் என்று நினைத்துக் கடிதம் எழுதுகிறார்கள். அவன் தன் புதுவாழ்வில் தன்னை லக்ஷியம் செய்யவில்லையென்று கண்டதும், மசானத்தில் சேர்ப்பித்து மறந்துபோன எத்தனையோ நண்பர்களில் அவனையும் ஒருவனுய் எண்ணி அவ்வளவுடன் தலைமுழுகித் தொலைத்து ஒதுங்கிவிடுகிறார்கள்.

பத்திரிகை ஆராய்ச்சி

I

ஒருவனின் மனைவி இறந்துவிட்டாள். பல தினங்கள் விடாக்கவலையோடு துக்கங் கொண்டாடிக்கொண்டிருந்தான். இதைக் கவனித்த உறவினர், அயலார் முதலியோர் இவனுக்கு பொறுதி கூறினார்கள். அதாவது :—இவ்விதமான ஆபத்து நேரங்களில் பொறுமை கொள்வது மனிதக் கடமையாயிருக்கிறது. உதாரணமாக: நான்கு ஐந்து மாதங்களுக்கு முன் உனது தாயார் இறந்துவிட்டதற்காக நீ சகித்துக்கொள்ளவில்லையா? அதன் பின் நாற்பது தினங்களுள் உனது சகோதரி இறந்துவிட்டதற்காக நீ சகித்துக்கொள்ள வில்லையா? தாயும் சகோதரியும்கிடைக்கக்கூடியவர்களா? அவ்விதமிருக்க மனைவி இறந்துவிட்டதற்காக மாத்திரம் ஏன் இவ்வளவு கவலைப்படவேண்டும்? இவளைவிடச் சிறந்த இன்னொரு மனைவியைத் தேடிக்கொள்ளலாமே? என உபசாரம் கூறினார்கள்.

அவன்:—விஷயம் அப்படியல்ல, என்து தயார் இறந்துவிட்டபோது அபிமானமுள்ள பல பெண்கள் என்னிடம் வந்து நீ விசனப்படாதே; இறைவன் கட்டளைப்படி உனது ஒரு தாய் இறந்துவிட்டாலும் அதற்கு பதிலாக நாங்கள் பல தாய்மார்களிருக்கிறோம் என உபசாரம் கூறினார்கள். அதேபோல் எனது சகோதரி இறந்துவிட்டபோதும் அவ்விதமே பலர் என்னிடம் வந்து உன் ஒரு சகோதரிக்கு நாங்கள் பல சகோதரிகளிருக்கிறோம்; இறைவன் கட்டளைக்குப் பொறுமை செய், விசனப்படாதே என உபசாரம் கூறினார்கள்; இப்போது எனது மனைவி இறந்துவிட்டபின் எவராவது என்னிடம் வந்து உனது ஒரு மனைவிக்குப் பதில் நாங்கள் பல மனைவிகளிருக்கிறோமென ஒரு வார்த்தையாவது கூற யாரும் முன்வரவில்லையே என்றதை யோசித்துத்தான் கவலையடைகிறேனென்றான்!

"காலர்சந்திரன்."

["இவளைவிடச் சிறந்த மனைவி இன்னொருத்தி கிடைக்கிறாள்" என்று தேற்றுவது உலக அநுபவம் அறியாதார்மொழியும் வெற்றுரையுமாகும். எத்தகையவள் கிடைப்பினும் குணத்தில் முன்னவளை ஒத்தவளாகக் கிடைப்பது அருமையென்பது இரண்டாவது விவாகம் செய்துகொண்டவர்களிற் பெரும்பாலாரது அபிப்பிராயம். முன்னவளது குணநலன்களும் அன்பும் ஆதரவும் தலைமையும் முன்னவளோடு முடிந்தது முடிந்ததுதான். இனிவரும் பின்னவளால் தொடங்கும் புதிய வாழ்க்கை—புதிய குதிரையும் புதிய சட்டியும் போலவே புதுமையாய்ப் புதுவிதமாகி முன்னதற்கு மாறாகவேதான் பெரும்பான்மையும் இருக்கும். இதனை யோராது, அவள் போனாலென்ன இன்னொருத்தி வருகிறாள் என்பது தமது சொந்தத்தில் பட்டுத் தெரியாத பாமரர்தம் கூற்றேயாகும்.

—ப-ர். "அமிர்த குணபோதினி."]

கக்கூஸும் ஒரு சாந்திமுகூர்த்த அறைபோல் மனிதர் உட்சென்றதும் கதவு மூடப்படுகிறது! ஆனால் இங்கே மல்லிகைக்குப் பதிலாக * * *

II
அனுபவ கைத்தொழில் முறைகள்

இனிப்பான பால் பொடி

½ டிராம் அதாவது ஒரு அவுன்ஸில் 16-ல் ஒரு பங்கு சோடியம் கார்ப னேட் (Soduim Carbonate)டை ஒரு அவுன்ஸ் சுத்தத் தண்ணீரிலிட்டுக் கரைத்துக்கொண்டு, ஒரு ராத்தல் (பவுண்டு) சர்க்கரை (சீனி) கலந்த ஒரு சிசா (போத்தல்) அதாவது 24-அவுன்ஸ் பாலுடன் மேற்படி சோடியம் கார்பனேட் கலந்த தண்ணீரையும் சேர்த்துக் கலக்கி அடுப் பேற்றிக் காய்ச்சினால் பால் மெழுகு போல் கெட்டிப்படும். அப்படிக் கெட் டியான பாற்கட்டியை வேறு ஒரு சற்றுப் பரந்த தட்டிலிட்டு (சீனிச் சட்டியும் நல்லதே) சிறு தீயில் வைத்து அடிப்பிடியாமல் கலக்கிவா அப்பாற்கட்டி பின்னும் கெட்டிப் பட்டு மாவுபோல் தூளாகிவிடும். அந் தப் பொடியை ஈரமில்லாத சிசாக் களில் நிறைத்து மூடியில்லாததும், ஈரப் பசை யில்லாததுமாகிய குளிர்ந்த இடத்தில் வைத்திருந்தால் வெகுநாள் கெடாது. தூரப் பிரயாணங்களிலும் தாய்ப்பாலற்ற குழந்தைகளுக்கும் இது மெத்த உதவியாயிருக்கும். தேவையானபோது வெந்நீரில் தேவைபோல் இட்டால் சுத்தமான புதுப்பாலைப்போ லிருக்கும். நல்ல ஜீரணத்தையும் தரும். மேல்நாட்டி லிருந்து சிசாக் (போத்தல்) களில் நிறைத்து * * * * *
* * * * * * *
* * பல பெயருடன் வந்து விற் கும் பால் பொடிகளெல்லாம் ஏறத் தாழ இது போன்றதேயாம்.

இங்கு வந்து விற்கும் மேல்நாட் டுச் சரக்கிற்கு இது எவ்வாற்றானும் தாழ்ந்ததல்ல. அவைகளின் பெருமை போத்தலழகு, லேபில் அழகு, மூடி யழகு, மேற் சுற்றுக்காகித அழகி லேயே யிருக்கிறதென்பதை மறந்து விடலாகாது. "இந்திய மித்திரன்"

அமிர்த குணபோதினி சந்தா நேயர்களுக்கு.

இனாம் ! இனாம் !! இனாம் !!!

இந்த ஐந்தாம் ஆண்டில் நமது 'அமிர்த குண போதினி'ப் பத்திரிகைக்கு, வருகிற செப்டம்பர்மாதம் 15-ந் தேதிக்குள் எட்டு புதிய சந்தாநேயர்களைச் சேர்த்து விலா சத்துடன் சந்தாபணம் பூராவும் எமக்கு அனுப்பும் சந்தா தாரர்களுக்குமட்டும், 60-நாளையில் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடிய எமது லேடி டிரேட் மார்க் 'ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி' என்னும் புத்தகம் ஒன்றைத் தபால்செலவுடன் இனாமாக அனுப்பப்படும்.

குறிப்பு :—இவ்வருடத்திய சந்தா நெம்பரையும் அவசி யம் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

மானேஜர்.

பழய கடிதங்கள்

(ஒரு ஆசிரியர் மற்றொரு ஆசிரியருக்கு எழுதியது.)

நண்பர்களா யிருக்கப்பட்டவர்கள் தாட்சண்ய மின்றிக் கண்டிக்க வேண்டிய திருக்க, அக்கடமையை நான் செய்யாமற் போனதின் நிமித்தம் தங்களுக்குத் திரும்பவும் காய்ச்சல் வந்தது. ஆகையால் தங்களுக்குக் காய்ச்சல்திரும்பியதற்குக் காரணகர்த்தா நானென்றே சொல்லவேண்டும். தாங்கள் அமோகமாய் அளவுக்கும் சக்திக்கும் மீறிய வேலை செய்வதால் தங்கள் மனோபலம் குறைவடைந்து ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய திடசக்தி தங்களிடம் வரவரக் குறைந்து வருகிறதென்று சொல்ல வருந்துகிறேன்.

தேகம் இந்த நிலையில் இருக்கும்போது நாடகம் பார்க்கப் போகவேண்டுமென்பது என்ன? சிலதினங்கள் பொறுத்துப் போகலாமென்று எண்ணாமல், பிள்ளைகளின் பாசத்தால் உடனே புறப்பட்டீர்கள். தயவுசெய்து பிள்ளைகள்—சம்சாரம்—தாங்கள் யார் என்றும், என்ன தொந்தம் இருக்கிறதென்றும், எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா? இரவு படுத்துக்கொண்டபின் இப்பிள்ளைகள்—பெண்ஜாதி—இல்லம் முதலியவற்றை யார் வசம் ஒப்புவிக்கிறீர்கள்? கண்மூடியதும் நூதன சஞ்சாரம் செய்யச் செல்லுகிறீர்களே! அது ஒரு இரவின் கனவானால், நாம் மெய்யாக மதித்து நடக்கும் உடம்பு—பிள்ளைகள்—சம்சாரம் முதலியன பல வருஷக் கனவே. நமது உண்மையான இடம் வேறு இருக்கிறது. இதைச் சிந்தித்துப்பெண்டீர், மக்கள், சொத்துக்கள் பேரில் அளவுகடந்த ஆசாபாசம் வைக்காமல் ஸ்ரீமந் நாராயணனைத் தியானம் செய்துகொண்டு நமது கடமையைச் செய்து வரவேண்டுமென்பது எனது கொள்கை. ஏதோ எல்லாம் துறந்த ஞானியைப்போல் அதிகப் பிரசங்கம் செய்து எழுதியதாகத் தாங்கள் நினைக்கலாம்; அவ்வாறல்ல.

கூடியவரையில் நான் அவ்வித எண்ணத்தோடுதான் இருக்கப்பட்டவன். அதனால்தான் பெண்ஜாதி பிள்ளைகள் முதலியோர் இறந்தகாலையிலும் கண்ணீர் விடாமலும், மனம் கலங்காமலும் இருக்கின்றேன். தாங்களும் அவ்வாறு மனோதிடங் கொண்டும், சம்சாரம் பிள்ளைகளிடம் அளவுக்கு மிஞ்சிய ஆசை வைக்காமலும் இருக்கவேண்டுமென்றும், எல்லாம் அவன் செயலென்று பூர்ணமாய் நம்பி நடக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எப்படிப் புளியம் பழமும் அதன் தோலும் ஒன்றாயிருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் ஒட்டியும் ஒட்டாமலு மிருக்கிறதோ அதைப்போலும், தாமரை யிலையின்மேல் நிற்கும் தண்ணீர் இலையின்மேல் நின்றாலும் உண்மையில் ஒட்டாமல் நிற்கிறதோ அதைப்போலும் இருக்கவேண்டும். வாஸாகைங்கர்யம் செய்வதில் உபயோக மில்லை. உண்மையில் மனதை அவ்வாறு அடக்கி ஆளல் அவசியம். அதுவே உண்மையான ஆசிரியர்களின் குணம்.

R.

20-வினாக்கள்.

(1) நாம் முன்னிலும் அதிகமாக ஸத்தியஸந்தர்களாகி யிருக்கிறோமா? (2) நாம் முன்னிலும் அதிகமாக சுசியுடையவர்களாக விருக்கிறோமா? (3) முன்னிலும் நாம் நமது காம சேஷ்டைகளைக் குறைத்துக்கொண்டிருக்கிறோமா? (4) முன்னிலும் அதிகமாக ஜீவகாருண்ய உணர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோமா? (5) சாமான்ய ஜனங்களைக் காட்டிலும் நாம் தைரியசாலிகளாக இருக்கிறோமா? (6) வயல்களில் தங்களுடைய கணவர்களால் எவ்வித உபத்திரவமின்றியும், பயமின்றியும் வேலை செய்யும் சாமான்யர்களின் மனைவிகளைவிட படித்தவர்களின் மனைவிகள் மேலானவர்களாகவும் ஆரோக்கியவதிகளாகவும் இருக்கிறார்களா? (7) மனித சமூகத்தின் சன்மார்க்கத் தன்மையை அளவெடுத்துக் காட்டுவதற்கு அடையாளமாக இருக்கும் துன்மார்க்க வியாதிகளால் சாமான்ய ஜனங்களைவிட நாம் பாதிக்கப்படாம லிருக்கிறோமா? (8) அவர்களைவிட நாம் குறைவாகச் சுயலாபத்தில் திருஷ்டியுடையவர்களா யிருக்கிறோமா? (9) அன்னிய ஸ்திரீகளை உத்தம திருஷ்டியுடன் நோக்கும் தூய பார்வை நம்மில் எத்தனைபேருக்கு இருக்கிறது? (10) கடைக்காரன் தவறி அதிகமாகச் சில்லரைகொடுத்துவிட்டால் உடனே திருப்பிக் கொடுக்கக்கூடிய யதார்த்த சிந்தை நம்மில் எத்தனைபேருக்கிருக்கிறது? (11) வாங்கின கடனை ஏமாற்றுதிருப்பவர்கள் நம்மில் எத்தனை பேர்? (12) இரவல் வழியில் பிறாது புஸ்தகங்களையோ மற்ற எதையோ கொண்டுபோய் விடாத கபட நெஞ்சமற்ற உத்தமசீலர்கள் நம்மில் எவ்வளவுபேர் இருக்கிறார்கள்? (13) நமது வீட்டுச் செலவுகளை நாம் குறைத்துக்கொண்டு வாழ்கிறோமா? (14) அனுவசிய செலவுகளை நாம் தள்ளிவிட்டு வாழ்க்கையை நடத்த சக்தி பெற்றிருக்கிறோமா? (15) தினமும் ஒரு மிச்சம் பிடித்துச் சேர்ப்பதென்கிற குணத்தை நம்மில் எத்தனைபேர் கொண்டிருக்கிறார்கள்? (16) படிப்புடன் கைத்தொழிலையும் கற்பித்துப் பிற்காலத்தில் ஜீவன விசாரமற்றுச் சுகமாய்வாழும்படித் தம் மக்களை இருவகையிலும் பயிற்றுவிக்கும் பெற்றோர்கள் எத்தனை பேர்? (17) ஏழைகளுக்கும் அங்கஹீனர்களுக்கும் நாம் என்ன செய்கிறோம்? (18) நமது டாம்பீகங்களில் எதை அவர்களுடைய நன்மையை உத்தேசித்து நிறுத்தி வைத்துக்கொண்டிருக்கிறோம்? (19) நாம் பிறருக்கு எவ்வளவுதூரம் உபகாரிகளாக இருக்கிறோம்? (20) மற்ற சொத்துக்களுடன் அறிவு விருத்திக்காக வீட்டில் புஸ்தக பொக்கிஷங்களையும் சேர்த்து வைத்திருப்போர் நம்மில் எத்தனை பேர்? இந்த 20-கேள்விகளுக்கும் விடைதர எத்தனைபேர் தயாராகஇருக்கிறார்கள்?

புறப்பட்ட இடத்திலேயே ஜட்காவண்டி ஏறக்கூடியதாய் வீடுவரையில் கொண்டுபோய்ச் சேர்க்குமென்று இரண்டணா கொடுத்து ஏற, அதில் முக்கால் மணிநேரம் அவஸ்தைப்பட வருகிறது. வெகுதூரம் நடந்து ரயில் ஏறி இறங்கிப் பிறகும் வெகுதூரம் நடக்கவேண்டியிருந்தாலும் ரயில் செலவு முக்காலணாவிலும், வண்டியில் குந்திய சிரமம் 10-நிமிஷமாயுமுளது. "இதில் எது சுகம்?" சுகமோ, கஷ்டமோ அது சமயம்போல் சொல்லும்—தோன்றும் வார்த்தை.

" அமிர்த குணபோதினி "

பிரமோதூத வருஷத்திய ஆடி மாத பஞ்சாங்கம்

யோகம்	ஆங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
				[ஸபர்மீ 19௳
அ-சி	16	1	பு	பஞ் 17-42, பூட் 32-48, சூன்யதிதி அஹஸ் 31-45,
சி	17	2	வி	ஷஷ் 22-41, உட் 38-58, சூன்யதிதி கரிநாள், ஷஷ்டி அசுபம். [அசுபம்.
அ	18	3	வெ	ஸப் 26-23, ரே 43-48, ஸப்தமிதிதி. ரேவதி—அஷ்டமி
சி	19	4	ச	அஷ் 28-32, அசு 46-57, நவமி அசுபம், ருத்திர ஸாவர்ணிக மன்வாதி.
பி-சி	20	5	ஞா	நவ 28-36, பர 48-6, அஹஸ் 31-40. [திகை, தசமிதிதி.
ம-அ	21	கடகமீ (5—23) 6	தி	தச 26-30. கிரு 47-13, திருத்தணி தெப்பம், ஆடி கிருத்
அ-சி	22	7	செ	ஏகா 22-21, ரோ 44-19, திதிதுவயம்.
சி	23	8	பு	துவா 16-5, மிரு 39-41, திரயோதசி திதி, ஸிம்மாயனம்
ம-அ	24	9	வி	திர 8-42, ஆரு 33-40, சிவராத்திரி [35-42, பிரதோஷம்
சி	25	10	வெ	சசி 0-1, உப ● 50-37, புந 26-35, அஹஸ் 31-35, கரிநாள், சேது ஸ்நானம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கருடன்.
சி-ம	26	11	ச	பிர 40-58. பூச 19-1, ஸ்ராவண சுத்தம், திருவையார்
சி-ம	27	12	ஞா	துவி 31-27, ஆயி 11-31, துவிதியாதிதி. [அப்பர் காக்ஷி.
ம-சி	28	13	தி	திரி 22-38, மக 4-33, உப 53-56, திதிதுவயம், ஆடிப்பூரம், திருச்செந்தூர் வள்ளித் திருமணம், ரப்யூலவல்மீ 1௳
அ-சி	29	14	செ	சது 14-57, உத் 53-4, பஞ்சமிதிதி, கருட-நாக-பஞ்சமி.
ம-சி	30	15	பு	பஞ் 8-38, ஹஸ் 50-27, அஹஸ் 31-29.
சி-அ	31	16	வி	ஷஷ் 3-57, சித் 48-59, சூரியஷஷ்டி, ஷஷ்டி அசுபம்.
சி	1	17	வெ	ஸப் 0-59, உப 58-48, ஸ்வா 49-17, அஷ்டமி அசுபம், சுந்தரமூர்த்தி, திருக்கச்சியூர் ரிஷபவாஹனம்.
சி	2	18	ச	நவ 60-0, விசா 51-17, 18-ம் பெருக்கு, நவமி அசுபம்.
ம	3	•19	ஞா	நவ 0-19, அநு 54-47.
சி	4	20	தி	தச 2-21, கேட் 59-32, அஹஸ் 31-23, கரிநாள்.
அ	5	21	செ	ஏகா 5-37, மூல 60-0, காளஹஸ்தி கருடசேர்வை.
ம	1930௵ ஆகஸ்டுமீ 6	22	பு	துவா 9-53, மூல 5-12, பட்டணத்தார். [ரதம்.
சி	7	23	வி	திர 14-51, பூரா 11-39, ஸ்ரீ வராஹஜயந்தி, காளஹஸ்தி
சி-ம	8	24	வெ	சசி 20-19, உரா 18-34, அதிதி, வரலக்ஷ்மி விரதம், ஆளவந்தார். [உபாகர்மம், கஜேந்திரமோக்ஷம், விகநஸாசார்.
சி	9	25	ச	○ 26-10, ஸ்ரவ 25-50, அஹஸ் 31-17, ருக்-யஜுர்-
ம-சி	10	26	ஞா	பிர 32-13, அவி 33-14 காயத்ரீ ஜபம்.
சி	11	27	தி	துவி 38-13, சத 40-37.
ம-அ	12	28	செ	திரி 43-54 பூட் 47-43.
சி-உ	13	29	பு	சது 49-1, உட் 54-15.
சி-அ	14	30	வி	பஞ் 53-13, ரே 59-50, அஹஸ் 31·9, பஞ்சமி திதி.
அ	15	31	வெ	ஷஷ் 56-5. அசு 60-0, ஷஷ்டீதிதி, ஆடி பண்டகை.

	ரா	செ	கு
	15௳க்கு ராசி.		சூ
			ப.சு
ச		கே	

" அமிர்த குணபோதினி " பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.